
விமல் குழந்தைவேல் (லண்டன்)



# அவளுக்குள் ஒருத்தி

# அவளுக்குள் ஒருத்தி

ஆசிரியர் :

**விமல் குழந்தைவேல்**

(லண்டன்)


## மணிமேகலைப் பிரசுரம்

தபால் பெட்டி எண் : 1447
4, தணிகாசலம் சாலை,
தியாகராய நகர்,
சென்னை - 600 017.
தொலைபேசி : 4342926
தொலைநகல் : 044-4346082

மின் அஞ்சல் : e-mail : tambhi @ md2.vsnl.net.in (MANIMEKALAI)

## நூல் விபரம்


| | |
|---|---|
| நூல் தலைப்பு | அவளுக்குள் ஒருத்தி |
| ஆசிரியர் | விமல் குழந்தைவேல் |
| மொழி | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | 1999 |
| பதிப்பு விபரம் | முதல் பதிப்பு |
| உரிமை | ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | 11.2 கி.கி. |
| நூலின் அளவு | கிரௌன் சைஸ் (12½ x 18½ செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு | 10 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | IV + 124 = 128 |
| நூலின் விலை | ரூ. 24.00 |
| அட்டைப்பட ஓவியம் | திரு. ராமு |
| லேசர் வடிவமைப்பு | கிறிஸ்ட் டி.டி.பி. சென்டர், சென்னை - 24. |
| அச்சிட்டோர் | எம். கே. எண்டர்பிரைசஸ், சென்னை - 5. |
| நூல் கட்டுமானம் | தையல் |
| வெளியிட்டோர் | மணிமேகலைப் பிரசுரம், சென்னை - 17. |

# பொருளடக்கம்


| வ. எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1. | அவளுக்குள் ஒருத்தி | 9 |
| 2. | காதலும் களமும் | 18 |
| 3. | குருதி சங்கமம் | 35 |
| 4. | நறுவிழியாள் | 42 |
| 5. | யாரிடம் தவறில்லை | 49 |
| 6. | புத்திர சோகம் | 55 |
| 7. | ஏமாற்றங்கள் | 62 |
| 8. | அவள் ஒரு செந்தாமரை | 72 |
| 9. | தியாகங்கள் பலவிதம் | 81 |
| 10. | மந்திரவாதி | 94 |
| 11. | ராணியும் அவளும் | 102 |
| 12. | விடியலை நோக்கி | 113 |

# அர்ப்பணம்

1985-ம் ஆண்டு முதல் 1987-ம் ஆண்டுவரை
ஈழத்தின் எல்லா மூலைகளிலிருந்தும்
கொண்டுவந்து அரசியல் கைதிகளாக என்னோடு
சிறையில் இருந்து அல்லலுற்ற அந்த
நண்பர்களுக்கும் அவர்களில் உயிர்துறந்த
முகம் மறைந்த நண்பர்களுக்கும்
இந்நூல் அர்ப்பணம்.



# என்னுரை

இது எனது இரண்டாவது சிறுகதை தொகுதி. முன்னய தொகுதியில் இடம்பெறாத, நான் சொல்லாத, அதிலிருந்து முற்றிலும் வேறுபட்ட சிறுகதைகளால் இச்சிறுகதை தொகுதியை தொகுத்திருக்கிறேன்.

ஒவ்வொருவர் வாழ்விலும் அவர்களின் வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவங்கள் சில மனதின் அடியில் புதைந்துகிடக்கும். அந்தவகையில் என்றும் என் மனதில் நிறைந்து கிடப்பதெல்லாம் நான் வாழ்ந்த என் ஊர். அந்த ஊரை என்னால் என்றும் மறக்க முடியாது. அதனால்தான் இச்சிறுகதை தொகுதியில் இடம்பெற்ற பல கதைகளின் சம்பவங்கள் அந்த ஊரைச்சுற்றியே வலம் வந்திருக்கின்றன.

சிலருக்கு தங்கள் வாலிப காலத்து காதல் நிகழ்வுகளும், மாணவப் பருவத்து விடலை விளையாட்டுக்களும் நினைவில் நின்று ஊஞ்சலாடுவதுபோல என்றுமே என் நினைவில் நிற்பது என் ஊரின் மத்தியில் தெருவோரம் நிற்கும் நறுவழி மரம்தான். எனது இப்போதைய ஒவ்வொரு சிறுகதைக்கும் தேவையான கருவை நான் பெற்றுக் கொண்டது அந்த நறுவழி மரத்தடியில்தான். அன்று நான் பெற்ற கருவைத்தான் இன்று கதைகளாக பிரசவிக்கிறேன். அந்த நன்றிக் கடனுக்காகத்தான் இத்தொகுதியில் இடம்பெற்ற ஓர் கதைக்கு நறுவிழியாள் என்று பெயரிட்டிருக்கிறேன்.

இத்தொகுதியில் இடம்பெற்றிருக்கும் மந்திரவாதி, குருதி சங்கமம் போன்ற சில கதைகள் கிணற்றில் தெரியும் பிம்பம்போல என் மனதில் தெரிந்த சில நினைவுகளை தொகுத்து எழுதப்பட்டது. இந்நூலில் இடம் பெற்றிருக்கும் கதைகள் படிப்பினை ஊட்டத்தக்கதென்றோ, முற்போக்கு சிந்தனை கொண்டதென்றோ மற்றவர்கள் சொல்ல வேண்டும் என்ற நோக்கத்துக்காக எழுதப்பட்டவையல்ல. ஒரு சாதாரண பாமரனின் இரண்டாவது படைப்பு மட்டும்தான் இது.

கல்யாணக்காட்சி மட்டுமல்ல, கருமாதி ஒப்பாரிக்குக்கூட சுதந்திரம் இல்லாமல் போன நம்நாட்டில் காதல் கதைகள்கூட காகிதக் கதைகளாக மாறிவிட்ட வேளையில் முப்பது வருடங்களுக்கு முன்பு ஓர் ஊரும், அந்த ஊர் மக்களும், அந்த ஊரின் அயல் ஊர் மக்களும் எப்படி இருந்தார்கள் என்பது இப்போதய சமூகத்துக்கு புதினம்தான். பதினைந்து வருடங்களுக்கு முன்பு இரவு நேரம் இரண்டாம் காட்சி படம் பார்த்துவிட்டு விடியும்வரை அம்மன் கோயில் வாசலில் கதைத்திருந்தோம் என்பதை ஆச்சரியமாக கேட்கும் இப்போதய இளைஞர்களுக்கு முப்பது வருடங்களுக்கு முன்பு ஒரு ஊரும் இரு சமூகமும் எப்படி இருந்தது என்ற தகவல் நிச்சயமாக ஆச்சரியமாகத்தான் இருக்கும். அதைத்தான் இந்நூலில் இடம்பெற்ற சில கதைகளில் சொல்லி இருக்கின்றேன்.

அரசியல் சதிக்குட்பட்டு இரண்டாக வேறுபட்டு தற்போதும் சில சில நேரங்களில் ஒருவரோடு ஒருவர் பகை கொண்டு மோதிக்கொள்ளும் இரு சமூகங்களும் ஒரு காலத்தில் எப்படி வாழ்ந்தார்கள் என்பதையும் சொல்லியிருக்கின்றேன். மற்றபடி இச்சிறு கதை தொகுதியை பற்றி மேலும் கருத்து சொல்ல வேண்டிய வாசகர்களின் எண்ணங்கள் எதுவாக இருந்தாலும் அவைகளை என் எழுத்துக்களுக்கு ஏணிப்படிகளாக்க எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

மேலும் எனது இரண்டாவது நூலையும் வெளியிடும் மணிமேகலைப் பிரசுரத்தாருக்கும் தொடர்ந்தும் என் சிறுகதைகளை பிரசுரம் செய்து கொண்டிருக்கும் பத்திரிகையாளர்களுக்கும், வாசகர்கட்கும், என்னை எழுதத் தூண்டும் என் நண்பர்களுக்கும் என் நன்றிகள்.



**விமல் குழந்தைவேல்**
56/ WINGATE ROAD,
ILFORD, ESSEX IGI ZJB,
U.K., T.P. 0181.5532309.

# முன்னுரை

உங்கள் கரங்களில் தவழும் 'அவளுக்குள் ஒருத்தி' என்னும் இச் சிறுகதைத் தொகுப்பு 'விமல்' அவர்களின் இரண்டாவது பிரசவம். இரண்டாவது பிரசவமாயினும் பல பிள்ளைகளைப் பிரசவித்த தாயின் அனுபவம் பளிச்சிடுகிறது.

சமூக மாற்றத்தையும், அதனூடாக மாற்றம்பெறும் மனித சிந்தனையையும் தனது முதலாவது கதைமூலம் வெளிப்படுத்தியுள்ளார். வழமையான சக்களத்தி சண்டைகளை கதைகளாக்கிய காலம் மாறி, யதார்த்தத்தினைப் படம் பிடித்துள்ளார். விட்டுக்கொடுப்பு, சகிப்புத்தன்மை என்பவற்றிற்கு அதிக அழுத்தம் கொடுத்து 'வாழ நினைத்தால் வாழலாம்' என உணர்த்தியுள்ளார்.

ஈழத்தில் நிலவும் துன்பியல் நிகழ்வுகளால் நாடுவிட்டு நாடு வாழ்ந்தாலும் தான் பிறந்து, தவழ்ந்து, வளர்ந்த மண்ணின் உறவுகளை உணர்வுகளை தம்முடன் எடுத்துச் சென்றிருக்கிறார்.

இலக்கியத்தின் வாழ்வியல் தன்மை என்பது சமூக வாழ்வின் விளைபொருளை அதற்குரிய வரலாற்றுச் சூழலின் பின்னணியில் தருவதாகும். அப்போதுதான் அவ்விலக்கியத்திற்கு உயிராற்றல் கிடைக்கிறது. இவரது கதைகளில் இத் தன்மை காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

விடுதலைப் போராட்டத்திற்கு இரண்டு பக்கங்கள் உண்டு. ஒன்று அரசியல் தன்மை. மற்றது சமூகத் தன்மை. கதைகள் யாவும் சமூகத் தன்மை கொண்டனவாக, போராட்டம் சமூகத்தில் ஏற்படுத்தியுள்ள ரணங்களை வெளிக்கொணர்வதாக

உள்ளது. தாயன்பு, சகோதர அன்பு, நட்பு, மனிதத்துவம், சமூக ஒற்றுமை என்னும் அம்சங்கள் கதைகளுக்கு உயிரூட்டுகின்றன.

'பிட்டும் தேங்காய்ப்பூவும்போல' தமிழரும் இஸ்லாமியரும் இணைந்து வாழும் கிழக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவ்வாசிரியர் அம்மண்ணில் செழிப்புற்றிருக்கும் கலாச்சார, சமூக விழுமியங்களை நன்கு தந்துள்ளார்.

ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராளி ஒருவன் தமிழர் - முஸ்லீம் மோதலில் தமிழரைக் காப்பாற்ற முனைதலும், தனது துப்பாக்கியால் யாரும் மரணிக்கக் கூடாது என்பவனின் தோள்களில் துப்பாக்கி தொங்கியிருப்பதும் மனித மனத்தின் அடிப்படைக் குழப்பங்களைத் தெளிவாகத் தருகிறது.

தமிழர் - முஸ்லீம் உறவினை மிகவும் நேர்த்தியாகத் தந்துள்ள அவர், இஸ்லாமிய மக்களின் மொழி வழக்கை வெகு லாவகமாகக் கையாண்டு தனது மொழி ஆளுமையைக் காட்டியுள்ளார்.

போரினால் ஏற்பட்டுள்ள அனர்த்தங்களை இதயத்தை நெருடும் வகையில் அவ்வப்போது தந்துள்ள அவர், புற நிலைமைகள் மனித இதயத்தை, மனித உணர்வுகளைப் பாதிக்கும் விதத்தினையும், மனிதனை மனிதன் நேசிப்பது கூட முடியாத காரியமாகிப் போன அவல நிலைமைகளையும் போருக்குள் நடக்கும்போர் போன்று மிகவும் அனுபவிக்கும் விதத்தில் படைத்துள்ளார்.

சிறைச்சாலை என்பது மனித உணர்வுகளைப் பிடுங்குவதற்காக உருவாக்கப்பட்டதாகும். எடுபின் தீவின் சிறைச்சாலைக்குள் விடுதலை வீரர் நெல்சன் மண்டேலா முதன்

முதலாகக் கைதியாகச் சென்ற போது அரைக்கால் சட்டை அணியும்படி கேட்டார்களாம். இவர்கள் மனிதர்கள் அல்ல பையன்கள் என்பதை அவ்வாறு உணர்த்தினார்களாம். 'நான் அக் கால்சட்டையை அணிந்தேன், ஆனால் இது அதிக காலத்திற்கல்ல என்பதை அன்றே நான் சபதம் செய்தேன்' என்கிறார் மண்டேலா அவர்கள்.

ஒருவனது இலட்சியங்களுக்கு சிறைச்சாலை நிலைமைகள் எவ்வாறு அழுத்தம் கொடுக்கின்றன என்பதை 'தியாகங்கள் பலவிதம்' உணர்த்துகிறது.

இலக்கியம் என்பது 'காலத்தின் பதிவு' என்பதற்கொப்ப தனது லண்டன் வாழ்க்கையின் அனுபவங்களையும் கதைகளில் வடித்துள்ளார்.

பெண்ணொருத்தியின் வெளிநாட்டுப் பயணம் ஏற்படுத்திய கோலங்களை வர்ணித்த அவர்,

**'சேற்றினிலே செந்தாமரை இருப்பதையே ரசிக்கின்றீர்**
**தாமரையில் சேறுபட்டால் துடைப்பதற்கேன் மறுக்கின்றீர்'**

எனக்கேட்கும் கவிதை வரிகள் மூலம் புதிய அணுகுமுறையை வேண்டி நிற்கின்றார்.

லண்டனில் இரவு ராணிகளின் வாழ்வினை கேளிக்கை, காமம் என்ற குண்டுச் சட்டிக்குள்ளிருந்து பார்க்காமல் மனித நேயத்தின் பின்னணியில் பார்ப்பது பலே ஜோர்.

உருவகக் கதை என்பது சிறுகதைகளில் தனிப்பாணியானது. 'நறுவிழியாள்' என்னும் உருவகக் கதை தர்மம் அழிந்து அதர்மம் தழைக்கும் போக்கினை விவரிக்கிறது.

போரின் காயங்களை விவரிக்க எடுத்த உத்தி நன்கு அமைந்துள்ளது.

மட்டக்களப்பு என்றால் 'மந்திரம்' என நம்புபவர்கள் பலர். மட்டக்களப்பு மாந்திரீகத்தின் மாட்சியினை துப்பறியும் நாவல்கள் போன்று 'மந்திரவாதி' கதையைத் தந்துள்ளார். சூழலை வர்ணிப்பதன் மூலம் கதைக்கு மெருகேற்றும் பாணி அலாதியானது. கதை சொல்லும் ஆற்றலைக் கோடிட்டுக் காட்டுகிறது.

எழுத்துலகில் சில அடிகளே முன்வைத்துள்ள போதிலும் எழுத்தாளனுக்குரிய வரலாற்றுப் பார்வை அழகியல் அக்கறை என்பவற்றில் தனது பார்வையைச் செலுத்தியுள்ளது. நல்ல எதிர்காலத்திற்குக் கட்டியம் கூறுவதாக உள்ளது.

மனித நேயத்தை ஆதர்சமாகக் கொண்டு பின்னப்பட்டுள்ள இக்கதைகள் இலட்சிய நோக்கங்களுக்கு உயர் மதிப்பளித்துள்ளது. இவை போரின் பிரதிபலிப்பென உணரமுடிகிறது.

கல்யாணக் காட்சி மட்டுமல்ல கருமாரி ஒப்பாரிக்குக் கூட சுதந்திரம் இல்லாமல் போனதே என ஆதங்கப்படும் 'விமல்' சுதந்திரமாக எழுதி மனித சமூக விமோசனத்திற்கு துணைபுரிய வேண்டுமென வேண்டுகிறேன்.

நன்றி

**வி. சிவலிங்கம்,**

லண்டன்.

# பதிப்புரை

இலண்டனில் வாழும் தமிழரான விமல் குழந்தைவேல் எழுதிய தெருவில் அலையும் தெய்வங்கள் என்ற சிறுகதைத் தொகுப்பின் மூலம் முன்பே அறிமுகப்படுத்தி வைத்தோம். அந்த சிறுகதைத் தொகுதி வாசகர்களுக்கிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளதால், அவர் உற்சாகங்கொண்டு மேலும் ஒரு சிறுகதைத் தொகுதியை இப்போது படைத்துள்ளார்.

அவளுக்குள் ஒருத்தி என்ற இந்த சிறுகதைத் தொகுப்பில் பல அருமையான கதைகள் உள்ளன.

இலண்டனில் மனைவி மற்றும் மகளுடன் வாழும் ஒருவன் ஆண்டுக்கொருநாள் இந்தியாவில் இருக்கும் தனது காதலியைப் பார்க்க வருகிறான். அப்படி ஒருநாள் வந்துவிட்டுப் போகும் நிகழ்ச்சியை நெஞ்சம் நெக்குருகும் வகையில் பின்னப்பட்ட கதைதான் அவளுக்குள் ஒருத்தி. நாடு கடந்து நாடு செல்வதால் ஒருவனுக்கு ஏற்படும் பிரச்சினைகளைப் பற்றி புதுமையான வகையில் இந்தக் கதையில் படமாக்கப்பட்டுள்ளது.

மகனைத் திருமணக் கோலத்தில் பார்க்கவேண்டும் என்று அவன் காதலுக்குப் பச்சைக்கொடி காட்டுகிறாள் தாய். மகனோ காதலுக்கு மட்டும் அல்லாமல் நாட்டுப் பற்றிலும் மிகுந்தவனாக இருக்கிறான். ஊரில் கலவரம் தோன்றியபோது அவனது நாட்டுப்பற்று அவனை அணைத்துக்கொள்வதில் முந்திக் கொண்டது.

மகனைப் பறிகொடுத்த தாய், காதலனை இழந்த காதலி இவர்களின் அவல நிலையை அருமையாகப் படம் பிடித்துக் காட்டுகிறது, காதலும் களமும்.

மகனைப் பறிகொடுத்த தாய் மருமகளாக வரவேண்டியவளைப் பார்க்கிறாள். அப்போது கிரிஜா என்ற அந்தப் பெண் மயானத்தில் ஓர் மலர்வனமாய்க் காட்சியளித்தாள் என்று ஆசிரியர் சொல்கின்றபோது நம் கண்களிலும் நீரை வரவழைக்கிறது. இதையும் மிஞ்சி, மகனை இழந்த தாய், தனக்கு மருமகளாக வரவேண்டியவளின் வடிவில் மகனைக் கண்டாள் என்று தாய்மைக்கு, தாய்க்கு ஒரு தலைமைப் பீடத்தை அமைத்துத் தருகிறார். தமிழ்ப் புலவர்கள்கூடச் செய்யாத புதுமை இது.

சாதாரண நிகழ்ச்சிகளைக்கூட தமது எழுத்துத் திறமையால் ஓவியமாக உருவாக்கியிருக்கும் இந்த சிறுகதைத் தொகுப்பில் நாட்டுப்பற்று, வீரம், தியாகம் எங்ஙனும் மலிந்து கிடப்பதால் வாசகர்கள் இதைப் படிக்கும்போது, தன்னம்பிக்கையும், அடுத்தவர்களுக்கு உதவ வேண்டும் என்ற பண்பிலும் சிறந்து விளங்குவார்கள் என்று உறுதியாக நம்புகிறோம்.

விமல் குழந்தைவேலின் இந்த சிறுகதைத் தொகுப்பை வெளியிடுவதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறோம்.

பதிப்பகத்தார்

# அவளுக்குள் ஒருத்தி

**போ**ர்வைக்குள் மறைந்திருந்த அவளின் வெற்றுடல் அவனின் அணைப்பில் குளிர்காய்ந்து கொண்டிருந்தது. அவனின் மார்பில் முகம் பதித்தவளின் கலைந்த தலைமுடியை வருடிவிட்டுக்கொண்டிருந்தது அவனின் கைகள். சுருண்டு வளர்ந்திருந்த அவனின் மார்பு ரோமங்களுக்கிடையில் அவளின் விரல்கள் எதையோ தேடியது. முகத்தை நிமிர்த்தி ஏன் அதுவும் பேசாமல் இருக்கின்றாய் என்பதுபோல் பார்த்தான் அவன்.

"நீங்க கட்டாயம் நாளைக்கு ஊருக்கு போகத்தான் வேணுமா?"

"ம்... கட்டாயம்..."

"ஏன் என்னோடு இன்னும் இரண்டொரு நாட்கள் - இருக்கவேணும் போல் இல்லையா?"

"இல்லாமலா... ஒவ்வொரு வருடமும் உன்னைத் தேடி ஓடி வருகிறேன். (நாளைக்கு போனால் இனி அடுத்தவருசம்தானா?)"

"ம்... என்ன செய்யுறது?"

"செய்யுறதுக்கு எதுவுமே இல்லையா நினைச்சால் எவ்வளவுசெய்யலாம்."

"சொல்லு... சொல்லு... என்ன செய்யச் சொல்லுகிறாய்?" அவனிடம் இருந்து வெளிப்பட்ட கடினமான வார்த்தையை அவள் எதிர்பார்க்கவில்லை.

இருவருக்கும் இடையில் இருந்த அணைப்பின் பிணைப்பு கொஞ்சம் தளர்ந்தது.

ஐந்து நிமிடங்களை மௌனமாக கடத்திய பின் அவளே தொடங்கினாள்.

"ஏன் அவசரப்படுறீங்க. ஊருக்கு போகவேணுமெண்டு."

"உனக்கு தெரியாதா? ஏன் இப்படியெல்லாம்..."

"தெரியும். தெரிந்துதான் கேட்கிறேன். ஏன் இவ்வளவு அவசரம்..." (அவன் மௌனமாகவே இருந்தான்.)

இதுவரை சொர்க்கமாகக் கழிந்த பத்துநாட்களின் இந்த கடைசிநாள் நரகமாக முடிந்துவிடுமோ என்று அவனின் மனம் பயந்தது.

மீண்டும் மௌனம்...

"நான் கூப்பிட்டேனா. ஒவ்வொரு வருடமும் என்னை வந்து பார்த்துவிட்டு போகும்படி நான் கட்டாயப்படுத்தினேனா. நீங்கள் வரயில்லையெண்டால் கூட நான் கத்தி கதறினேனா... ஏன்? ஏன். வாறீங்க...?"

"வருசத்துல ஒரு தடவையாவது உன்னைப்பார்க்க நினைக்கறது தப்பா. உன்னைப் பார்க்காமல் என்னால் இருக்கமுடியாது என்று உனக்கு தெரியாதா?"

"அவன் குழந்தைபோல் குழைந்தான்."

"தெரியுது, அதுதான் கேட்கிறன். ஏன் அவசரப்படுறீங்க. போகத்தான் வேணுமெண்டு ஏன் ஒத்தை காலில் நிக்கிறீங்க."

"பைத்தியம் மாதிரி கத்தாத. எனக்கும் அங்க மனைவி பிள்ளை குடும்பம் இருக்குதெண்டு தெரிஞ்சும் ஏன் என்னை இப்படிப்போட்டு வதைக்கிறாய்?"

ஆத்திரத்தில் வெளிவந்த அவனின் வார்த்தைகளைக் கேட்டு அடிபட்ட நாகம்போல் நிமிர்ந்து பார்த்தாள் அவள். அவனும் அவளையே பார்த்துக்கொண்டிருந்தான்.

"அப்ப வருசத்தில முன்னூற்றி ஐம்பத்தைந்து நாள் தாலிகட்டின மனைவியோட இருப்பியள். பத்துநாள் மட்டும் என்னோட இருப்பியள், அப்படித்தானே!"

"ஏன் இப்படியெல்லாம் கதைக்கின்றாய்."

அவன் அவளை அணைக்க முயல அவள் விலக்கிக்கொண்டாள்.

"வேண்டாம்... இனிமேல்... இந்தியாவுக்கு வரவேண்டாம். என்னால் முடியாது, பெற்ற பிள்ளையிடம் வெளியூர் போகிறேன் என்று பொய் சொல்லிவிட்டு ஒவ்வொருவருடமும் ஒவ்வொருபத்து நாளும் உங்ககூட ஹொட்டலில வாழ்க்கை நடத்த இனியும் என்னால முடியாது... வேண்டாம்... இனிமேல் வரவேண்டாம்."

விம்மி விம்மி அழுதவளை அவன் அணைத்துக்கொண்டான்.

"கொஞ்சம் யோசிச்சுப்பாருங்க; நாளைக்கு என் பிள்ளை வளர்ந்தப்புறம் ஒவ்வொரு வருடமும் தன் அம்மா யாரோ ஒருவனுடன் ஹொட்டலில் வாழ்க்கை நடத்தினாளாம் என்று கேள்விப்பட்டால் அவன் என்னைப் பற்றி என்ன நினைப்பான்."

"யாரோ ஒருவனோடு அல்ல; அவனின் தகப்பனோடுதானே... அது உங்களுக்கு தெரியும்; எனக்கு தெரியும், இந்த ஊருக்கு தெரியுமா? இல்ல என் புள்ளைக்குத்தான் தெரியுமா. நீங்கதான் எதையுமே அவனுக்கு தெரியக்கூடாது என்று மறைக்கச் சொல்லிட்டீங்களே..." அவள் விசும்பிக்கொண்டிருந்தாள்.

மீண்டும் மௌன நிமிடங்கள் கழிந்தன.

அவள் அறையை இருளச் செய்தாள். அவன் அவளை அணைத்துக்கொண்டான்.

"ஐ லவ் யூ..." அவன் அவளின் காதுக்குள் குசுகுசுத்தான்.

"என்னை மட்டும்தானா?"

"ஐ லவ் மை வைவ். ஐ லைக் மை டோட்டர். அதோட உன்னை எனக்கு மிகவும் பிடிக்கும்."

அவள் அவனின் அந்த வார்த்தைகளுக்கு பதிலேதும் சொல்லாமல் இருந்துவிட்டு மீண்டும் கேட்டாள்.

"உங்க மனைவி நல்லாய் சமைப்பாளா?"

"இல்லை."

"சந்தோசமாக சிரித்து பேசுவாளா"

"எப்போதாவது."

"அப்ப சண்டை ஏதும் ஏற்படுமா உங்களுக்குள்ள?"

"இல்ல, நாங்க சந்தோசமாய்தான் இருக்கிறோம்."

"எப்படி முடியுது? நடிச்சிக்கொண்டிருக்கிறயளா வாழ்க்கையில..."

"இல்ல அப்படி இல்ல. அவ எது செய்தாலும் எப்படி நடந்தாலும் எனக்கு அவமேல கோபமே வாரதில்லை."

"எப்படி. முடியுது உங்களால?"

"எப்படியோ... ஏன், இப்படியெல்லாம் நான் அவளுக்கு செய்யுற துரோகங்களால அவள் மேல பரிதாபமே ஏற்படுது. பொதுவாக ஒவ்வொரு நாளும் உன்னை நினைக்கும்போதெல்லாம் அவமேல எனக்குள்ள அன்பும் பாசமும் கூடிக்கொண்டே போகுது. ஏனோ தெரியாது இது எனக்குள் பத்து வருடமாக நடக்கின்ற என் உள்ளுணர்வு." அவனின் குரல் உடைந்ததை அவள் உணர்ந்துகொண்டாள்.

"இந்தியாவில் இருந்து கொண்டுபோக என்ன வாங்கி இருக்கீங்க?"

"என்னவாங்கலாம் இந்தியாவில், சேலைகளைத் தவிர.!!

"மகளுக்கு...?"

"பட்டுப்பாவாடை."

இரவு எத்தனை மணிக்கு தூங்கினார்களோ தெரியாது. அவன் காலையில் கண்விழித்தபோது அவள் குளித்து முடித்துவிட்டு அவன் ஊருக்குக் கொண்டுபோக வேண்டிய பெட்டியில் வைக்கவேண்டிய சாமான்களை அடுக்கிக்கொண்டிருந்தாள்.

அவனும் குளித்துவிட்டு வந்து அவள் அருகில் அமர்ந்தபோது அவனிடம் ஓர் பார்சலை, கொடுத்தாள் அவள். பிரித்து பார்த்தான். பட்டுச்சேலையும் பட்டுப்பாவாடையும் இருந்தன. யாருக்கு இது என்பது போல் அவளை நிமிர்ந்து பார்த்தான் அவன்.

"அது உங்க மனைவிக்கும், மகளுக்கும். மன்னிச்சிடுங்க. ராத்திரி உங்க மனச நோகடிச்சிற்றன். சத்தியமாக சொல்லுறன் உங்க மனைவிமேலேயோ உங்க மகள்மேலேயோ எனக்கு எந்தவித வருத்தமும் இல்ல. நம்ம வாழ்க்கை இப்படிபோயிட்டதுக்கு அவங்க என்ன செய்யமுடியும். விதியோ சதியோ. என்னை காதலிச்சியள். கல்யாணம் கட்டுவன் கூப்பிடுவன் என்று லண்டன் போனியள். அங்க நடந்த என்னவோ தில்லுமுல்லுகளால் நீங்கள் இன்னொருத்திக்கு தாலி கட்ட வேண்டிய நிர்ப்பந்தத்தில ஏதோ என்னமோ நடந்து இவ்வளவு ஆகிப்போச்சி.

"சிலநேரங்களில் உங்களைப்பார்க்க கோபமாய் இருக்கும். ஆனால் உங்களின்ர நிலையை பார்க்க பாவமாயும் இருக்கும். போங்க போய் உங்க மனைவி பிள்ளைகளோட சந்தோசமாய் இருங்க. அவகூட வாழும்போதே நீங்க பாசமும் காட்டுற வஞ்சகத்தனத்தை விட்டுப்போட்டு உண்மையாகவே அவகூட வாழுங்க. எனக்கென்ன குறை நீங்க இல்லை என்கிறத தவிர - நான் சந்தோசமாக மனம் திறந்து சொல்லுறன் நீங்கள் நல்லவர். நீங்கள்பாவம். நீங்கள் நல்லாய் இருக்கவேணும்..." பொங்கிவந்த கண்ணீர் அவளின் வார்த்தைகளைத் தடுக்க அவன் அவளை அணைத்துக்கொண்டான்.

"மன்னிச்சிடு. உன் வாழ்க்கைய நான் பாழாக்கிவிட்டேன்."

"என்னங்க, உங்களிட்ட ஒன்று கேட்கலாமா?" அவள் கெஞ்சுவதைப் போல் கேட்டதை, பார்க்க அவனுக்கு அவள் மேல் பரிதாபமாக இருந்தது.

"கேளு, என்ன வேணும் கேளு."

"ஐ லவ் மை வைவ். ஐ லைக் மை டோட்டர். ஐ லைக் யூ.. மனைவிக்கும் மகளுக்கும் சேலையும் பட்டுப்பாவாடையும் வாங்கி இருக்கேன் இப்படியெல்லாம் சொன்னீங்களே. ஏன் உங்களுக்கும் ஓர் மகன் இருக்கிறான், அவனையும் பிடிக்கும், அவனுக்கும் ஏதாவது வாங்கி இருக்கிறேன் என்று உங்களால் பொய்கூடவா சொல்லமுடியாமல் போய்விட்டது." பிச்சைக்காரிபோல் தன்னிடம் கெஞ்சிக் கேட்ட கேள்வியால் அவன் துவண்டுபோனான். அவனின் கண்களை நேருக்கு நேர் பார்க்கமுடியாதவளாய் அவனின் மார்பில் முகம் புதைத்தாள் அவள். அவளை அணைத்துக்கொண்டான் அவன். அவளின் விசும்பல் அவனை என்னமோ செய்தது அவளின் முதுகைத் தடவிக்கொண்டே இருந்தான் அவன்.

"வேணுமெண்டால் லண்டனுக்கு போகாமல் இங்கேயே தங்கிடட்டுமா, உனக்கு சந்தோசமா?" அவன் ஆறுதலாக அன்பாகவே கேட்டான்.

"இல்ல வேண்டாம். அந்தவேலையை நீங்க செய்து பாவத்தையும் பழியையும் ஏன் தலையில போடவேண்டாம். எனக்கு வாழத் தெரியும். இதுவரைக்கும் வாழயில்லையா. இனியும் என்ன இன்னும் கொஞ்சகாலம்... இப்பவும் என்ன எனக்காகவா நான் வாழறன்! என் பிள்ளைக்காகத்தானே நான் வாழறன். எனக்கிருக்கிற கவலையெல்லாம் உங்க பிள்ளைய நீங்களே பார்க்காமல் இருக்கிறதுதான். உங்க மடியில தவழ்ந்து, உங்கமுதுகுல ஏறி இருந்து, உங்ககூடவே ஓடிப்பிடித்து அவன் விளையாடுறத பார்க்க எனக்கு ஆசை இருக்காதா, அந்த ஆசை உங்களுக்கு மட்டும் ஏன் இல்லாமல் போய்ச்சுது. எனக்கு ஒரு சந்தேகம், அந்த பிள்ளை உங்களுக்கு பிறந்ததுதானோ என்று நீங்கள் சந்தேகிக்கின்றீர்களோ என்று எனக்கொரு சந்தேகம்..." அவனின் தோளின் மேல் முகத்தை போட்டுக்கொண்டு பேசியவளின் வார்த்தையால் தாக்கப்பட்டவன் அவளின் முகத்தை நிமிர்த்தி தன் முகத்துக்கு நேரே நிறுத்தினான். அவளின் கண்கள் சிவந்திருந்தது.

"சொல்லு, இப்பசொல்லு ஒருவார்த்தை.. உன் மனைவி மகளைப் பார்க்க லண்டனுக்கு போகவேண்டாம் என்று என்னிடம் ஒருவார்த்தை நீ சொல்லு... சொல்லிவிட்டுப்பார் அதன்பின்பு உன் வார்த்தையை இவன் மீறுகின்றானா என்று." சொல்லிக்கொண்டே அவளின் தோளைப் பிடித்து அவன் குலுக்க, அவள் பூமரமாய் குலுங்கினாள்.

"இல்ல. நான் அப்படியெல்லாம் சொல்லமாட்டன். ஒரு மனைவிக்கிட்ட இருந்து கணவனையும் ஒரு மகளிடம் இருந்து தகப்பனையும் பிரிக்க நான் ஒரு நாளும் நினைக்கமாட்டன்." அழுதுகொண்டே சொன்னாள் அவள்.

"எனக்கு தெரியும் நீ அப்படி நினைத்துக்கூட பார்க்கமாட்டாய் என்று. ஏனென்றால் நீ அப்படிப்பட்ட பெண்அல்ல. உனக்கு ஒன்று சொல்லட்டுமா. இப்பகூட என் மகளவிட என் மகன் மேலதான் பாசம் அதிகம். அவனைப்பார்க்க வேணும், அவனக் கொஞ்சவேணும், அவனோடு பேசவேண்டும், விளையாடவேண்டும் என்றெல்லாம் என் உள்ளம் கிடந்து தவிக்கிறத நீ அறியமாட்டாய். ஆனால் அப்படியெல்லாம் அவனைபார்த்து பேசி விட்டால் நான் மீண்டும் லண்டன் போகாமல் விட்டுவிடுவேனோ என்று நானே பயப்படுறன். அப்படிநான் போகாமல் விட்டால் அங்க இருக்கிற பெண் குழந்தை என்ன பாடுபடுவாள்..." சொல்லு... நீயேசொல்லு... அவனின் கேள்விக்கு பதில் சொல்லாமல் தலைகுனிந்தாள் அவள்.

"என் மனைவிக்கு ஒரு சேலையும் மகளுக்கு ஒரு பட்டுபாவாடையும் மட்டும்தான் நான் வாங்கிக் கொண்டு போகிறன். ஆனால் என்னுடைய உழைப்பில் அரைப்பங்கு நம்ம மகன் பேரிலதான் சேமிக்கிறன் என்கிறது உனக்குதெரியாது. தெரியவேண்டிய நேரத்தில தெரியட்டுமே என்று நினைத்திருந்தன். அது இவ்வளவு விரைவில் தெரியவரும் என்று நினைக்கையில்லை. ஏதோ எல்லாமே நல்லதுக்குத்தான். உனக்கு விருப்பமில்லையெண்டால் நான் இனி இந்தியாவுக்கு வரமாட்டன்."

சொல்லிக் கொண்டே போவதற்கு பெட்டியை தூக்கியவனின் கரங்களைப் பற்றி இழுத்தாள் அவள்.

"மன்னிச்சிடுங்க... என்னை மன்னிச்சிடுங்க. எல்லா ஆண்களும் போலதான் நீங்களும் என்று நான் உங்கள சராசரியாக நினைச்சிட்டன். என்ன மன்னிச்சிடுங்க. நான் ஒன்று சொல்லட்டுமா? தயவு செய்து இனிமேல் இந்தியாவுக்கு வராதீங்க... அங்க இருக்கிற உங்க மகளையும் மனைவியையும் அன்பாக பார்த்துக்குங்க. எனக்கென்னங்க குறை. களுத்தில தாலியசுமந்திட்டு கஸ்டப்படுற எத்தனையோ பெண்கள் வாழுற இந்த காலத்தில கழுத்தில தாலிமட்டும்தான் இல்லையே என்கிற குறையத்தவிர எனக்கென்னங்க குறை. சில நேரங்களில சில சுமைகள் கூட சுகமாக இருக்குமே... கர்ப்பிணிபோல... உங்கள நினைச்சி உங்கள மனசுல சுமந்து கொண்டு இருக்கிறதும் சுகமாய்த்தான் இருக்கு. நீங்கபாவம். நீங்க ஒரு குழந்தை மாதிரி... இனியும் நீங்க மனசால கஸ்டப்படுறது பாவம்." (அவள் அவனின் இரு கன்னங்களையும் தன் இருகைகளிலும் ஏந்திக் கொண்டு சொன்னாள்.) அவனுக்கு பேச வார்த்தைகள் பஞ்சமாயின. கண்ணீரால் விடைசொன்னான் அவன்.

அவள் அறையின் கட்டிலில் தலையணைக்குள் முகத்தை புதைத்துக்கொண்டு விம்பினாள். தலையணைகள் அவள் கண்ணீரால் பாரமாயின. ஆனால் அவளின் மனமோ பாரம் குறைந்ததுபோல் இருந்தது. திறந்திருந்த யன்னல் வழியே வந்த விமான இரைச்சல் அவளை எழுப்பியது. யன்னல் வழியே எட்டிப் பார்த்தாள். பறவையின் அளவில் விமானம் ஒன்று மேகங்களுக்குள் மறைந்துகொண்டிருந்தது.

சுவரில் தொங்கிய கடிகாரத்தைப் பார்த்தாள். அடுத்த வருடத்தின் முன்னூற்றி அறுபத்தைந்து நாட்களின் முதல்நாளின் மூன்று மணித் தியாலங்கள் கடந்துகொண்டிருப்பதை சுவர் கடிகாரம் காட்டியது. இனி வரும் நாட்களை எண்ணிக் கடந்து சென்ற கடிகார முள்ளுக்கு நன்றி சொல்லிக் கொண்டாள் அவள்.

# காதலும் களமும்

ரூபவாகினியில் இரவு ஒன்பதரை மணி. ஆங்கில செய்தி முடிந்ததும் தொடங்கப்பட்ட தமிழ் திரைப்படத்தில் குடும்பத்தில் உள்ளவர்களும் பக்கத்து வீட்டவர்களும் கவனமாய் இருக்கும் சந்தர்ப்பத்தை பார்த்து மெதுவாக எழும்பி குசினி வழியாக வந்து, கிணற்றடி பக்கம் இறங்கி, இருட்டிற்குள் நுளைந்த கிரிஜாவை அதுவரையில் அவளுக்காக காத்து நின்ற தவராஜா எட்டி இழுத்து கட்டி அணைத்துக்கொண்டான்.

"என்ன இது விடுங்கோ..." அவள் சிணுங்கினாள்.

"ஏன் நீயும் படம் பார்க்கவேண்டுமா? போகப் போகிறாயா?" தன் கையை தளர்த்திவிட்டு கேட்டான்.

"இல்ல விருப்பம இல்லாதவங்களோட என்னகதை."

"யார்விருப்பம் இல்லாதவர், நீயா, நானா?"

"நான் இல்ல நீங்கதான். உங்களுக்குத்தான் என்மீது விருப்பம் இல்ல. இண்டைக்கு என்னைக் கோயில்ல கண்டும் காணாததுபோல போனீங்களே என்னபெரிய ஆள் எண்ட நினைப்பாக்கும். பெரிய ஆள்தானே." இருட்டினில் அவள் குரல்மட்டும் கேட்டது.

"யார் சொன்னது நான் பெரிய ஆள் எண்டு. நீ மட்டும் உன் தம்பியோடு வராவிட்டால் உன்னோடு கதைத்திருக்க மாட்டேனா! நாளைக்கு கோயிலுக்கு வருவன், வாங்கோ என்று சொல்லிவிட்டு, நீ

மட்டும் உன்தம்பியுடன் வந்தது சரியா? நான் உன்னோடு கதைத்திருந்தால் வீட்டில் உன்நிலைமை என்னாகும்!"

அவள் மௌனமாகவே நின்றிருந்தாள்.

"இன்டைக்கு நீ உடுத்தி வந்த சாரி உனக்கு நல்லவடிவாய் இருந்தது." அவளை தன் அருகில் இழுத்து அவள் காதுக்குள் சொன்னான், தவராஜா.

"ம்... விடுங்கோ இப்படி எத்தனை நாளைக்குத்தான் நாம இருட்டில சந்திக்கிறதும் கட்டிப் பிடிக்கிறதும்." அவனின் மீசையை கண்டுபிடிக்க முகத்தை தடவிக்கொண்டடே கேட்டாள் கிரிஜா.

"உனக்கு சம்மதம் எண்டால் சொல்லு, இப்பவே உன்ன தூக்கிக் கொண்டு போக நான் தயார்."

"தூக்கிக்கொண்டு போய் காட்டுக்குள்ளதான் வைப்பியள். ஏற்கனவே உங்கட குடும்பத்துக்கும் எங்கட குடும்பத்துக்கும் வெட்டுப்பகை குத்துப்பகை. இப்ப நம்மடவிசயமும் அரசல் புரசலாக தெரிஞ்சு அம்மா என்னை நச்சரிச்சுக் கொண்டிருக்கிறா. இனிமேல் என்னை தையல் வகுப்புக்குக்கூட போகவேண்டாமாமாம்." கிரிஜா சற்று கவலையுடனேயே சொன்னாள்.

"கொஞ்சம் பொறுத்திருக்கிறதுதான் நல்லது."

"எதுவரைக்கும் தனி நாடு கிடைக்கும் வரைக்குமோ அல்லது நான் சாகும்வரைக்குமோ."

"கிரிஜா ஏன் இப்படியெல்லாம் கதைக்கிற. என்ர நிலைமை தெரிஞ்சுதானே நீ என்னை காதலிச்ச."

"உங்கட நிலைமையை பற்றி நான் கேட்யில்ல, நம்மட நிலைமையப்பத்திதான் கேட்கிறன். உங்கட அம்மாக்கிட்ட கேட்டனீங்களோ என்ன சொன்னா..." எதிர்காலத்தை பற்றிய கனவில் கேட்டாள் கிரிஜா.

"தங்கத்த நகைகளாக செய்யாமல் கட்டி கட்டியாக நிறுத்துக்கொடுத்து உனக்கு மாப்பிள்ள எடுக்க தன்னிட்ட வசதியும் சொத்தும் இருக்கெண்டு உன்ர அம்மா சொல்லிக்கொண்டு திரியுறாவாம், மெய்தானோ?" நக்கலாகச் சொன்னான் தவராஜா.

"யார் சொன்னது உங்கட அம்மாவோ. உங்கட குடும்பத்துக்கு தானே எங்கட குடும்பத்த எப்பவும் பிடிக்காதே. எங்கட அம்மாவுக்கு எப்பவுமே பரம்பரை திமிரும் பணக்கார கர்வமும் இருக்கிறது தெரியும்தானே. ஆனால் உங்கட அம்மா படிச்சவ; அவகூட இப்படிக் கதைப்பா எண்டு நான் நினைக்கையில்ல மெதுவாக அழுதாள் கிரிஜா.

"என்ர அம்மா உன்னில விருப்பம் இல்லாமல் கதைக்கயில்ல. உன்ன நான் லவ் பண்ணுறதும் நீ வீட்டுக்கு மருமகளாகவாறதும் அம்மாவுக்கு நல்ல சந்தோசம். ஆனால் உங்கட அம்மாவுக்குதான் கதைக்க பேசத்தெரியாது. கதைக்க வெளிக்கிட்டால் மரியாதை குறையவேண்டிவருமோ என்று அம்மா பயப்பிடுறா. உன்ன வளைச்சு உன்னோட சொத்துக்களை சொந்தமாக்க நாங்க நினைக்கிறம் எண்டு உங்கட அம்மா கதைச்சி திரியுறதுல அமமாவுக்கு பெரியகவலை. மற்றப்படி அம்மாவுக்கு உன்னிலை நல்ல விருப்பம்." சொல்லிக்கொண்டே கிரிஜாவை தன்னருகில் இழுத்தான் தவராஜா.

"சும்மா விடுங்கோ. இந்த மனிசி அம்மாவ எப்படித் திருத்திறதெண்டே தெரியாது. நான் உங்கள விரும்புறது தங்கச்சியவையளுக்கு நல்ல சந்தோசம். நீங்கள் நல்ல வடிவாம் என்று கடைசி தங்கச்சி அடிக்கடி சொல்வாள்." கிரிஜா அவனின் காதில் மெதுவாக கிசுகிசுத்தாள்.

"அப்படியா, அவளுக்கு இப்ப என்ன வயது." கிரிஜாவின் நெற்றியில் தன் உதட்டை பதித்துக்கொண்டே கேட்டான் தவராஜா.

"உங்கட அப்பா என்ன சொன்னார் நம்மட விசயத்தபற்றி?" அவனின் நெருக்கத்தை மெதுவாக விலக்கிக் கொண்டே கேட்டாள், கிரிஜா.

"அப்பா என்னுடைய முகத்தை நேருக்கு நேர் பார்த்து பேசியே மூணுவருசமாச்சு. அவருக்கு என்னில கோபம்."

"ஏன்?"

"நான் நல்லா பாஸ் பண்ணவேணும் எண்டு யாழ்பாணம் விட்டு படிப்பிச்சார். நானும் நல்லாய்த்தான் படிச்சன். பல்கலைக்கழகத்துக்கும் தேர்வு செய்யப்பட்டன். அதே நேரத்தில வாத்தியார் வேலைக்கும் வரச்சொல்லி கடிதம் வந்திச்சி. இதையெல்லாம் தூக்கி எறிஞ்சிபோட்டு துப்பாக்கி பயிற்சிக்காக நான் இந்தியாவுக்கு போனதில அப்பாவுக்கு ஏமாற்றமும் அதிர்ச்சியும் கோபமும். அதனாலதான் அவர் என்னோட கதைக்கிறயில்ல. ஒருவகையில அவரின்ட கோபமும் நியாயமானதுதான். என்னசெய்யுறது இப்ப காலம் கடந்துபோச்சு. பெருமூச்சுவிட்டான் தவராஜா.

"அம்மாவுக்கு உங்களில விருப்பம் இல்லை என்றில்லை. அழகு வடிவான பெடியன் நல்லாய் படிச்சு உத்தியோகம் பார்க்கவேண்டியவன் இப்படிபோயிட்டானே என்றுதான் அடிக்கடி கதைப்பா." கிரிஜா தன்தாயை விட்டுக்கொடுக்கமல் பேசினாள்.

"ஆனால் இடைநடுவில் சாகப்போறவனுக்கு என்னெண்டு தன் பிள்ளைய கொடுக்கிறது எண்டு யோசிக்கிறா உங்கட அம்மா, அப்படித்தானே கிரிஜா?" கேட்டவனின் வாயை பொத்தினாள் கிரிஜா.

தொலைதூரத்தில் இருந்து துப்பாக்கி வேட்டுச்சத்தம் கேட்டது. அவனின் அணைப்பில் இருந்த கிரிஜாவை மெல்ல விலக்கினான் அவன்.

"என்ன சத்தம்? எங்க?" அவள் பதட்டத்துடன் கேட்டாள்.

"கல்முனைப் பக்கமிருந்துதான் எண்டு நினைக்கிறன்."

"ஏன் என்ன பிரச்சினையாம்." அவள் பதட்டத்துடன் கேட்டாள்.

"கல்முனை, காரைதீவு, மருதமுனையெல்லாம் தமிழ் முஸ்லீம் குழப்பம் நடக்குது உனக்குத் தெரியாதோ?" எழும்பி நின்று கொண்டு சொன்னான்.

"ஏனாம் ஆர் தொடங்கினது." அவள் அவனைப் போக விடவிரும்பாதவள் போல் கேட்டாள்.

"ஆர் தொடங்கினதெண்டு தெரியாது. வருசா வருஷம் நடக்கிற தமிழ் முஸ்லீம் இனக்கலவரம். அதோட இந்த முறை அரசியலும் சேர்ந்து கொஞ்சம் பெரிசாக தொடங்கி இருக்கு இது நம்மட ஊருக்கு புதிசில்லத்தானே." அவன் புறப்பட ஆயுத்தமானான்.

"நம்மடபக்கமும் தொடங்குமோ? நீங்களும் ஏதாவது செய்வியளோ?" கிரிஜாவின் கேள்வியில் கடந்த காலங்களின் கலவர பீதி தெரிந்தது.

"நம்மட பக்கம் கலவரம் வர நாங்கள் விடமாட்டம். அப்படி கலவரம் ஏற்பட்டு, அதற்கு ராணுவமும் ஒத்துழைத்தால் நம்மட சனத்த பாதுகாக்க நாங்களும் ஏதாவது செய்யவேண்டிவரும். அது தவிரிக்கமுடியாதது." சொல்லிக்கொண்டே எழுந்து நடக்க முற்பட்டவனின் இடுப்பில் தற்செயலாக அவளின் கைபட அவனின் இடுப்பில் சொருகி இருந்த கைதுப்பாக்கி அவளின் கையில் தட்டுப்பட்டது.

"நீங்களும் போவீங்களோ..."

"இதில் என்ன சந்தேகம்! நான்மட்டும் என்ன விதிவிலக்கா? நான் வாறன் கிரிஜா."

"நாளைக்கு இரவு வருவீங்களோ?"

"சொல்லியனுப்புறன். கட்டாயம் வருவன்..." அவளின் கன்னத்தை தட்டி தடவிவிட்டு தவராஜா சென்றுவிட்டான்.

"அண்ணா என்னண்ணா பிரச்சினை?"

பதட்டத்துடன் வந்த தமையன் தவராஜாவிடம் தங்கை புஸ்பா ஓடிப்போய் கேட்டாள். அவனுக்கு எதை எப்படி சொல்லுவதென்று புரியவில்லை. தாயின் முகத்தை பார்த்தான். அவனைக்கண்டதும் கிணற்றடிப்பக்கம் போனார் தகப்பன்.

"என்னடா என்னடாப்பா இங்காலையும் பிரச்சினை தொடங்குமோ?" பயத்துடன்கேட்ட தாயை பரிவுடன் பார்த்தான் தவராஜா. ஊரின் நிலவரத்தின் உண்மை நிலைமைகளை தாயிடம் சொல்ல அவன் விரும்பவில்லை.

"அம்மா ஊர்ச்சனம் எல்லாம் தம்பிலுவில் திருக்கோவில் பக்கம் போய்க்கொண்டிருக்கின்றார்கள். நீங்களும் தம்பி தங்கச்சியவையள கூட்டிக்கொண்டு கெதியாய் போங்கோ; நான் பின்னேரம் வந்திடுவன்."

தான் சொன்னதைக்கேட்டதும் தன்னை முறைத்துப் பார்க்கும் தகப்பனின் பார்வையை தவிர்த்துவிட்டு வெளியில் வந்து

வீதிக்குவந்தவனை ஊரில் உள்ளவர்கள் எல்லோரும் வழிமறித்து தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

"ஆடு மாடு நாய் கோழி இதையெல்லாம் அள்ளிக் கட்ட வேண்டுமெண்டில்லை. இரண்டு மூன்று நாட்களுக்குரிய உடுப்புகளோட மட்டும் உடனே வெளிங்கிடுங்கோ. ஊரையும் உங்கட உடைமைகளையும் நாங்கள் பார்த்துக் கொள்ளறம். நீங்க எல்லோரும் உடனே திருக்கோயில் தம்பிலுவில் பக்கம் போங்கோ."

ஊர் நடுவில் உள்ள நறுவிழி மரத்தின் கீழ் நின்று ஒரு கடமை வீரனுக்குரிய தொனியில் பேசிய அவனின் குரல்கேட்டு மதிலுக்கு மேலால் எட்டிப்பார்த்தாள் கிரிஜா. அவன் அவளிடம் போனான்.

"எனக்கு பயமாய் இருக்கு நான் என்ன செய்ய."

"பேய் புதையல் காவல் காத்த மாதிரி உன்ர தாய் தகப்பன் சொத்துக்களுக்கு பாதுகாப்பாக இருக்காமல் உடனே உங்களையும் கூட்டிக்கொண்டு திருக்கோயில் பக்கம் போகச்சொல்லு. அவையள் வரயில்லையெண்டால் உன்ர தங்கச்சியவையள கூட்டிக்கொண்டுவா. நான் என்ர அம்மாவோட உன்ன அனுப்பி வைக்கிறன்."

தவராஜா சற்று ஆத்திரத்துடனேயே கேட்டான்.

"எங்கட பக்கமும் பிரச்சனைவருமோ?" எதையும் அறியாதவள் போல் கேட்டாள் கிரிஜா.

"நீ எதுவுமே கேள்விப்படவில்லையா? அக்கரைப்பற்று சந்தைக்குள் இரண்டு தமிழ் பெடியன்களை விறகு கட்டையால அடிச்சு துடிதுடிக்க சாக்காட்டிப் போட்டாங்கள். அதை ஆமிக்காரன்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டு நிண்டான்களாம். அதுக்குப்பிறகு

தமிழாக்கள் அவையளின்ர கடைகளையெல்லாம் எரிச்சிப் போட்டாங்கள். ஆத்திரப்பட்டவங்கள் ஆமிக்காரங்களோட சேர்ந்து அக்கரைப்பற்றில இருந்து நம்மட ஊர் நோக்கி வந்துகொண்டிருக்கினமாம். மெயின் ரோட்டு வீடுகளும் சாரதா தியேட்டரும் எரியுதாம்.

"வெலிங்டன் தியேட்டர் வரை வந்துட்டாங்களாம். இனியும் பார்த்துக் கொண்டு இருக்க முடியாது. எங்கள நம்பியிருக்கிற தமிழ் சனத்தை நாங்கள்தான் காப்பாத்தவேணும் எண்டு மேலிடத்தில இருந்து எங்களுக்கும் உத்தரவு வந்திருக்கு. இனியும் நாங்கள் பார்த்துக்கொண்டு இருக்க முடியாது. அதுக்கு முதல் கூடுமானவரை சனங்கள் அப்புறப்படுத்தப் பார்க்கிறம். உம்மோட அப்பன் அம்மா தரவழி சொத்துக்களவிட்டு அசையுற மாதிரி தெரியயில்ல." அந்த நிலையிலும் அவளைக் கேலி செய்ததை கிரிஜா ரசித்து சிரித்தாள்.

"கிரிஜா சிரித்துக் கொண்டிருக்க இது நேரமில்ல. கெதியாய் வெளிக்கிடப்பாருங்கோ."

"அப்ப நீங்க."

"நான் வருவன்."

"எப்ப...?"

"இரவுக்கு வருவன்."

அவளைப் பார்த்தான் தவராஜா. அவளின் கண்கள் கலங்கியது. மதிலுக்கு கீழே தன் முகத்தை மறைத்துக்கொண்டாள். தன் முகத்துக்கு முன்பு தன் காலடியில் ஏதோ விழுந்தது. எடுத்துப் பார்த்தாள் கிரிஜா. ஒவ்வொரு இரவும் அவளை சந்திக்க வரும்போதெல்லாம் அவளுக்காக அவன் கொண்டுவரும் நான்கு

(இனிப்புகள்) ரொபிகள். இன்று அவன் அவளுக்காக பகலில் கொண்டு வந்திருக்கிறான். குனிந்து இனிப்பை (ரொபியை) எடுத்து மீண்டும் மதிலுக்குமேலால் எட்டிப் பார்த்தபோது வாகனமொன்றில் ஏற முடியாமல் அவதிப்படும் ஒரு கிழவியை தூக்கி ஏற்றிவிட்டுக் கொண்டிருந்தான் தவராஜா.

"கண்டகண்ட நட்டாமுட்டிகளெல்லாம் வாழ தெரியாமல் ஊரக்குத்தியுட்டு வேடிக்கைகாட்டி விளையாடித்திரிய நாங்கள் எங்கட சொத்துப் பத்தெல்லாம் விட்டுப்போட்டு வெளியூர் போக வேணுமாம். இவங்களெல்லாம் நல்லாய் இருப்பாங்களோ நாசமாய்த் தான் போவான்கள்."

தவராஜாவுக்கு கேட்க வேண்டுமென்பதற்காகவே கிரிஜாவின் தாய் சத்தமாக பேசுவது அவனின் காதுகளில் தெளிவாகக் கேட்டது.

"தம்பி வேணுமெண்டால் பெண்டுகள மட்டும் அனுப்பிப் போட்டு நாங்களும் உங்களோட நிற்கிறமே" என்று ஊரின் சில ஆண்கள் கேட்டபோது வேண்டாமென்று தடுத்தான் தவராஜா.

"அப்பு நீங்கள் நல்லாய் இருக்கவேணும். உங்களுக்கு ஏதும் நடந்தால் இந்த ஊர் அதத் தாங்காது ராசா." வயதான மூதாட்டியின் கலங்கிய கண்களுடன் வந்த வார்த்தையால் அருகில் இருந்தவர்களும் கலங்கினார்கள்.

"எங்கள தூற்றுவதற்காக நாங்கள் ஆத்திரப்படவோ, புகழ்வதற்காக புகழ் மாலை சூடிக்கொள்ளவோ இது நேரமல்ல. உங்களையெல்லாம் முடியுமானவரை பாதுகாக்க வேண்டியது எங்கட கடமை. கூடுமானவரை எல்லாரும் ஊரைவிட்டு ஒதுங்கி இருக்கிறதுதான் நீங்கள் எங்களுக்கு செய்யுற ஒத்துழைப்பும் உதவியும்."

தவராஜா அவன் கூட்டத்தை சேர்ந்தவர்களுடன். அந்த ஊரின் சனங்களை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் ஒவ்வொன்றையும் வழியனுப்பிக் கொண்டிரு ந்தான்.

பசியால் துடித்த அழுத குழந்தை பசி அடங்கி நித்திரை கொள்வதுபோல் ஊரே அமைதியாய் உறங்கிக் கிடந்தது. தவராஜா தன் சகாக்களுக்கு தலைமையேற்று ஊர் எல்லைக்கு சென்றான். வெலிங்டன் தியேட்டரை தாண்டி எல்லை மீறி வராத அளவுக்கு எதிரிகளை விரட்டினான். பொழுது சாயும் வரைக்கும் போராடினார்கள். பொழுது இருண்டதும் பலபேரை எல்லைகளுக்கு காவல் வைத்துவிட்டு இருவருடன் ஊருக்குள் வந்து ஒவ்வொரு வீடாக சென்று பார்த்தான். ஒவ்வொரு வீட்டு நாய் பூனை ஆடுமாடு கோழி போன்றவைகளை தத்தமது உரிய இடங்களில் விட்டு அடைத்தான். திறந்து கிடந்த வீடுகளுக்கு விளக்கேற்றி வெளிச்சம் காட்டினான். தன் வீட்டுக்குப்போய் தன் தாய் தனக்காக வைத்துவிட்டுபோன சாப்பாட்டை சகாக்களுக்கும் கொடுத்து சாப்பிட்டான்.

நள்ளிரவாகி இருந்தது. மீண்டும் மீண்டும் ஒவ்வொரு வீடாக வந்து கையில் இருந்த டோர்ச் வெளிச்சத்தில் பார்த்தான். கிரிஜாவின் வீட்டுக்கு வந்தான். வீட்டில் எவரும் இல்லை. ஒவ்வொரு இரவும் கிரிஜாவும் அவனும் சந்திக்கும் கிணற்றடிக்கு போனான். கிரிஜா வீட்டு நாய் ஓடிவந்து அவனின் கால்களை முகர்ந்து வாலை ஆட்டியது. கிணற்றடி கட்டில் ஏறி உட்கார்ந்தான். அவனின் மடியில் நாய் தலை வைத்தது. அவன் அதன் பிடரியை தடவினான்.

இருட்டில் அவனின் கையில் ஏதோ தட்டுப்பட்டது. டோர்ச் வெளிச்சத்தில் பார்த்தான். நேற்று பகல்தான் கிரிஜாவிடம் கொடுத்த ரொபிகளில் இரண்டு அவனுக்காக வைத்ததுபோல் இருந்தது. தான் இல்லையென்றாலும் தன்னைச் சந்திக்கும் இடத்துக்கு தன் காதலன் வருவானென்று நினைத்த கிரிஜாவின் காதலை நினைத்து அவன்

நெகிழ்ந்தான். ஏதோ நினைத்தவனாய் தன்னிடம் இருந்த தொலைத் தொடர்பு சாதனத்தின் மூலம் திருக்கோயிலில் இருக்கும் தன் சகாக்களில் ஒருவனுடன் தொடர்பு கொண்டான்.

இங்கிருந்து திருக்கோயில் வந்து சேர்ந்த அனைவருக்கும் உரிய உறைவிடம், உணவு, பாதுகாப்பு வசதி போன்ற அனைத்தும் ஒழுங்காக எந்த குறையுமில்லாமல் இருக்கின்றதா என்று கேட்டு தெரிந்து கொண்டான் தவராஜா. வயது போனவர்களுக்கும் குழந்தைகளுக்கும் மருந்துகள் தேவையென்ற கோரிக்கைக்கு மருந்துகளும் டாக்டரும் ஆற்று வழியாக தோணியில் வந்துகொண்டிருப்பதாகவும் திருக்கோயில் ஆற்றங்கரையில் வந்திறங்கும் மருந்துக்கும் டாக்டருக்கும் தகுந்த பாதுகாப்புக் கொடுக்கும்படி கூறிவிட்டு கடைசியாக கிரிஜாவுடன் கதைக்க முடியுமா என்று கேட்டான் தவராஜா.

"இந்த நேரத்திலா" ஆச்சரியப்பட்டது மறுமுனை குரல்.

"ம்... நான் கூப்பிட்டேன் என்றால் கிரிஜா கட்டாயம் வருவாள்."

தவராஜா சொல்லி பத்து நிமிடத்தில் கிரிஜா அவனின் தொலைத் தொடர்பு அழைப்பில் பேசினாள்.

"எப்படி இருக்கிறீங்க."

"இருக்கிறன்... நீ...?"

"ம்... இருக்கிறன். எங்க இருக்கிறீங்க.?"

"நீயும் நானும் ஒவ்வொரு இரவும் சந்திக்கிற அதே இடத்துலதான்...."

"......"

"என்ன பேசாமல் இருக்கிறாய்... ஏன் அழுகின்றாய் கிரிஜா... கிரிஜா..."

"ம்..."

"என்ன... சின்னபிள்ளை மாதிரி."

"என்ன ஏதோ சாப்பிடுற மாதிரி இருக்கே. என்ன சாப்பிடுறீங்க?"

அவள் ஆவலாய் கேட்டாள்.

"நீ எனக்காக வைத்துவிட்டு போன என் பங்கு ரொபி சாப்பிடுறன்."

"......"

"ஏன் எதுவும் பேசாமல் இருக்கிறாய். எப்படி இருக்கிறாய்? எங்கு தங்கி இருக்கின்றாய்?"

"ஒரு பாடசாலையில் தங்கி இருக்கிறம். உங்க அம்மாவையளும் எங்களோடதான் இருக்கினம். நேற்றிரவு ஒன்றாகத்தான் சமைச்சம். உங்கட அம்மாவும தங்கச்சியும் என்னோட கதைச்சாங்க. உங்கட அம்மாவுக்கு எந்த நேரமும் உங்கட கதைதான். நீங்க வருவீங்க என்று காத்துக்கொண்டிருக்கிறா. எப்ப வருவியள்?"

"நாளைக்கு காலையில வருவன் என்று அம்மாவிடம் சொல்லு. அம்மா எப்படி இருக்கிறா?" தவராஜாவின் குரல் தழுதழுத்ததை கிரிஜாவால் உணரமுடிந்தது.

"அம்மா சுகமாக இருக்கிறா. நீங்கதான் கவனமாய் இருங்கோ. நாளைக்கு கட்டாயம் வாங்கோ."

கிரிஜாவுடன் பேசிய நேரத்தில் இருந்து உடனே கிரிஜாவையும் அம்மாவையும் தங்கைகளையும் ஊரைப் பிரிந்துபோன தன் ஊர்ச்சனங்களையும் பார்க்கவேண்டும்போல தவராஜாவின் உணர்வு துடித்தது.

கிரிஜா அவனில் வைத்திருக்கும் காதலையும் அவள் தன்னோடு சேர்ந்து வாழத்துடிக்கும் அவசரத்தையும் நினைக்கும்போது தனது எதிர்காலம் நிச்சயமாக இன்பமயமானதுதான் என்று திடமாக எண்ணினான் தவராஜா.

"உங்கள் ரெண்டுபேருக்கும் விருப்பம் எண்டால் அந்தபுள்ளய ஏனடா தம்பி சும்மா காத்திருக்க வைத்து மனத நோகப்பண்ணுறாய். பெட்டை சம்மதிச்சால் நீ தையிரியமாய் கூட்டிக்கொண்டு வரவேண்டியதுதானே. ஆருக்குப் பயந்து இப்படி இருக்கிறாய். பாவம் அந்த பொட்டை."

இரண்டு நாட்களுக்கு முன் கிரிஜாவைப்பற்றி அம்மா சொன்னது தவராஜாவின் நினைவுக்கு வந்தது. கிரிஜாவின் தாய் தகப்பனின் சொத்து பற்றியோ காணி நிலத்திலோ அம்மாவுக்கு ஒரு துளியும் கவனமில்லை. தனக்கும் பெண் பிள்ளைகள் இருக்கிறார்கள் என்றும் அம்மா கவலைப்பட்டதில்லை. அம்மா ஓர் விநோதமான மனிஷி. யாருக்கும் எந்தக் கெடுதலும் நினைக்கமாட்டாள். யாரையும் கடுமையான சொல்லால் பேசமாட்டாள். தன் வீட்டுக்கு வரப்போகும் மருமகளை தான் மதிப்பதுபோல்தான் தன் பெண் பிள்ளைகளும் இன்னொரு வீட்டில் மதிக்கப்படுவார்கள் என்ற நம்பிக்கை அம்மாவுக்கு. அம்மாவுக்கு ஏற்ற மருமகள் கிரிஜாதான். கிரிஜாவுக்கு ஏற்ற மாமி அம்மாதான்.

விடிந்திருந்தது. விடியும்வரை ஊருக்குள் எந்தவிதமான அசம்பாவிதமும் நடக்கவில்லை. ஊர் எல்லையிலும் எந்தவிதமான தாக்குதலுக்கும் சந்தர்ப்பம் ஏற்படவில்லை என்று சகாக்கள்

சொன்னதில் சந்தோஷப்பட்டான் தவராஜா. என்னதான் ஆயுதப்போராட்டம் என்றாலும் தானும் ஓர் போராளிதான் என்றாலும் மனித உயிர்கள் துப்பாக்கிக்கு பலியாவதை விரும்பாதவன் தவராஜா. தன் கையால் எந்த உயிரும் பலியாகிவிடக்கூடாது என்பதற்காக எத்தனையோ சந்தர்ப்பங்களை தவிர்த்திருந்திருக்கிறான் என்பது அவன் மட்டும் அறிந்த ரகசியம்.

விடிந்துவிட்ட காலை பகல் பொழுதில் மீண்டும் ஒருதடவை ஊரை வலம் வந்தான். சனம் சத்தம் இல்லாத வீடுவாசல்கள் மாணவர்கள் இல்லாத வகுப்பறைபோல் உறங்கிக்கிடந்தது திருக்கோயிலுக்குப்போய் வருவோமா என்று சில நண்பர்களைக் கேட்டான். ஒரு சிலர் ஊருக்கு காவல் இருக்க ஒரு சிலர் தவராஜாவோடு புறப்பட்டார்கள். தற்போதைய நிலையில் ரோட்டால் செல்வது பாதுகாப்பல்ல. குறுக்கு வழியால் போகலாம் என்று நினைத்து ஆற்றுக்குள் இறங்கி இடுப்பளவு தண்ணீரில் நடந்து கழுத்தளவு தண்ணீரில் நீந்தி நாற்பதாம் கட்டை என்னும் ஊருக்குள் சென்று திருக்கோயிலுக்கு செல்லும் ரோட்டை அடைந்தபோது சுவருமற்ற வீடுகளுக்குள் இருந்து வெளிப்பட்ட இராணுவத்தினரால் தவராஜாவும் கூடப்போனவர்களும் சுற்றிவளைக்கப்பட்டார்கள்.

ஏற்கனவே திருக்கோயிலிலிருந்து ஊரின் நிலையை பார்க்க வந்த இருபது முப்பது இளைஞர்கள் கைகளும் கால்களும் கட்டப்பட்ட நிலையில் வீதி ஓரத்தில் இருத்தி வைக்கப்பட்டிருந்தார்கள். பொறியில் சிக்கிய எலிபோல் தவித்தது தவராஜாவின் மனம். அம்மா, கிரிஜா தங்கைகள் எல்லோர் முகங்களும் தண்ணீரில் தெரியும் பிம்பங்கள்போல் அவன் மனக்கண்முன் ஆடியது.

அவனுக்குத் தெரியும் இனி தப்ப முடியாதென்று. கொலை வெறிபிடித்தவர்களிடம் பிடிபட்டு வதைபட்டு வாழ்வதைவிட ஓடித் தப்பிவிடலாம். இல்லையேல் சுடுபட்டு செத்துவிடலாம்.

தன் அருகில் ராணுவம் நெருங்குவதை அவதானித்தான் தவராஜா. நண்பர்களைப் பார்த்தான். என்ன செய்வது என்பதுபோல் பார்த்தார்கள் அவர்கள். "திரும்ப ஓடுவோம் முடிந்தால் தப்புவோம் இல்லையேல் செத்து மடிவோம். கடைசிவரை இவர்களிடம் பிடிபடக்கூடாது." தவராஜா சொல்லி முடிப்பதற்குள் எல்லோரும் திரும்பி ஓடி ஆற்றுக்குள் பாய்ந்தார்கள். அவர்களை முந்திக்கொண்டு பாய்ந்தது துப்பாக்கி குண்டுகள்.

ஆற்றில் இருந்து இழுத்துவரப்பட்ட உடல்களை ஒவ்வொன்றாக ஒவ்வொரு வீட்டுக்குள் போட்டு வீட்டுக்கு தீயிட்டது ராணுவம். ஐம்பத்தாறு உடல்களுக்கும் ஐம்பத்தாறு வீடுகள் எரிக்கப்பட்டது.

ஐம்பத்தாறு பேர்கள் சுட்டுக் கொல்லப்பட்டு வீட்டுக்குள் போட்டு தீ வைக்கப்பட்டார்களாம். திருக்கோயிலுக்கு அகதியாக சென்றவர்களின் அடிவயிற்றில் தீ வைத்ததுபோல் இருந்தது செய்தி. யார்யார் இறந்தார்கள் என்பதைபோய் பார்த்து அறிந்துகொள்ள முடியாத பயங்கர நிலைமை.

காலையில் வருவேன் என்ற காதலன் தவராஜாவுக்காக காத்திருந்தாள் கிரிஜா. நேற்றிரவு என்னோடு கதைத்தார் இன்று வருவதாக உங்களிட்ட சொல்லச் சொன்னார் என்று தன்னிடம் சொன்னபோது கிரிஜாவை பரிவுடன் பார்த்தாள், தவராஜாவின் தாய். கிடைத்த செய்திகளை அறிந்து கண்கலங்கினார் தகப்பன். எதையும் மனைவியிடம் சொல்ல தையரியம் இல்லாமல் தனிமையில் அழுதார்.

மூன்று நாட்களின் பின் ஊர்வந்து சேர்ந்தபோது யார் யார் இறந்தார்கள் என்ற முழு விபரமும் அறியப்பட்டிருந்தது. மகன் போய்விட்டான் என்ற தவிப்பில் உணர்வற்று மயங்கி விழுந்தாள், தவராஜாவின் தாய். தங்கைகள் தாயை கட்டிப்பிடித்து கதறி

அழுதார்கள். சுவரில் தலையை முட்டி மோதி குலுங்கிக் குலுங்கி அழுதார் தகப்பன். ஊரெல்லாம் ஒப்பாரி ஓலம். எந்த வீட்டுக்கு முதல் போய் துக்கம் விசாரிப்பதென்று தெரியாமல் ஊர்ச்சனம் செய்வதறியாமல் திகைத்து நின்றார்கள்.

ஊருக்கு வந்ததும் கிணற்றடிக்கு ஓடினாள் கிரிஜா. அவள் அன்று வைத்துவிட்டுபோன ரொபிகளில் ஒன்றை தனக்காக மறைத்து வைத்துவிட்டு போனதைக்கண்டு கதறி அழுதாள். தாய் ஓடிவந்து கட்டிப்பிடித்து அரவணைத்தாள். அணைத்த கையை உதறி விலக்கிவிட்டு தாயின் முகத்தை முறைத்துப் பார்த்தாள் கிரிஜா. பயந்தவள்போல் விலகி நின்றாள் தாய்.

எவரிடமும் எதுவும் சொல்லாமல் தன் வீட்டைவிட்டு வெளியேறினாள் கிரிஜா.

கிரிஜா வருவதைக்கண்டதும் உணர்வற்று கிடந்த தவராஜாவின் தாய் உயிர்பெற்றவள்போல் எழுந்து நின்று இருகைகளையும் நீட்டி ஓவென அழுதாள். தவராஜாவின் தங்கைகள் ஓடிவந்து கட்டிப்பிடித்தார்கள். கிரிஜாவால் அழுகையை அடக்க முடியாமல் கதறி அழுதாள்.

உறவினர்கள் கொண்டுவந்து வைத்துவிட்டுபோன சாப்பாட்டை எடுத்து தவராஜாவின் தங்கைகளுக்கும் தகப்பனுக்கும் பரிமாறினாள் கிரிஜா.

தவராஜாவின் தாயை கிணற்றடிக்கு கூட்டிச் சென்று சுடுநீர் வைத்து முழுகவைத்து காய்ச்சிய கஞ்சியை பருகக் கொடுத்தாள். கையில் இருந்த கஞ்சிக் கோப்பையில் விழுந்த கண்ணீர்த்துளியுடன் நிமிர்ந்து பார்த்த தவராஜாவின் தாயை பரிவுடன் பார்த்தாள் கிரிஜா. அந்த பார்வையில் அவள் ஆயிரம் அர்த்தங்கள் புதைத்திருந்தாள். 'இனி நான் உங்கள் மகள். உங்கள் மருமகள். உங்கள் மகன்

இருந்த இடத்தில் என்னையும் வைத்துக்கொள்ளுங்கள். அவரின் நினைவாக உங்களுடனேயே இருந்து விடுகிறேன்.' இப்படி பல வார்த்தைகள் பேசியது கிரிஜாவின் கண்கள்.

ஊரவர்கள் எல்லோரையும் அனுப்பிவிட்டு ஊருக்கு காவல் இருந்த மகன் இப்போது உலகை விட்டே போய்விட்டான். அந்த தாயைப் பொருத்தவரையில் அந்த ஊர் இப்போது மழையில் நனைந்த தீ பிடித்த காடுபோல். வெள்ளம் வற்றிய கரையோரத்து புல்தரைபோல் எதையோ இழந்த வெறுப்பாய் மயானமாய் இருந்தது. கிரிஜாவை நிமிர்ந்து பார்த்தாள். அவள் மயானத்திலும் ஓர் மலர் வனமாய் காட்சியளித்தாள் கிரிஜா. தவராஜா இப்போதும் வாழ்வதாய் நினைத்துக் கொண்டிருக்கிறாள் அந்த தாய், கிரிஜா வடிவில்.

# குருதி சங்கமம்

"ஏண்டி சோனக தெருவுக்குள்ளபோன ரெண்டு மூணு தமிழ் பொட்டைகள சோனகப் பொடியன்கள் இளுத்துக்கொண்டு போறாங்களாமே மெய்தானோடி."

மேல்சட்டை இல்லாத திறந்த வெளி மார்பகங்கள் ஆட ஆச்சி சொல்வதை கேட்க அம்மாவுக்கு நெஞ்சில் ஏதோ செய்தது.

அம்மாவுக்குத் தெரியும் ஆச்சி சொல்வது வெறும் பொய் என்று. தான் சொன்னதை கேட்காமல் குமர்ப்பிள்ளைகள் மூவரையும் சோனகர் தெரு எல்லையில் இருக்கும் காளி கோயிலுக்கு அனுப்பியதில் ஆச்சிக்கு அம்மாவில் கோபம்.

நடக்க முடியாத சம்பவங்களை கற்பனை பண்ணுவதிலும் நடக்காத விசயங்களை நடந்ததாகச் சொல்வதிலும் ஆச்சிக்கு நிகர் ஆச்சிதான். ஆச்சிக்கு இப்போது எண்பது வயது. உலகத்தில் ஏதோதோ என்னென்னவோ நடக்கின்றது என்ற கற்பனையிலேயே ஆச்சி தன் வாழ்க்கையை கடத்திக் கொண்டிருக்கின்றாள்.

ஒரு இடத்தில் இருப்பதென்பது ஆச்சிக்கு பிடிக்காத விசயம். எந்த நேரம் ஓட்டமும் நடையுமாய் திரிந்து தகவல்கள் சேகரிப்பதென்பது ஆச்சிக்கு பிடித்த விசயம். நடந்து செல்லும்போது காதில் விழும் அரைகுறை விசயங்களுக்கு காது மூக்கு வைத்து அதை ஒரு செய்தியாக வீட்டுக்கு கொண்டுவந்து சேர்ப்பதில் ஆச்சிக்கு அலாதி விருப்பம். ஆச்சியின் பட்டபெயர்கூட இலங்கை வானொலி. ஆச்சியின் பொய் செய்திகளை கேட்டு சிரிப்பதற்கென்றே

ஊரில் ஒரு வாலிப பெடியன்கள் கூட்டமே இருக்கின்றது. தங்களுக்கு பொழுது போகாத வேளைகளில் ஆச்சியைக்கூப்பிட்டு ஊர்ச்செய்திகளை (பொய்யான) கேட்டு சிரிப்பது அவர்கள் வழக்கம்.

"ம்... இன்னேரம் என்ன செய்தான்களோ... இனி அந்த குமருகள கண்டுபிடிக்கிறதும் கடலில் போட்ட காச பொறுக்கி எடுக்கிறதும் ஒண்டுதான். அப்பிடித்தான் தப்பித்தவறி வந்தாலும் இனி என்னத்துக்கு ஆகுமோ...ம்... நூறுதரம் சொன்னேனே குமர்ப்பிள்ளைகளை தனிய அனுப்பாதயடி அனுப்பாதயடி எண்டு, கேட்டாளோ இவள். கலிகாலம் முந்திப்போய் அவளுகளும் திமிர் பிடிச்சு போனாளுகளே, ஐயோ நான் என்ன செய்வன்." நடவாத சம்பவத்துக்காக - நடக்கக் கூடாத ஒரு சம்பவத்துக்காக ஆச்சி வாசலை சாவீடாக்கி ஒப்பாரி வைப்பதைப் பார்க்க எனக்கு சிரிப்பு ஒருபுறமும் கோபம் ஒருபுறமுமாக வந்தது. ஆச்சி குமர்ப்பிள்ளையாக இருந்த நேரம் தனது பக்கத்து வீட்டு பெட்டையை குதிரையில் வந்த வெள்ளைக்கார துரைமார் தூக்கி கொண்டு போனார்களாம். அன்றிலிருந்து இன்றுவரை ஆச்சிக்கு அந்த கால வாழ்க்கையிலேயே வாழ்வதாக ஒரு நினைப்பு.

"ஐயோ பொழுதும் செக்க மக்கலாய் போகுதே. இனி என்னெண்டு வருவாளுகளோ...."

பின்னேர நான்கு மணிபொழுது ஆச்சியின் இருண்ட கண்களுக்கு இருண்டு விட்டதை நினைத்து நானும் அம்மாவும் சேர்ந்து சிரித்தாலும் அம்மாவின் முகத்தில் கவலை தெரிவதை நான் தெரிந்துகொண்டேன். காரணம் சில விசயங்கள் ஊருக்குள் காட்டுத் தீயாய் பரவிக்கொண்டிருப்பதுதான்.

ஒரு மணி நேரமாய் ஊருக்குள் ஒரு வதந்தி. வயல்வெளிக்குள் இரண்டு முஸ்லீம்களை தமிழர்கள் வெட்டி சாகடித்து விட்டார்களாம்.

முஸ்லீம் பகுதிக்கு கட்டிட வேலைக்கு சென்ற இரண்டு தமிழர்களை முஸ்லீம்கள் சாகடித்து விட்டார்களாம்.

பஸ்ஸில் வந்தவர்களை இறக்கி மருதமுனைக்குள் ஓடவிட்டு அடித்தார்களாம்.

கல்முனையில் இருந்து சம்மாந்துறைக்கு போன பஸ்சை நிறுத்தி காரைதீவுக்குள் வைத்து கொளுத்தி விட்டார்களாம். இப்படியாக இன்னும் பல வதந்திகள் ஒவ்வொரு ஐந்து நிமிடங்களுக்கும் ஒரு தடவை வந்துகொண்டிருப்பதுதான் அம்மாவின் முகத்தில் தெரியும் பயத்துக்குக் காரணம். உண்மையிலேயே ஊர் ஓர் பதட்ட நிலைமையில்தான் இருக்கின்றது. இந்த பதட்டம் இந்த ஊர் பகுதிக்கு ஒன்றும் புதிதல்ல. இது ஒவ்வொரு வருடமும் ஏற்படுவதுதான்.

வருடம் முழுவதும் முஸ்லீம்களும் தமிழர்களும் சகோதரர்களாக பழகுவார்கள். பொங்கல் தீபாவளி காலங்களில் பால் பொங்கலும் பலகாரங்களும் முஸ்லீம் பகுதிக்கு செல்லும். பெருநாள் காலத்தில் மஸ்கற்றும் தொதளும் தமிழ் பகுதிகளுக்கு செல்லும். இவர்களின் சாமத்திய கல்யாணத்தில் அவர்களும், அவர்களின் சுன்னத்து சடங்கில் இவர்களும் கலந்து சிறப்பிப்பார்கள். கடைசியில் அந்த மழைக்காலத்தில் வயல்வெளிப் பயிர்கள் விளைந்து அறுவடைக்கு காத்திருக்கும் நேரத்தில், அறுவடை முடிந்து விளைந்த பயிர்களை காசாக்கும் நேரத்தில் காட்டுவெள்ளம் வந்து ஆற்றுவெள்ளம் பெருகி முகத்துவாரம் உடைந்து ஆற்று நீர் கடலுடன் கலக்கும். அந்த சங்கம காலத்தில் சொல்லிவைத்தால்போல் இருபகுதிக்குள்ளும் இருக்கும் காடைய விசமிகளால் உருவாக்கப்படும் முஸ்லீம் தமிழ் கலவரத்தால் இருபகுதியுமே பகைமை கொண்டுவிடும். வெட்டுக்குத்து, வழிப்பறி கொள்ளை, கொலை இவைகளின் பின்னால் இரண்டு பகுதி மதத்தலைவர்களும் கூடி சமாதானம்பேசி பிரச்சினையை முடித்த பின்பு மீண்டும்

சந்தோசமான பழைய வாழ்க்கை. இது இன்று நேற்றல்ல பல வருடங்களாக நடக்கும் விமோசனமில்லா சாபக்கேடு.

இன்றும் அப்படித்தான் தொடங்கிவிட்டது என்பதற்குரிய வதந்திகள் வந்துகொண்டிருக்கின்றன. நம்பாமலும் இருக்க முடியவில்லை. காரணம் அறுவடைக்காலம் தொடங்கிவிட்டது. முகத்துவாரம் ஓடத் தொடங்கிவிட்டது. கலவரமும் தொடங்கிவிட்டது என்பதுபோல் கிடைக்கும் வதந்திகள் உண்மையை உணர்த்துவது போலவே இருந்தது.

றோட்டில் வாகனங்கள் ஒன்றன் பின் ஒன்றாக வேகமாக செல்லும் சத்தம் கேட்கின்றது. ஒவ்வொரு வருட கலவரத்திலும் முதல் அறிகுறி அதுதான். வயல் வரப்புகளுக்குள் நின்றவர்கள் கலவரம் தொடங்கும் முன் வீடுபோய்ச் சேர்ந்துவிடவேண்டும் என்ற அவசரம்தான் அது.

"என்னவாம் உண்மைதானாமோ?" ஆச்சிக்கு கேளாமல் றோட்டுப் பக்கம் போய்வந்த என்னிடம் ரகசியமாய் அம்மா கேட்டாள்.

"ஆட்களின்ர கதையப்பார்த்தா எங்கோ ஏதோ என்னவோ நடந்திருக்குபோலத்தான் இருக்கம்மா. அதுசரி இவன் தம்பி ருத்ரன் எங்க போயிட்டான்?" நான் அம்மாவிடம் கேட்டேன்.

"அதுதானே எனக்கும் பயமாய் இருக்கு. ரியூசன் முடிஞ்சு வந்தவன அவன்ட சினேகிதன் முகமட் வந்து முகத்துவாரம் பார்க்க எண்டு கூட்டிக்கொண்டு போனான். இன்னும் காணயில்ல ஐயோ கடவுளே. இவன் எங்கேயோ எவடத்திலேயோ முருகா." அம்மா தலையில் கைவைத்து முருகனை கூப்பிட்டாள்.

முகத்துவாரம் ஓடத்தொடங்கினால் கடலில் ஆற்று நீர் கலக்கும் அழகை ரசிக்க குடும்பத்துடனும், பெடியன்களும்

பெட்டைகளும் கூட்டம் கூட்டமாக செல்வது வழக்கம். முகத்துவாரம் ஓடும் அந்த ஆறேழு நாட்களும் அந்த இடமே திருவிழா போல்தான் இருக்கும். கடலுக்குள் இருந்து ஆறுக்குள்ளும் ஆற்றுக்குள்ளிருந்து கடலுக்குள்ளும் துள்ளி பாயும் மீன்களை பார்க்க கண்கொள்ளாக் காட்சியாய் இருக்கும்.

"ம்... இனியும் எங்க வர போறாளுகள், அது போனது... போனதுதான்... இப்படி அடங்காத குமருகள பெத்து வளர்க்குறதவிட ஒரு துளி நஞ்சு குடிச்சு சாகலாமேடி. ஏண்டி... நான் ஒருத்தி நாயாகக் கத்துறன்; நீ உண்டபாட்டுக்கு மல்லாந்து வானத்த பார்த்துக்கொண்டிருக்கிறேயடி. உனக்கு ஒரு யோசனை இல்லையாடி." ஆச்சியின் அர்ச்சனை முடியுமுன்பே கையில் காளிகோயில் பிரசாதங்களுடன் வந்த தங்கைகளை கண்டதும் ஆச்சி முகத்தை தோளில் இடித்துக்கொண்டாள்.

"இவ்வளவு நேரத்துக்கும் எங்க போன. னீங்கள் ஏதும் பிரச்சினை எண்டு கேள்விப்பட்டீங்களோடி." அம்மா தங்கைகளிடம் கேட்டதை அவன் கேட்டுக் கொண்டிருந்தான்.

"ஏதோ பிரச்சினைபோலதான் இருக்குதம்மா. தனிய போகவேண்டாம். நான் கொண்டுபோய் விட்டுவிடுறன் எண்டு சொல்லி அண்ணாட சினேகிதன் பாறூக் எங்கள கூட்டிக்கொண்டு வந்து விகாரை வரைக்கும் விட்டுட்டு போனான். நாங்க வரும்போது கெதியா வீட்டபோங்கோ எண்டு ஆட்களெல்லாம் சொன்னாங்கள். மூத்த தங்கை சொல்ல சொல்ல அம்மா என் முகத்தையே பார்த்தாள்."

"சோனக குழப்பம் தொடங்கிற்றுதாம். அக்கரைப்பற்று சந்தைய கொளுத்திப்போட்டான்களாம். எல்லாரும் வெளிக்கிடுங்கடா! வயல்பக்கம் போய் அவனுகள ஒருகை பார்ப்பம்." ஒரு சண்டியனின் பலத்த குரல் வீட்டு வாசல்வரை கேட்டது.

"ஐயோ மகனே போராசா. போய் தம்பி எங்கெண்டு பாரப்பா. போமகனே. என்ர பிள்ளை எ்ங்க நிக்கிறானோ. போடா.

போய் தம்பிய பாருடா.'' அம்மா சொல்லி முடிக்கும்முன்பே நான் சைக்கிளை எடுத்துக்கொண்டு வெளியில் வந்து விட்டேன்.

நான் முகத்துவாரத்துக்குபோய்க் கொண்டிருந்தேன். முகத்துவாரத்திலிருந்து வாகனங்களிலும் சைக்கிள்களிலும் ஆட்கள் வந்துகொண்டிருந்தார்கள். எவரிடமும் எதுவும் கேட்க முடியாதளவுக்கு எல்லோரும் அவசரமாக ஓடிக்கொண்டிருந்தார்கள். மிகவும் தெரிந்த சிலர் என்னைக்கண்டதும் என்னோடு திரும்பி வந்தார்கள். நான் ஏன் என்று கேட்கவில்லை.

நான் முகத்துவாரத்தை அடைந்துவிட்டேன். அங்கும் இங்கும் கலைந்தோடும் சனங்களுக்குள் தம்பி ருத்திரனை தேடுகின்றேன். எங்கும் காணவில்லை. தெரிந்த சிலரிடம் கேட்கிறேன். தெரியாது என்ற பதில் கிடைக்கின்றது. நான் சனங்களுக்குள் என்னை உள்ளிட்டு தம்பியை தேடுகின்றேன். எங்கும் காணவில்லை அவனை.

தூரத்தில் கடலும் ஆற்று நீரும் சங்கமமாகும் இடத்தில் சனத்திரள் ஒரு பொலிஸ் ஜீப்பை சுற்றி வளைத்துக்கொண்டு நிற்கின்றது. நான் அந்த சனக்கூட்டம் திரண்டிருந்த இடத்தை நெருங்கி சனங்களின் முதுகுகளுக்கு மேலால் முகத்தை தொங்கவிட்டு இடத்தின் மையத்தை பார்க்கின்றேன். ஆற்று நீரும் கடல் நீரும் சங்கமமாகும் அந்த தெளிந்த நீர் இடத்தில் இரண்டு உடல்கள் நீர் அலைகளில் ஆடி அசைந்துகொண்டு கிடக்கின்றன. நன்றாக உற்றுப் பார்க்கின்றேன். அது... அது... தம்பியின் சினேகிதன் முகமட்டின் உடல். உடல் முளுவதும் வெட்டுக்காயங்களுடன் உயிர்பிரிந்த நிலையில் தண்ணீரில் அசைந்தாடிக்கொண்டிருக்கும் முகமட்டின் உடலுக்கு அருகில் ஓடிய நான் அருகில் கிடக்கும் மற்ற உடலைக் கண்டதும் ஓ... என்று அலறிக்கொண்டு அள்ளி அணைக்கின்றேன். உயிர் பரிந்த என் உயிர் தம்பியின் உடலை உலுக்குகின்றேன். நீருடன் ரத்தமும் சிந்தி சிலிர்க்கின்றது. "அம்மா... அம்மா... தம்பி... தம்பி!''

தம்பியின் உடலை மடியில் கிடத்திவிட்டு தம்பியின் சினேகிதன் முகமட்டின் உடலை இழுக்கின்றேன். அது கஸ்டமின்றி லேசாக என்னருகில் மிதந்து வருகின்றது.

"என்ன நடந்தது என்பதை கண்ணால் கண்ட நேரடி சாட்சி யாராவது இருக்கிறீர்களா?"

பொலிஸ் காரரில் ஒருவர் வழமையான கேள்வியை கேட்டார். "ரெண்டு பேரும் கூட்டாளிகள். கன நேரமாய் ஆளுக்காள் தண்ணி எறிந்து, மண் எறிந்து கட்டிப்பிடித்து உருண்டு புரண்டு சண்டைபிடித்து விளையாடிக் கொண்டிருந்தாங்கள். கத்தி கம்புகளோட திடீரென வந்த ரண்டு கோஸ்டியும் இந்த பெடியகள் விளையாடினத தமிழ் முஸ்லீம் பெடியன்கள் ரெண்டுபேரும் சண்டை பிடிக்கிறார்கள் எண்டு நினைச்சு ஆளுக்காள் அடிச்சு சாக்காட்டிப் போட்டான்கள்."

கூட்டத்தில் ஒருகுரல் சொல்வது என் காதுகளுக்கு கேட்கின்றது. கடல் நீரும் ஆற்று நீரும் சங்கமமாகும் அந்த இடம் மட்டும் சிவப்பு நிற நீரில் நிறைந்திருந்தது. எனக்கு தெரியவில்லை இதில் என் தம்பியின் ரத்தம் எது என்று. தம்பியின் சினேகிதன் ரத்தம் எது என்று. ஆம் அது குருதி நீர் சங்கமம். அதை என்னவென்று பிரிப்பதும், அடையாளம் காண்பதும்.

நான் நினைத்துக்கொண்டேன். மீண்டும் மழைக்காலம் வரும், அறுவடை தொடங்கும். முகத்துவாரம் ஓடத் தொடங்கும். கடல் நீரும், ஆற்றுநீரும் சங்கமிக்கும். குருதிகளும் சங்கமமாகும். இது என் ஊரின் விமோசனமில்லாத சாபக்கேடு. மனித மனங்கள் சங்கமம் ஆகும் வரையில் இந்த சங்கமங்கள் தொடரும்.

# நறுவிழியாள்

நடு ஊருக்குள் முச்சந்தி தெருவோரத்தில் நிற்கின்றேன். இப்போதெல்லாம் என்னை யாரும் கவனிப்பதில்லை. ஆனால் நான் மட்டும் எல்லோரையும் கவனித்துக்கொண்டே இருக்கின்றேன்.

கொஞ்சம் மெலிந்து விட்டேன். முதுமை என்னை முத்தமிடத் தொடங்கிவிட்டது என நினைக்கின்றேன்.

ஒரு காலத்தில் எப்படி இருந்த நான் இப்படியாகி விட்டேனே என்பதை நினைக்கும்போது வேதனையாகத்தான் இருக்கின்றது. அந்த வேதனையிலும் ஒரு சுகம் தெரிகின்றது என்ற உண்மையையும் என்னால் மறைக்க முடியவில்லை.

இளம் தளிர் பச்சை இலைகளுடன் கிளை பரப்பி பூத்துக்குலுங்கி நான் நின்ற அந்த நாட்களில் என்னை நாடிவந்தவர்கள் எத்தனைபேர், என்னை காதலித்தவர்கள் எத்தனைபேர், என் காலடியில் தவம் கிடந்தவர்கள் எத்தனைபேர், என் துகிலுரிந்து துச்சாதனம் செய்து என்தோலெடுத்து ஊறல் வைத்து தன் தேக நோவுக்கு மருத்துவம் பார்த்தவர்கள் எத்தனைபேர். எனது மகத்துவத்தை எல்லோரும் மறந்தாலும் நான் மட்டும் எதையும் எவரையும் மறக்கவில்லை.

ஏனோ தெரியவில்லை எனக்கு இந்த ஊரை நன்றாக பிடிக்கும். இது எனது கடைசிக்காலம் என் ஆணிவேர் அறுந்து நான் அடியோடு சாய்ந்துவிடும் முன்னே. என் அடி மனதில் புதைந்து

கிடக்கும் எனது அனுபவ நிகழ்வுகளையும் என் வாழ்நாளில் நான் கண்டவர்களில் சிலரையும் உங்களிடம் சொன்னால் என் மனச்சுமை நீங்கும் என்று நினைக்கின்றேன். ஏழை திநகரின் பாள் வளவுக்குள் செடிகளுக்கு நடுவே ஒழிந்துகிடந்த நான் திநகரிடம் விலைக்கு வாங்கிய சீனித்தம்பி மாஸ்டரின் கிருபையால் வெளியில் வந்து வாழ்வுபெற்றேன்.

என்னை முன்னால் நிறுத்தி சீனித்தம்பி மாஸ்டர் கட்டிய கட்டிடம் என்னால் அழகு பெற்றதென்றும் கட்டிடத்தால் நான் அழகு பெற்றேன் என்றும் / இல்லை. எங்கள் இருவராலும் அந்த தெருவே அழகு பெற்றதென்றும் மற்றவர்கள் சொல்லும் போதெல்லாம் நான் எவ்வளவு பெருமை கொண்டிருப்பேன்.

நான் இருக்கும் தெருவின் அடுத்த பக்கத்தில் என்னைப் பார்த்தபடி இருப்பது பெருமாள் மாமாவின் தேனீர்கடை. பெருமாள் மாமா அதிகாலையில் எழுந்து கடைதிறந்து நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு கடை மூடும்வரை அவரின் கடையில் நடக்கும் சம்பவங்களை ரசித்துப்பார்த்தால் ஒரு முளுநீள நகைச்சுவை நாடகம் பார்க்கும் உணர்வே ஏற்படும். தன்னிடம் கடனுக்கு தேனீர் கேட்பவர்களுக்கும் பெருமாள் மாமா சொல்லும் வசை மொழி வேடிக்கையாகவும் ரசிக்கக்கூடியதாகவும் இருக்கும்.

பெருமாள் மாமாவுக்கு நான் எத்தனையோ தடவை கடமைப்பட்டிருக்கிறேன். அவர் எனக்கு உயிர்பிச்சை கொடுத்தவர். என் கிளைகளில் பழுத்து தொங்கும் பழங்களை பறித்து பசையாக்கி தன் கட்டிடச்சுவர்களை அசிங்கம் செய்யும் சிறுவர்களின் அடாவடித்தனத்தினால் ஆத்திரம் கொண்டு உன்னால்தானே இதெல்லாம் என்று என்னில் கோபம்கொண்டு என்னை வெட்டிச் சாய்க்க கத்தியுடன் வரும் சீனித்தம்பி மாஸ்டரை தடுத்து நிறுத்தி திருப்பி அனுப்பி எத்தனையோதரம் எனக்கு உயிர் பிச்சை கொடுத்தவர். இந்த பெருமாள் மாமாதான். இன்றுவரை நான்

உயிரோடு வாழ்கின்றேன் என்றால் அதற்கு காரணமே பெருமாள் மாமாதான்.

கடகடத்த ஓசையுடன் வயல் செல்லும் வண்டிகளுடன் மாமா கடை திறக்கும் அந்த அதிகாலைபொழுது ஓர் அழகான காட்சிதான்.

அறுவடை காலங்களில் என் காலடி ஓர் குட்டி சந்தையாகிவிடும். மாங்காய், தேங்காய், மரவள்ளி இவைகளை குவித்து விற்கும் அந்த வேளைகளில் என்னை நினைத்து நானே பெருமைபட்டுக்கொள்வேன்.

விடிந்ததும் வேலைக்கு செல்லும் விவசாயிகள், வேட்டியுடன் ரோட்டுக்கு வரும் ஊர்ப்பெரிய மனிதர்கள், சீருடை அணிந்து பாடசாலை செல்லும் மாணவர்கள், கணவனை எதிர்பார்த்து என்காலடியில் தவம் நிற்கும் மனைவி, இப்படி எத்தனை காட்சிகள் என் மனதை கவர்ந்திருக்கின்றன.

என்னால் மறக்கமுடியாத சில நிகழ்வுகளும் என் மனதில் நிழலாடுகின்றன.

ஜாதிச்சண்டை, இனக்கலவரம், சோனகக்குழப்பம் இப்படியான பெயர்களில் இந்தப் பிரதேசங்களில் எத்தனையோ கலவரங்கள் வெடித்திருக்கின்றன. அதற்கெல்லாம் காரணம் ரவுடிகளை வளர்த்து அவர்களை ஏவிவிட்டு வேடிக்கை பார்க்கும் சிலரின் விசமத்தனம்தான்.

இருபத்தைந்து வருடங்களுக்குமுன் இந்த விசமிகளால் ரவுடிகாளக வளர்க்கப்பட்ட மம்மாலி, புள்ளியாதம், அயாத்து, முத்து போன்றவர்களும் மனிதர்களாக வாழத்துடித்த மனிதர்கள்தான் என்பதை அவர்கள் இரவில் வந்து என்னிடம் சொன்ன கதைகளின் மூலம் தெரிந்துகொண்டேன். அவையெல்லாம் கால் நூற்றாண்டுக்கு முன்பு நடந்த என் மனதில் நிழலாடும் ஒரு கதைகள்.

அதன் பின்புதான் எத்தனை மாற்றங்கள், எத்தனை இளைஞர்களின் வரவுகள், எத்தனை சிந்தனைகள். அத்தனையும் குறிப்பிட்ட கடந்தகால சில வருடங்களுக்குள் நடந்தவைகள்.

என்னைக் கட்டிப்பிடித்தவர்கள், எனக்கு முத்தம் கொடுத்தவர்கள், என் தோளில் ஏறி நின்று எனது கிளையை முறித்தவர்கள். என் தோலை உரித்து காயம் செய்தவர்கள். இப்படி எனக்கு எத்தனையோ செய்தவர்களையெல்லாம் நான் மறந்துவிட்டேன். ஆனால் என்னால் மறக்க முடியாதவர்கள் எனக்கு எதுவுமே செய்யாமல் இரவு வேளைகளில் என் காலடியில் அமர்ந்து கொண்டு ஊர் விசயம் பேசிய அந்த ஒரு சிலர்தான்.

இரவு நேரங்களில் என்னருகில் வரும் சில இளைஞர்கள் காதல் பற்றி பேசுவார்கள். தங்கள் எதிர்காலம் பற்றி பேசுவார்கள். ஆனால் ஊரைப்பற்றியும் ஊரின் முன்னேற்றம் பற்றியும் பேசுபவர்கள் நான்கைந்து பேர்கள் மட்டும்தான். அந்த ஊரைப் பற்றியும் அந்த ஊருக்காக அவர்கள் செய்ய நினைத்த நல்ல செயல்களின் சிந்தனைக்கும் நான் சாட்சி.

அவர்கள் சுரண்டலுக்கு எதிரானவர்கள். அராஜகங்களுக்கு எதிரானவர்கள். அப்பாவி பொது மக்களுக்கு ஆதரவானவர்கள். அதற்காக அவர்கள் சினிமா கதாநாயகர்கள்போல் நடந்துகொள்ளவில்லை. அவர்களின் நடவடிக்கை முழுதும் சுவரில் எழுதுவதும் சுவரொட்டி எழுதுவதுமாகவே இருந்தது. இதைத்தவிர அவர்களால் எதுவும் செய்ய முடியாது. இதையும் மீறி வெளிப்படையாக நேரடியாக கேள்வி கேட்டால் தங்களை தண்டிப்பதற்கு ஆட்கள் இருக்கிறார்கள் என்பதை அவர்கள் அறியாமல் இல்லை.

இப்போதும் நிமிர்ந்து பார்க்கிறேன். சீனித்தம்பி மாஸ்ரரின் கட்டிட சுவரை, பத்து வருடங்களுக்கு முன்பு இரவு வேளையில் வந்து மாங்கொட்டையால் எழுதிவிட்டுப்போன அவர்களின் எழுத்துக்கள் தெரிவது போன்ற பிரமை ஏற்படுகின்றது எனக்கு.

எனக்கு நன்றாக நினைவிருக்கின்றது. அப்போது ஒரு தடவை விடாது பெய்த மழையினால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் காரணமாக ஊருக்குள் ஏற்பட்ட பஞ்சத்தின் அரசாங்க நிவாரண உணவு பொருட்களை வினியோகிக்க நியமிக்கப்பட்ட அரச உத்தியோகத்தர்களே இரவோடு இரவாக விற்று காசாக்கிவிட்டதை இவர்கள் அறிவார்கள். அவர்களால் ஒன்றும் செய்யமுடியாது. எம். ஜி. ஆரின் படப்பாடலைச் சுவரில் எழுதுவதைத் தவிர அவர்களுக்கு வேறோரு வழியும் தோன்றவில்லை.

**"தோட்டம் காக்க போட்ட வேலி பயிரை தின்பதோ**
**அதை கேள்வி கேட்க ஆளில்லாமல் பார்த்து நிற்பதோ?"**

இரவோடு இரவாக அவர்கள் சுவரில் எழுதிய அந்த எம். ஜி. ஆர். படப்பாடல் வரிகளை விடிந்ததும் ஊரே கூடி நின்று வேடிக்கை பார்த்ததை நான் இன்னும் மறக்கவில்லை. இதன்பின் எத்தனையோ சம்பவங்களுக்காக அவர்கள் சுவரில் எழுதிய வாசகங்கள் என் நினைவில் நிற்கின்றன. வருடங்கள் ஓடின. ஊரின் பிரச்சினைகள் வேறு ரூபம் பெற்றன. அவைகளையெல்லாம் அவர்களால் எதிர்க்க முடியவில்லை. இப்போது அவர்களும் இல்லை. ஆனால் அவர்கள் கடைசியாக ஒட்டிய சுவரொட்டியும் அதற்குரிய சம்பவங்களும் என்னால் இன்றும் மறக்க முடியாதது.

ஊர் அடங்கிய நேரம். நானும் என் இலைகளை ஒடுக்கிக் கொண்டு உறங்கிக் கொண்டிருந்தேன். திடீரென வந்த ஆயுதம் ஏந்திய குழு ஒன்று சுவரில் ஒட்டி விட்டுச் சென்ற சுவரொட்டியை உற்றுப் பார்த்தேன். 'அடையாளம் தெரியாதவர்களால் அநியாயமாக கொல்லப்பட்ட சீனித்தம்பி ஆசிரியரின் மறைவுக்கு எங்களின் ஆழ்ந்த அனுதாபங்கள்.'

ஒட்டப்பட்ட சுவரொட்டியின் வாசகங்கள் என்னை நடுங்கச் செய்தது. 'சீனித்தம்பி மாஸ்ரர் எப்போது இறந்தார். யாரால் கொல்லப்பட்டார். ஏன் இந்த அவசர சுவரொட்டி.

நான் விக்கித்து நிற்கையிலே விடிந்து விட்டது. ஊரே அழுதது. அல்லோல கல்லோலப்பட்டது. கூடிநின்றவர்கள் பேச்சிலிருந்து மாஸ்ரர் எத்தனை மணிக்கு வெட்டி கொல்லப்பட்டார் என்ற செய்தி என் காதில் விழுந்தது. விறைத்து நின்றேன் ஒருகணம். தாங்கள் செய்யும் கொலைக்கு தாங்களே அனுதாபம் தெரிவித்து, அதுவும் கொலைசெய்யும் முன்னே சுவரொட்டி ஒட்டிய அராஜகத்தை நினைத்து வேதனையில் துடித்தேன். முன்பெல்லாம் மாஸ்ரர் என்னை வெட்ட வந்தநேரம் தடுத்த பெருமாள் மாமாவை நினைத்து கோபப்பட்டேன். ஊரில் உள்ள அந்த நான்கைந்து இளைஞர்களும் எதுவுமே பேசாமல் ஊமையாக அழுதார்கள்; நானும் அழுதேன்.

மாஸ்ரர் இறந்து 31-ம் நாள் நெருங்கிவிட்டது. முப்பதாவது நாள் இரவு வந்து அந்த அப்பாவி இளைஞர்கள் ஒட்டிச் சென்ற அவர்களின் அந்த கடைசி சுவரொட்டியை உற்றுப் பார்த்தேன்.

வீணை யொன்று அறுத்த நிலையில், வீணையின் தந்திகள் அறுக்கப்பட்டு புத்தகங்களின் பக்கங்கள் கிழித்து எறியப்படுவது போல் கண்ணீர்வடிக்கும் இரண்டு கண்களுடன் வரையப்பட்ட ஒவியத்தின் கீழ்,

கல்வித்தாயவளோ கண்ணீர் வடிக்கின்றாள் தன் கையில் உள்ள பொருள் கலைந்து போனதென்று. இப்படி எழுதி ஒட்டப்பட்ட அவர்களின் அந்த கடைசி சுவரொட்டிக்கு பின்பு நான் இதுவரையில் அவர்களையும் காணவில்லை. பெருமாள் மாமாவும் வருத்தமாய்க் கிடந்து இறந்துவிட்டார்.

என்னை வளர்த்த மாஸ்டர். என்னை பாதுகாத்த பெருமாள் மாமா, நான் பார்த்து ரசித்த அவர்கள். இவர்கள் எவருமே இல்லாத இந்த ஊரில் எனக்கு இருக்க பிடிக்கவில்லை. இங்கே நடப்பவைகளை என்னால் பார்க்க முடியவில்லை. நான் வாழ்ந்தது போதும் இனியும் எனக்கு இங்கு இருக்க பிடிக்கவில்லை. என்னை

எடுத்துக் கொள் என்று இயற்கையிடம் கெஞ்சினேன். 'இல்லை உன் காலம் முடியும் வரை நீவாழ்ந்துதான் ஆகவேண்டும்' என்று இயற்கை என் வேண்டுகோளை நிராகரித்து விட்டது.

ஒரு காலத்தில் நறுவிழியாள் என்ற பெண்மை பெயரோடு பெருமையாக வாழ்ந்த நான் இப்போது வெறும் நறுவிழி மரம் என்ற பெயரை எனக்கு நானே சூட்டிக்கொண்டு என் நாட்களை கடத்துகின்றேன். நான் வாழும் இந்த நாட்களுள்ளாவது அவர்களில் ஒருவனைக் காண்பேனா?

அதோ... அதோ... சீனித்தம்பி மாஸ்டர் மோட்டார் சைக்கிளில் பாடசாலை செல்கிறார். அதோ... அதோ... அவர்கள் வருகிறார்கள். என் காலடியில் வந்து விட்டார்கள். இதோ... இதோ... மீண்டும் பழையபடி பழைய கதைகள் கதைக்கின்றார்கள். நான் குனிந்து பார்க்கின்றேன். என் காலடி வெறிச்சோடிக் கிடக்கின்றது. எனக்குள் அழுகை வருகின்றது. இப்போதெல்லாம் நான் இப்படித்தான். பழைய நினைப்பில் பிதற்றுகின்றேன். ஏதோ எதிர்பார்ப்பில் எனக்குள் நானே பைத்தியம் போல் கதைக்கின்றேன். எனக்கு தெரிகின்றது இது என் கடைசிக் காலம் என்பது. இனியும் நான் வெகுகாலம் வாழமாட்டேன் என்பது எனக்கு தெரிகின்றது. அதுதான் என் ஆசையும். ஆண்டவா என்னை ஏற்றுக்கொள். அழுதுகொண்டது அந்த கிராமத்து நறுவிழி மரம்.

# யாரிடம் தவறில்லை

**வ**சந்தி அக்கா வேலை முடிந்து வர இன்னும் ஒருமணி நேரமாகும். அதுவரைக்கும் வீட்டுக்குப்போய் இருந்துவிட்டு வரலாம்தான். அங்கு போய்த்தான் என்ன செய்வது. மனதுக்குள் சலித்துக்கொண்ட கீதா ஓவக்கோட்டை களற்றாமலேயே வசந்தியக்கா வீட்டு செற்றிக்குள் ஒடுங்கிக்கொண்டாள்.

வெளியில் நல்ல குளிர் இருந்தாலும் நடந்துதிரிந்தால் குளிர் தெரியாது. ஆனால் வீட்டுக்குள் அதைவிட குளிர்வதைப்போல் இருந்தது அவளுக்கு. கீற்றர் இல்லாத வீட்டுக்குள் நிலத்தில் கால்வைத்தால் ஈரமாக இருப்பதைப் போல் இருப்பதை உணர்ந்தாள் கீதா. ஆட்கள் இல்லாத வீட்டில் தன்னிச்சையாக கீற்றர்போடுவதை நாகரீகம் இல்லாத செயலாக நினைத்தாள் கீதா.

மேலே வசந்தியக்காவின் பிள்ளைகள் துள்ளி விளையாடும் சத்தம் கீழே கேட்கின்றது. பிள்ளைகள் பார்த்துக்கொண்டிருந்த ரெலிவிசனை அவள் வந்ததும் அப்படியே விட்டுவிட்டு மேலே ஓடிவிட்டதால் ரெலிவிசனும் தன்பாட்டுக்கு வேலை செய்துகொண்டிருந்தது.

சுவரில் தொங்கிய கண்ணாடி சட்டத்துக்குள் சிரித்துக் கொண்டிருந்த வசந்தியக்காவையும் கணவனையும் அவவின் பிள்ளைகள் இருவரையும் பார்த்து ரசித்தது கீதாவின் மனம்.

இப்படிப் பல சாதாரண கனவுகளோடு லண்டன் வந்த பெண்தான் கீதாவும். ஆனால் தன்வாழ்க்கையே கனவாகும் என்று அவள் நினைத்திருக்கவில்லை. கனடாவில் ஒரு தமக்கையும்

தம்பியும் அமெரிக்காவில் தமையன் ஜேர்மனியில் ஒருதம்பி. சவீஸிலும் பிரான்சிலும் ஒன்றுவிட்ட சகோதரர்கள். இப்படி நாடு பூராவும் தனது சொந்தக்காரர் இருக்கும்போது தான் மட்டும் எங்கும் போகமாட்டேன் என்று தாய்தகப்பனோடு கொழும்பில் இருந்த அந்த நாட்கள் எவ்வளவு சுகமான நாட்கள்.

எத்தனையோ வரன்கள் தன்னை கேட்டு தானாக வந்தபோதெல்லாம் அவைகளையெல்லாம் தட்டிகழித்துவிட்டு லண்டனில் இருந்து அப்பா வாங்கிய மாப்பிள்ளை ஒருத்தனுக்கு கழுத்தை நீட்டியவள்தான் கீதா. திருமணம் முடிந்து அடுத்தநாளே லண்டன் வந்துவிட்டான் மாப்பிள்ளை. ஆறுமாதத்தின் பின்பு கீதாவும் லண்டனுக்கு வந்துவிட்டாள்.

லண்டன் வந்த அன்றே பக்கத்துவீட்டு வசந்தி அக்காவை அறிமுகம் செய்துவைத்தான். பின்னேரம் ரெஸ்ரோறண்டுக்கு கூட்டிப்போய் சாப்பாடு வாங்கித்தந்தான். இரவுதான் வேலைக்குப் போவதாகவும் அன்றிரவு வசந்தி அக்கா வீட்டில் தங்கும்படியும் சொல்லிவிட்டுச் சென்றுவிட்டான். காலையில் வந்து கூட்டிப்போனவன் அவள் குசினிக்குள் போய் ரீ போட்டு வரும்முன்னே நித்திரையாகிவிட்டான். பின்னேரம்வரை அவள் கீழே தனித்து ஒடுங்கிக்கிடந்தாள். எழும்பி கீழே வந்தவன் சாப்பிட்டுவிட்டு மீண்டும் வசந்தியக்காவிடம் விட்டுவிட்டு வேலைக்குப் போய்விட்டான்.

லண்டனுக்கு வந்த அந்த முதல்நாள் இன்னும் கீதாவின் மனதில் நிழலாடிக்கொண்டு இருக்கின்றது. அந்த முதல்நாள் நடவடிக்கைதான் கடந்த இரண்டு வருடமாக ஒரு மாதத்தின் முன்புவரை அந்த வீட்டில் நடந்தது என்ன என்பதுதான் வேடிக்கை. சின்ன மாற்றம் லண்டனுக்கு வந்து ஒரு வாரத்தின் பின்பு வசந்தி அக்கா வீட்டில் இரவில் தங்காமல் தன் வீட்டில் தனியே இரவில் இருக்கப் பழகியது.

பகல் முழுவதும் வீடு அதிரும்படி ரேடியோவை பாட செய்துவிட்டு அவனும் சேர்ந்து பாடுவான். கீதா ஏதோ நேரம் போகவேண்டும் என்பதற்காக எதையாவது செய்துகொண்டிருப்பாள். தன்னிடம் உள்ள விலையுயர்ந்த ரெலிவிசனையும் ரேடியோவையும் வீடியோ கமராவையும் பற்றியும் தன்னிடம் இருக்கும் சி.டி. கெசட்டுகள் மட்டும் இத்தனை என்று அவன் அவளிடம் பெருமையாக சொல்லும்போதெல்லாம் கீதா தன் படிப்பையும் தான் கொழும்பில் செய்த வேலையையும் அதன் மதிப்பையும் நினைத்து மனதுக்குள் சிரித்துக்கொள்வாள்.

தனக்குத் தெரிந்த அரசியல், தனக்குத் தெரிந்த உலக விசயம், தன்னிடம் உள்ள கலையார்வம் எல்லாம் இவனுக்குச் சொந்தமான இந்த ரேடியோவுக்கும் சி.டி. கெசட்டுகளுக்கும் சமமாகிவிட்டதே என்பதை நினைக்கும்போது மட்டும் தன் மனதில் தான் ஏதோ ஒன்றை பறிகொடுத்துவிட்டு நிற்கிறேன் என்ற வெறுமை உணர்வொன்று ஏற்படுவதைத்தான் அவளால் ஜீரணிக்க முடியாமல் இருந்தது.

"உம்மோட அம்மா அப்பா தந்த சீதனக்காசு அப்படியே உமது பெயரிலே வங்கியில கிடக்குது. அதில ஒரு சதம்கூட நான் தொடயில்ல கீதா..."

சம்பந்தமே இல்லாமல் சர்ந்தப்பமும் ஏற்படாமல் திடீரென்று ஒருநாள் அவன் சொன்ன அந்த வார்த்தையின் அர்த்தம் அன்று கீதாவுக்குப் புரியவில்லை.

"உன்னிட்ட சொல்லக்கூடாது எண்டுதான் நினைச்சிருந்தன்... அவனுக்கு உன்னக் கல்யாணம் கட்ட கொழும்புக்கு வரமுன்னே இங்க ஒரு பெட்டையோட சினேகிதம். கல்யாணத்துக்கு பிறகு விட்டுவிடுவான் எண்டுதான் நினைச்சம். ஆனால் அவன் இப்பவும் அந்த பெட்டையோட சினேகிதம்தானாம் எண்டு இவருக்கு யாரோ சொன்னவையளாம்." இவர் சொன்னார்.

அவன் சொன்ன அந்த வங்கிக் கதையைச் சொன்னபோது வசந்தியக்கா சொன்ன இந்தக் கதை அவளை பெரிதாக அதிர்ச்சிக்குள்ளாக்கவில்லை. என்னை ஏமாற்றிவிட்டாயேயடாபாவி, நம்பிவந்த என்னை நம்பவைத்து கழுத்தறுத்துவிட்டாயே என்றெல்லாம் அவள்கத்திக் கதறி கூப்பாடுபோடவில்லை. கட்டிப் பிடித்து கட்டில் சுகம் கண்டிருந்தால்தானே அதைவிட்டுக் கொடுக்கமுடியாமல் தவிக்கவேண்டும்.

ஏதோ ஒரு வகையில் கீதாவுக்கு தன் விசயம் தெரிந்துவிட்டது என்பதை அவன் அறிந்துவிட்டான். அதை அவனின் நடைமுறையே விளக்கியது. கீதாவோடு நன்றாக கதைக்கமாட்டான். சிலவேளை வீட்டுக்கு வரமாட்டான். ஒன்றிரண்டு நாட்களுக்கு பின்புதான் வருவான்.

"உங்கள நினைச்சு அவனும் கவலைப்படுறான். அப்பா அம்மாவுக்காக ஒரு பெண்ணின்ர வாழ்க்கையை சீரழிச்சிட்டன் என்று அழறான். ஆனால் உங்களிட்ட எதையும் அவனால் தைரியமாக பேச பயப்படுறான்..."

அவனின் நண்பன் மூர்த்தி அவனுக்காக அடிக்கடி வந்து கீதாவிடம் இரக்கவுரை பாடிவிட்டுச் செல்வான்.

"நீங்கள் வீட்டுக்குள்ள அடைபட்டு கிடக்கிறீங்களாம். நீங்கள் கோயிலுக்கோ அல்லது வேறெங்கும் வெளியிலையோ போகவேண்டுமென்றால் என்னை கூட்டிக்கொண்டு போகச்சொன்னான். எங்கேயும் போகவேண்டுமே...?" இப்படி மூர்த்தி கேட்கும் போதேல்லாம் கீதா வேண்டாம் என்று மறுத்துவிடுவாள்.

அவன் இப்போதெல்லாம் வீட்டுப்பக்கம் வருவதேயில்லை. ஆறுமாதமாக அவள் மட்டும்தான் வீட்டில். பொழுதுபோக்குக்காக

வசந்தியக்கா எடுத்துக்கொடுத்த பகுதிநேரவேலை மனதுக்கு நிறைவாக இருந்தது.

பின்னேரம் வேலைமுடிந்து வசந்தியக்கா வீட்டுக்கு வந்துவிட்டுத்தான் தன் வீட்டுக்கு போவாள் கீதா. இன்றும் அப்படித்தான் வந்திருக்கின்றாள்.

"என்ன கீதா கீற்றர் போடாமல் குளிருக்குள்ள கிடக்கிறீர். இந்தாரும் ரீ குடியும்."

குரல்கேட்டு திடுக்கிட்டு விழித்தாள்கீதா. வசந்தியக்கா வந்து ரீபோடும் வரைக்கும் எதுவுமே தெரியாமல் தான் தூக்கிவிட்டதை நிகைத்து வசந்தி அக்காவிடம், "சொறியக்கா நித்திரையாய் போயிற்றன் போல" என்றாள்.

"பரவாயில்ல நீர் ரீயக் குடியும்."

வசந்தியக்காவின் சூடான தேனீர் குளிருக்கு இதமாக இருந்தது அவளுக்கு.

"என்ன கீதா ஏதும் ரெலிபோன் பண்ணினவனே. அவன் செய்த துரோகத்தையெல்லாம் மறந்து அவன ஒருபெரிய மனிசன் எண்டு நினைச்சு நீர் அவனிட்ட போய் முடிவு கேட்டுக்கொண்டு நிற்கிறீர். உமக்கு விருப்பம் எண்டால் நீர்தானே ஒரு முடிவெடுக்க வேணும். இதுக்கு போய் ஏனப்பா அவனிட்ட கேட்கிறீர். அவன் செய்த புதுனத்துக் கெல்லாம் உன்னிட்ட கேட்டுக் கொண்டே செய்தவன்."

வசந்தியக்காவின் மனதில் உள்ள கோபம் வார்த்தைகளாய் வெளிவந்து கொண்டிருந்தது. ஆனால் கீதாவுக்கு மட்டும் அவனில் இதுவரை எந்த கோபமும் ஏற்படவில்லை. அவள் கொழும்பில்

இருந்துவந்த காலத்துக்கு ஆசைப்பட்டோ ஆத்திரப்பட்டோ அவன் அவளின் உடம்பில் அடித்ததோ அணைத்ததோ இல்லை. அவளின் தாய் தகப்பன் கொடுத்த சீதனக்காசில் ஒருசதத்தைக்கூட அவன் தொடவில்லை. வீட்டைவிட்டு போனாலும் இதுவரைக்கும் அவளுக்கு அவன் எந்தகுறையும் வைக்கவில்லை. இதையெல்லாம் யோசிக்கும்போது அவனில் அவளுக்கு அனுதாபம்தான் ஏற்படுகிறது.

"என்ன கீதா நான் கேட்டகேள்விக்கு பதில் சொல்லாமல் உம்மடபாட்டுக்கு யோசிக்கிறீர். போன் பண்ணுனவனே?"

"ம்... பண்ணினவர்."

"என்னவாம்?"

"தனக்கு சம்மதமாம், சந்தோசமாம்" என்றார்.

"அப்படியே இனியென்னப்பா. இனி எல்லாத்தையும் நானும் இவருமெல்லே முன்னின்று நடத்துகிறது."

ஒருசகோதரிக்குரிய சந்தோசம் வசந்தியக்காவின் முகத்தில் தெரிந்தது.

"உங்களுக்கு ஆட்சேபணையில்லை யெண்டால் - உங்களுக்கு விருப்பம் எண்டால் நான் உங்களக் கல்யாணம் செய்ய விரும்புறன் உங்களுக்கும் விருப்பம் எண்டால் மட்டும்தான், நீங்கள் ஒருக்கா அவனிட்டையும் கேட்டுப்பாருங்கோ."

நேற்று மூர்த்தி தன்னிடம் சொன்னதை நினைத்துப் பார்த்தாள் கீதா. ஆனால் கீதாவுக்கு தெரியாது அவளை கல்யாணம் செய்து கொள்ளும்படி தன் நண்பன் மூர்த்தியிடம் அவன் கேட்டது.

# புத்திரசோகம்

நான் நினைக்கவேயில்லை. இந்தச் சின்ன விசயம் இவ்வளவு பெரிதாகி வீடே சாவீடுபோல் மாறும் என்று.

யார் விட்டாலும் எங்கள் வீட்டு நாய் விடுவதாய் இல்லை. பாரடி பார்வதி உன் மகன் செய்த அநீதியை என்பதுபோல் திண்ணையில் இருக்கும் அம்மாவைச் சுற்றிச் சுற்றி வந்து அணுகி அழுதுகொண்டே இருந்தது அது.

கன்றைப் பறிகொடுத்த பசு மனுநீதிச் சோழனிடம் நீதி கேட்டதுபோல் தன் நாய் தன்னிடம் நீதி கேட்பதாய் அம்மாவுக்கு ஓர் நினைப்பு.

"ஐயோ பாரடா இதுர கண்ணால வடியுற கண்ணீர! வாய் பேசாத சீவன் அது! என்ன நினைக்குதெண்டு ஆருக்கு தெரியும்." வாசல் சுவரில் சாய்த்து வைத்திருக்கும் சைக்கிளில் சாய்ந்துகொண்டு நின்ற என்னை ஒரு கொலைகாரனைப் பார்ப்பதுபோல பார்த்து கேட்டாள் அம்மா.

அம்மாவின் ஏச்சினால் என்னில் அனுதாபப்பட்ட தங்கை குசினிக்குள் இருந்து என்னைப் பரிதாபமாக பார்த்துக்கொண்டிருந்தாள்.

"அதுக்கு இப்ப என்ன? இதுக்குப்போய் கத்திக்கொண்டிருக்கியள்?" பொறுமை இழந்து நான் கேட்ட கேள்வியால் அம்மா ஆத்திரம் அடைந்துவிட்டாள் என்பதை அம்மாவின் முகபாவம் வெளிப்படுத்தியது.

"என்னடா... என்னடா சொன்ன... கொலைகாரா." அம்மாவின் முகபாவம் வார்த்தைகளாக வெளிவந்ததில் குசினிக்குள் இருந்த தங்கையை பொறுமை இழக்கச் செய்தது.

"இப்ப என்ன நடந்து போயிட்டதென்று ஊரைக்கூட்டி ஒப்பாரி வைக்கிறியள்?"

தங்கை முடிக்கவில்லை அம்மா ஆரம்பித்துவிட்டாள்.

"என்னடி... என்னடி... நாயெண்டாலும் அதுவும் தாய்தாண்டி. நீயும் பத்துமாதம் சுமந்து பெத்தெடுத்து பறிகொடுத்துப் பாருடி அப்ப தெரியும் உனக்கு புத்திரசோகம். இங்க பாருடி, இதுரமுகத்த! வாய் பேசாத பிராணி. கண்ணால வடியுற கண்ணீரத் தெரியுதாடி உனக்கு?" தங்கையிடம் கேள்வி கேட்கும்போது அம்மாவின் கண் கலங்கியதை நான் கவனித்தேன்.

சுற்றி சுற்றி வந்து அம்மாவின் தோளை முகர்ந்துகொண்டு அணுகி முனகிக் கொண்டிருக்கும் எங்கள் வீட்டு நிம்மியை பார்க்க பரிதாபமாகத்தான் இருந்தது. அதைவிட பரிதாபம் அம்மாவின் மடியில் கிடந்த அதன்குட்டி. மெல்லிய ரோசா இதழின் நிறத்தில் நீரில் நனைந்த பழஞ்சீலைபோல் துவண்டு கிடந்த இன்னமும் ரோமம் வெளிவராத ஒன்றரை நாள் நிம்மியின் குட்டியைப் பார்க்க பரிதாபமாகத்தான் இருந்தது.

நேற்றிரவு ரோட்டில் நண்பர்களுடன் அரட்டை அடித்துவிட்டு இயற்கை உபாதைக்காக அவசரமாக ஓடி வந்தபோது அலுமினியத் தட்டில் நிம்மிக்கு அம்மா சோறு குளைத்துபோட்டுக் கொண்டிருந்தாள். என்னைக் கண்டதும் நிமிர்ந்து வாலாட்டிவிட்டு மீண்டும் சாப்பிட்டுக் கொண்டிருந்த நிம்மியை கவனித்தேன். நேற்றிரவுவரை ஊதியிருந்த வயிறு ஒட்டி வற்றிப்போய் இருந்தது.

"மாமா, நிம்மி அஞ்சி குட்டிபோட்டிருக்கு. எல்லாம் அலகான சேப்புக்கலர் மாமா."

அக்காவின் கடைசி மகள் ஸ்ரீயின் மழலைக்கதையை காதில் போட்டுவிட்டு எனக்கிருந்த அவசரத்தை தீர்த்துக்கொள்ள கோடிப்பக்கம் இருட்டில் ஓடியபோது வீட்டின் பின் முற்றத்தில் என் காலில் ஏதோ ஒன்று மிருதுவாக மிதிபட க்கீ... கீகீக்க்... என்ற சத்தம் ஒன்றும் ஒலித்து அடங்கியது.

காலில் மிதிபட்ட மிருதுவான ஒன்று ஏதோ என்று நினைத்து பயந்து குனிந்து இருட்டில் நிலத்தை தடவியபோது நெழு நெழுத்த சதைக் குவியலொன்று என் கையில் பட்டதும் மனதுக்குள் ஓர் அருவருப்பு நெருட மீண்டும் தடவி பார்த்தபோது பஞ்சிக் குவியல்களாக ஒவ்வொரு குட்டிகளும் நெழுநெழுத்தது.

நான் ஒவ்வொன்றாக தூக்கினேன். தூக்கம்போது ஒவ்வொன்றும் க்கீ... க்கி.. என்று பறவையா மிருகமா என்று இனம் காணமுடியாத ஒரு பொதுவான ஓசையை எழுப்பியது. ஒவ்வொன்றாக தூக்கினேன்.. தூக்க ஆசையாக இருந்தது. கடைசியாக ஒரு குட்டியை தூக்கியபோது அது எந்தவித சத்தமோ போடாமல் அசைவற்று என் உள்ளங்கையில் கிடந்ததை அறிந்து என் மனம் ஒரு நிமிடம் பதைத்தது. .

கொன்றுவிட்டேனே... ஐயோ பாவமே கொன்றுவிட்டேனே...

அன்றிரவு முழுவதும் நித்திரையே இல்லை. அது காலில் மிதிபட்டதும் அப்போது அது எழுப்பிய அந்த சத்தமும் என் நித்திரையை குழப்பியது. யாரிடமும் சொல்ல வில்லை. ஆனால் யார் மேலேயும் இந்த பாவத்தையும் பழியையும் நான் போடவிரும்பவில்லை. அதனால்தான் இறந்த குட்டியைக் கையில் எடுத்துக் கொண்டுவந்து அம்மா அழுதுகொண்டு நின்றபோது நான்தான் செய்தேன் என்று ஒப்புக்கொண்டுவிட்டேன். அதை அம்மா இப்படி சாவீடாக்கி பெரிதாக்கி விடுவாள் என்று நினைக்கவேயில்லை.

"மாமா இஞ்சபாருங்கோ மாமா. மூத்த மாமா நிம்மிட நாய்க்குட்டிய சாக்காட்டிப் போட்டார். ஸ்ரீக்குட்டியின் வாயால் என் தலையில் கொலைகுற்றம் சாட்டப்பட கிணற்றடியில் நிற்கும் பூவரச மரத்தின் அடியில் ஏதோ ஒன்றை மறைத்து எடுத்துக் கொண்டுவந்து மறைத்துவிட்டு வந்த தம்பியிடம் மருமகள் ஸ்ரீ என்னைப்பற்றி முறையிட்டாள். என்ன சொல்லுகிறாள் என்பதை விளங்காமல் என்னை ஒருதரம் நிமிர்ந்து பார்த்துவிட்டு, "என்னம்மா நடந்தது?" என்று அம்மாவிடம் கேட்டான் தம்பி.

எனக்கு தம்பி என்றாலும் வீட்டில் என்னைவிட அவனுக்குத்தான் இப்போதெல்லாம் மதிப்பு அதிகம். காரணம் அவன் இருக்குமிடம்.

உயர்தர படிப்பை பாதியிலேயே நிறுத்தி தீடீரென ஒரு நாள் சொல்லாமல் கொள்ளாமல் காணாமல் போய்விட்டான் தம்பி. அம்மா, தங்கை, மருமகள்மார் எல்லோரும் அழுது புலம்பினார்கள். அவன் நாட்டுக்காக போய்விட்டானென்று அவனின் சிநேகிதர்கள் மூலமாய் அறிந்தவுடன் கொஞ்சநாள் அம்மா சோறுதண்ணியில்லாமல் கிடந்து மெலிந்துவிட்டாள். பல மாதங்களுக்கு பின்பு ஒரு நாள் தம்பி வந்தான். வந்தவனிடத்தில் பெரு மாற்றம் தெரிந்தது. அதிகம் பேசி சிரிக்கமாட்டான். அதிக நேரம் தங்கமாட்டான். சில வேளைகளில் வீட்டில் சாப்பிடக்கூடமாட்டான். கிழமைக்கொரு தடவை வந்தவன் மாதம் ஒருமுறை அல்லது இருமுறை என தன் வருகையை குறைத்துக்கொண்டான். ஒவ்வொரு முறை வரும்போதும் சாக்குப் பையில் ஏதோ ஒன்றை மறைத்துக் கொண்டுவந்து கிணற்றடி பூவரசமரத்தடியில் வைத்துவிட்டுத்தான் வீட்டுக்குள் வருவான். இப்போதெல்லாம் அவன் வீட்டுக்குள் வரும்போது வீட்டுவாசல் கேற்றடியிலும் வீட்டுக்குப் பின்புறமும் அவனோடு அவனுக்கு பாதுகாப்பு கொடுப்பதை பார்க்கும்போது அவன் இருக்குமிடத்தில் அவனுக்குரிய பொறுப்பும் பதவியும் என்ன என்பதை எங்களாலும் ஊகிக்க முடிந்தது.

அம்மாவுக்கு அருகில் இருந்தவனின் காலை முகர்ந்து பார்த்து வாலை ஆட்டிக் கொண்டிருந்த நிம்மியின் அடர்ந்த ரோமங்களை தடவிக்கொண்டிருந்தான் தம்பி.

"பாரு. பாருடா அவன் செய்த அநியாயத்த. உனக்கிட்டையும் சொல்லுதடா அந்த வாயில்லாத ஜீவன்." அம்மா தம்பியிடமும் முறையீடு செய்தாள்.

தங்கை கொண்டுவந்து கொடுத்த தேனீரை வாங்கிக்குடித்தவன் என்னைப் பார்த்து சிரித்துகொண்டே கேட்டான்.

"இருட்டில் பார்த்து போகத் தெரியாதோ உனக்கு?"

"இருட்டில் என்னெண்டடா பார்த்து போக முடியும்?"

அவனின் கேள்விக்கு நான் சொன்ன பதிலால் அவன் வாய்விட்டு சிரித்துவிட்டான்.

நாங்கள் எப்போதும் இப்படித்தான். அண்ணன் தம்பி மாதிரி பழகமாட்டோம். சேர்ந்தால் சிரிப்பும் சண்டையும்தான். நாங்கள் இருவரும் பழகுவதை பார்த்ததும் டேய் நீங்கள் இருவரும் அண்ணன் தம்பியோ இல்ல. மச்சான் மச்சினனோ என்று அம்மா அகப்பையுடன் வந்து நின்று கேட்பாள்.

அதெல்லாம் ஒருகாலம் இப்போதெல்லாம் அவன் வந்துவிட்டு போகும் போதெல்லாம் மீண்டும் இவனைக் காண்பேனோ என்றுதான் என்மனம் என்னைக் கேட்கும்.

"சரி அம்மா, நடந்ததுக்கு இப்ப என்ன செய்யலாம். அத கொண்டுபோய் போட்டுப் போட்டு வேலைய பாருங்கோவன். நான் வாறனம்மா."

அம்மாவிடம் சொல்லிவிட்டு கிணற்றடி பூவரசமரத்தின் கீழ் வைத்ததை எடுத்துக்கொண்டு போய்விட்டான் தம்பி.

இவன் அண்ணனுக்குக்கேற்ற தம்பி. "டேய் என்னடா பார்த்துக்கொண்டு நிற்கிறாய். ஏறி மிதிச்சு சாக்காட்டின மாதிரி இதகொண்டுபோய் எங்கண்டாலும் புதையனடா. நீ எனக்கிட்ட சொல்லி அழுது என்ன பிரயோசனம். அந்தா நிற்கிறான் அவன்தான் உண்ட புள்ளயக் கொண்டவன் அவனுக்கிட்டக்கேளு."

என்னிடம் சொல்லிவிட்டு படுத்துக்கிடக்கும் நிம்மியிடம் கதைத்த அம்மாவை பார்த்து சிரித்துக்கொண்டிருந்த தங்கையிடம் கண்ணை காட்டிவிட்டு மெதுவாக சைக்கிளை தள்ளிக்கொண்டு வெளியில் வந்த எனது காதுகளில் அம்மா புலம்புவது கேட்டுக்கொண்டே இருந்தது.

சைக்கிளை தள்ளிக்கொண்டு சந்தியில் உள்ள நறுவழி மரத்தடிக்கு வந்தபோது கூட்டமாய் நின்று எதையோ பேசிக்கொண்டிருந்த சனக்கூட்டத்தின் உள்ளிருந்து வந்த நண்பன் திருநாவுக்கரசு என்னிடம் கேட்டான்.

"விசயம் கேள்விப்பட்டியோ?".

".... என்ன....?"

"உண்மையாத்தான் கேட்கிறன் சத்தியமா தெரியாதோ உனக்கு?"

"என்னடா... சொல்லன்."

திருநாவுக்கரசு கொஞ்ச நேரம் தயங்கிவிட்டு சொன்னான். "உங்கட வீட்ட வந்திட்டு போனத ஆரோ சொல்லிற்றான்கள்.

தியேட்டருக்கு முன்னால வெச்சு ரவுண்டப் பண்ணிட்டான்கள். ஒன்றும் செய்யமுடியாம கழுத்துல கிடந்தத கடிச்சிற்றான்களாம்; உண்ட தம்பியும் ஒரு ஆளாம்."

என்னிடம் இருந்து நழுவிய சைக்கிளை திருநாவுக்கரசு தாங்கிப் பிடித்தான்.

நான் அம்மாவை நினைத்துக்கொண்டேன்.

"நாயென்றாலும் தாய்தானே. உனக்கு தெரியுமாடி புத்திர சோகம்?" ஒரு நாய்க்குட்டியின் மரணத்துக்காக அந்தத் தாயை நினைத்து அம்மா அழுதது என் நினைவுக்கு வந்தது.

அதன் பின்பு எங்கள் வீட்டு நிம்மி எத்தனையோ தடவை குட்டி போட்டுவிட்டது. அவைகளையெல்லாம் பார்க்க அம்மாதான் உயிருடன் இல்லை.

அம்மா இறப்பதற்கு முன் ஐந்து வருடமாக படுத்த படுக்கையாகவே கிடந்தாள்.

அம்மாவுக்கு மஞ்சள் காய்ச்சல் என்றும் வாத நோய் என்றும் புற்றுநோய் என்றும் சொல்லி உறவுக்காரர் கடைசிவரைக்கும் வைத்தியம் செய்தார்கள். ஆனால் எனக்கு மட்டும் தெரியும் அம்மாவுக்கு கடைசிவரை இருந்தது புத்திர சோகம் ஒன்றுதான் என்று.

ஒருநாய் பெற்ற குட்டியின் உயிர் பிரிந்தபோதே தான் பெற்ற பிள்ளையைப் பிரிந்ததுபோல் அழுத அம்மா தன் பிள்ளை தன்னைப் பிரிந்துவிட்டான் என்பதை எப்படித் தாங்கியிருப்பாள்.

# ஏமாற்றங்கள்

லண்டனில் இருந்து ஊருக்கு வரும்போது எத்தனையோ எதிர்பார்ப்புகளுடன் வந்தவனல்ல அவன். குறிப்பிட்ட சில எதிர்பார்ப்புகளுடன்தான் வந்தான். அதுவும் ஊரில் நிற்கும் குறிப்பிட்ட நாட்களுக்குள் எதை எதை பார்க்கவேண்டும், யார் யாரைக் காணவேண்டும், என்னென்ன பேசவேண்டும் என்றெல்லாம் திட்டம்போட்டுக் கொண்டுதான் வந்தான் அவன்.

அவன் ஊருக்கு வந்ததும் அவனின் கண்கள் முதலில் தேடியது ஆச்சியையும், ஆச்சியிருந்த அந்த ஓலைக் குடிசையையும்தான். ஆச்சி என்றால் அம்மாவின் அம்மம்மா. வயது தொண்ணூறு. அவவுடன் பேசி நேரம் கழிப்பதே ஓர் சுகமான விசயம்தான்.

ஆச்சியின் குடிசை வீடு இருந்த இடத்தில் பதினைந்து வருட மரங்கள் உயர்ந்து வளர்ந்திருந்தது.

"ஆச்சி எப்போதோ செத்து போயிட்டா. நீ லண்டனின் விலாசம் மாறிய நேரம் உனக்கு எழுதினேன். அதனால்தான் நீ அறிய இல்லைப்போல. ஊரில நாட்டுல தினம் தினம் எத்தனையோ சாவுகள். இதுக்குள்ள ஒவ்வொரு கடிதத்திலையும் ஆச்சி இறந்ததைப்பற்றியோ எழுதிக்கொண்டிருக்க முடியும்." அக்கா சர்வசாதாரணமாய் சொன்ன அந்த விடையம் அவனை ஆச்சரியப்பட வைத்தது.

நாட்டின் நிலைமை மனிதர் மனதில் மனித உயிர் இழப்புக்களையே எவ்வளவு மலிவாக நினைக்க மாற்றியுள்ளது.

அடுத்து அவன் இந்த ஊரில் பார்க்கவேண்டும் என்று ஓடிவந்தது அம்மன் கோயில் வாசல் இலுப்பை மரத்தை.

அம்மன் கோயில் திருவிழா ஆரம்பமாகும் முன்பே ஒரு மாதத்துக்கு முன்பாக திருவிழா கோலம் காணும் அந்த சித்திரை மாதத்து நிலவொளியில் நண்பர்களுடன் விடியும்வரை படுத்துறங்கும்போது காற்றில் சலசலக்கும், இலுப்பம் மரக்கிளை. அதனிலிருந்து விழுந்து மணம்பரப்பும் இலுப்பம் பூக்கள். இவையெல்லாம் அவனின் மனதில் பதிந்துவிட்ட அழியாத நினைவுகள்.

லண்டனில் இருந்து வந்த அடுத்த நாளே பழைய நண்பனொருவனுடன் கோயிலுக்குச் சென்றவனின் கண்கள் ஏமாற்றத்தில் பனித்தது. அந்த அழகான இலுப்பை விருட்சம் இருந்த இடம் வெறிச்சோடிக்கிடந்தது. கூட வந்த நண்பனிடம் அதுபற்றி அவன் எதுவும் கேட்கவிரும்பவில்லை. கேட்டால் இவையெல்லாம் பற்றிகேட்கத்தானா நீ லண்டனில் இருந்து வந்தாய் என்று அவன் கேட்டுவிடுவானோ என்ற எண்ணம் அவனுக்கு. இருந்தும் அந்த இலுப்பை மரத்தின் இழப்பு அவனின் மனதில், தான் ஆச்சியைக் காணாததைவிட கூடுதலான கவலையை ஏற்படுத்தியது.

இப்படியே அவன் எதிர்பார்த்துவந்த நண்பர்கள், சொந்தங்கள் அனைவருமே தன் எதிர்பார்ப்புக்கு நேர் மாறாக இருப்பதை நினைக்கையில் உடனே லண்டனுக்கு திரும்பிவிட வேண்டும்போல் இருந்தது அவனுக்கு. தாயின் மடியில் தவழ்ந்து விளையாட ஓடிவந்த குழந்தை தாயைக் காணாமல் அழுவதுபோல் அவன் மனம் ஏதோ ஒன்றுக்கு ஏங்கியது. எங்கே என்கிராமம் எங்கே என் பழைய உறவுகள் என்று தேடியது அவன் இதயம்.

நாளை புறப்படவேண்டும். அதற்கிடையில் அவனின் அடிமனதில் புதைந்து கிடந்த ஆசை அவர்களை எப்படியும் சந்திக்கவேண்டும் என்று தூண்டியது.

அவர்கள் அக்கரை பற்று முதலாம் குறிச்சியில் இருக்கும் முதலியார்தெரு கலீலும் அவனின் தங்கை நயீமாவும்.

கலீல் அவனின் முஸ்லீம் சினேகிதன். நயீமா அவனோடு பொருளாதார பாட ரியூசன் வகுப்பில் ஒன்றாக படித்த சக மாணவி. கலிலுடனும் அவன் தங்கை நயீமாவுடனும் அவர்கள் குடும்பத்துடனும் அவன் பழகிய நாட்கள், அவனின் வாழ்க்கை அத்தியாயங்களில் ஒன்று. அந்தப் பழைய பக்கங்களை அவன் என்றுமே மறப்பதில்லை.

அது அவனின் இருபது வயது வாலிபக்காலம். அப்போது அவனுக்குள்ள சினேகிதர்களுள் கலீலும் ஒருவன். அவனின் வீட்டுக்கு கலீல் எத்தனையோ தடவை வந்திருந்தாலும் கலீலின் வீட்டுக்கு அவன் ஒருதடவைகூட போனதில்லை.

அபுல்காசிம் மாஸ்டரின் பொருளாதார ரியூசன் வகுப்புக்கு அவன் முதன் முதலில் போனபோதுதான் நயீமாவைக் கண்டான். அரைத்து பூசிய மருதாணியால் சித்திரம் வரைந்து சிவந்திருந்த அவளின் கைவிரல்களும் பாதங்களும் அவனை வெகுவாக கவர்ந்தது. இவளென்ன பரதநாட்டிய அரங்கேற்றத்துக்கு அலங்கரிக்கப்பட்ட முக்காடுபோட்ட பொட்டற்ற கலைப்பெண்ணா என்று அவளைப் பார்த்து அவன் தனக்குள்ளே நினைத்துக்கொள்வான்.

ரியூசன் வகுப்புக்குச் செல்லும் முஸ்லீம் அல்லாத எந்த பெடியன்களுடனும் முஸ்லீம் பெண்பிள்ளைகள் கதைத்து சிரிப்பது மிகவும் குறைவு. தனக்கு தெரிந்த முஸ்லீம் பெடியன்களுடன் அவன் அதிகமாகப் பேசிச் சிரிப்பதாலோ என்னவோ தெரியாது, நயீமா அவனுடனும் வகுப்பில் எல்லோருடனும் போலவே சிரித்து பேசுவாள்.

"நேத்து மாஸ்டர் முக்கியமான பாடமெல்லுவா சொல்லித் தந்தவர். ஏன் தாஸன் நீங்க வரயில்ல..."

இதுதான் அவள் அவனிடம் தனிமையில் பேசிய முதல் வார்த்தை.

மாஸ்டரும் மற்ற மாணவர்களும் வந்து சேர்வதற்கு முந்திப்போய் வகுப்பில் இருந்த அவனிடம் கேட்ட அந்த முதல் கேள்விக்குப் பின் அவர்கள் இருவரும் மற்றவர்களைப்போல் நண்பர்களாகவே பழகத் தொடங்கிவிட்டார்கள்.

நாளடைவில் அவன் வராத வகுப்புகளுக்கான பாடக்குறிப்புகளை அவனின் கொப்பிகளை தான் வாங்கிச் சென்று தானே எழுதிக் கொடுப்பாள் நயீமா.

அவனின் பொருளாதாரக் கொப்பியில் உள்ள பணவீக்கம், நாணய மாற்றுவிகிதம், பண்டமாற்று, கேள்வி நிரம்பல் போன்ற பொருளாதார பாடக்குறிப்புகள் அனைத்தும் நயீமாவின் கையெழுத்துக்கொண்டவைகள்.

நயீமாவிடம் வாங்கிய பொருளாதார புத்தகம் ஒன்றை கொடுப்பதற்காக நயீமா வீட்டுக்கு ஒரு தடவை போன நேரம்தான் அவனால் அது கலீல் வீடு என்றும், நயீமா கலீலின் தங்கை என்பதையும் அறிந்துகொண்டான். அதன்பிறகு கலீலின் வீட்டில் அவனும் ஒருவன் போலவே போய்வந்து பழகிக்கொண்டிருந்தான். நயீமாவும் கலீலோடு பல தடவை அவனின் வீட்டுக்கு வந்து போயிருக்கிறாள்.

"என்ன தாஸன், நாளைக்கு பொங்கல் பார்சல் கொண்டு வருவையளா இல்லீயா."

பொங்கலுக்கு முதல் நாளே கேட்டுவிடுவாள் நயீமா. பள்ளிவாசலில் நடக்கும் கந்தூரி சடங்கில் கிடைக்கும் சாப்பாட்டை எடுத்துவைத்துக்கொண்டு, அவனைக் கூட்டிவரச்சொல்லி கலீலை அனுப்பி வைப்பாள்.

நாட்டார் கவிபோன்று இருக்கும் அவள் பேசும் அந்த கிராமியத் தமிழை நாள்முழுதும் கேட்டுக்கொண்டே இருக்கலாம்.

''ஏன் வாப்பா ரெண்டு நாளாக் காணயில்ல. ஒடம்புக்கு ஏதும் ஏலாதா. இந்தா வாப்பா தேயிலை குடி.'' நன்னாரி வேர் விட்ட தேனீரைக் கொண்டுவந்து வைத்துவிட்டு முகம் பார்க்காமல் பேசும் கலீலின் உம்மாவை அவனும் உம்மா என்றே கூப்பிடுவான்.

கலீலின் வீட்டுப் பிரச்சினை கலீலை சவூதிக்கு அனுப்பியது; நாட்டுப் பிரச்சினை அவனை சிறைக்கு அனுப்பியது.

இரண்டரை வருடங்களை சிறைக்குள் அனுபவித்துவிட்டு விடுதலையாகி வந்த நேரம் ஒருநாள் கலீலின் வீட்டுக்கு போனான் அவன்.

அவன் போகும்போது திண்ணையில் பாய் பின்னிக்கொண்டிருந்த கலீலின் உம்மா ஓடிவந்து அவனை கட்டித்தழுவி அழுததை அவன் இன்னும் மறக்கவில்லை.

''எண்டவாப்போ. வந்திட்டியா வாப்பா... இப்பிடி கோலம் கொறஞ்சி வந்திருக்கியே. எண்ட புள்ள ஒன்னய கேட்டு எழுதாத நாளே இல்லவாப்பா. போனவருசம் அவன் வந்த நேரம் ஒனக்கெண்டு அவன் கொண்டுவந்த சாமான்கள் அப்படியே இரிக்கி வாப்பா. புள்ள நயீமா காக்காட உடுப்புகள கொண்டுவந்து குடும்மா.''

அவனிடம் உடுப்புகளைக் கொண்டுவந்து கொடுத்த நயீமாவை அவன் நிமிர்ந்து பார்தான்.

அவனைப் பார்த்ததும் முக்காடு சேலைத் தலைப்பால் வாயை பொத்தி அழுதுகொண்டு உள்ளே ஓடிவிட்டாள் அவள்.

சிறையில் இருந்துவந்து லண்டனுக்குபோன அந்த இடைப்பட்ட காலத்துக்குள் அடிக்கடி கலீல் வீட்டுக்குப் போய்வந்தான் அவன்.

தான் சிறையில் இருந்து வந்ததை கலீலுக்கு எழுதச் சொன்னான். விலாசத்தை வாங்கி தானும் கலீலுக்கு எழுதினான். கலீலிடம் இருந்து பதில் வரவேண்டிய கால அவகாசத்துக்குள்ளேயே அவன் லண்டன் செல்லவேண்டிய நாளும் நெருங்கிவிட்டது. தான் லண்டனுக்குப் போகப் போவதைச் சொல்வதற்காக, கலீல் வீட்டுக்குப் போனான் அன்று.

அவனைக் கண்டதும் அவனை எதிர்பார்த்து நின்றதுபோல் வாசலுக்கு ஓடிவந்தாள் நயீமா. மூடிய முக்காட்டுக்குள்ளால் தெரிந்த அவளின் முகத்தில் சோகம் தெரிந்தது. தான் லண்டன் போகும் செய்தியைச் சொல்ல வாயெடுக்கும் முன்னே அவள் ஏதோ பேசத் தொடங்கினாள்.

"தாஸன் நான் செல்லுறன் எண்டு கொறை நினைக்காதையுங்கோ... தயவு செய்து இனிமேல் எங்கட ஊட்டுக்கு நீங்க வரவேணாம் தாஸன்."

அவளின் வார்த்தைகள் அழுகையாக வந்ததில் அவன் அதிர்ந்து போனான்.

"நீங்க எங்கட ஊட்டுக்கு வாறது ராத்தா புருஷனுக்கு புடிக்கையில்ல. ஒங்கள வரவேணாம் எண்டு அவர்தான் செல்லச் சென்னார். கலீல்காக்காவும் இல்ல ஆம்பிளை இல்லாத ஊடு. மச்சான் செல்லுறதையும் நாங்க கேட்கத்தானே வேணும்..." அவள் சொல்லி முடித்ததும் அவன் எதுவும் பேசாமல், "நான் வாறன் நயீமா. கலீல் கடிதம் போட்டால் நான் கேட்டதாக எழுதுங்கோ."

அவன் வந்துவிட்டான்.

அன்றுமுதல் லண்டனில் இருந்து வந்த இன்றுவரை அவனுக்கும் கலீலுக்கும் எந்த விதமான தொடர்பும் இருக்கவில்லை. ஆனால் அந்த கலீலையும் நயீமாவையும் பார்க்கவேண்டும் என்று அவனின் மனம் துடித்ததாலேயே இன்று அவன் கலீல் வீட்டுக்குப் போகின்றான்.

மாற்றமடைந்த வீதிகள் தோற்றம் மாறிய வீடுகள் இவைகளுக்குள் கலீலின் வீட்டை அடையாளம் கண்டு வீட்டு வாசல் கதவைத் தட்டியபோது, கதவைத் திறந்தவள் அவனைக் கண்டதும் ஓரிரு நிமிடம் எதுவும் புரியாமல் நின்றாள். அவளின் தோளின் உயரத்திலும் இடுப்பின் உயரத்திலும் நின்ற இருபெண் பிள்ளைகளும் அவளுடையதுதான் என்பதை பிள்ளைகளின் முகங்கள் காட்டியது.

"நான்தான் ஞாபகமிருக்கோ..."

"வாங்கோ... வாங்க உள்ளுக்குள்ள."

கணவனை அறிமுகம் செய்து வைத்தாள். அவளின் கணவனை அவனுக்கு முன்பே தெரியும். அவனும் அவர்களோடு பொருளாதார வகுப்புக்கு வந்தவன்தான். அட்டளைச்சேனை முகமட். இப்போது வாத்தியாராக இருக்கின்றானாம்.

"கட்டாயம் சாப்பிட்டுப்போட்டுத்தான் போறியள்..." நயீமாவும் முகமட்டும் சேர்ந்தே சொன்னார்கள்.

"நீங்கள் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் நான் கட்டாயம் சாப்பிடத்தான் வந்தனான்."

அவன் அப்படிச் சொன்னதில் அவர்களுக்குச் சந்தோசம்.

இறைச்சி குழம்பு, இறைச்சி பொரியல், இறைச்சி பால்கறி, இப்படி ஒரே உணவை பல சுவைகளில் சமைக்கும் அந்த முஸ்லீம் வீட்டுச் சாப்பாடு அவனுக்கு எப்போதும் பிடிக்கும்.

"எப்ப ஊருக்கு வந்தயள், கனநாளா...?"

கேட்ட நயீமாவின் முகத்தை நிமிர்ந்து பார்த்தான் அவன். முக்காட்டுக்குள் மறைந்திருந்த முகத்தை மேலும் மறைத்துக் கொண்டாள் அவள்.

"தாஸன் எப்ப லண்டனுக்கு போறயள்."

சாப்பிட்டுக்கொண்டிருந்த நயீமாவின் கணவன் முகமட் கேட்ட கேள்வியைக் காதில் வாங்கிக் கொள்ளாதவன்போல், பதிலுக்குப் பதிலாக அவனும் கேள்வியையே கேட்டான்.

"எங்க உம்மாவக் காணயில்ல ராத்தா வீட்டிலயா."

அவனின் அந்த கேள்விக்கு நயீமா வெறுமையான ஓர் சிரிப்பையே உதிர்த்தாள்.

"நயீமாட உம்மா மௌத்தாகி இப்ப அஞ்சு வருசத்துக்கு மேலெல்லுவா தாஸன்." சாதாரணமாக ஓர் உணர்ச்சியும் இன்றியே சொன்னான் முகமட்.

ஓடிக்கொண்டிருக்கும் காலம் தன்னோடு எத்தனை பேர்களைக் கூட்டிக்கொண்டு செல்லுகின்றது என்பதை அவன் சிறிது நேரம் யோசித்து பார்த்தான். ஓரிரு நிமிடங்களை அமைதியாக கடத்தியவன் மீண்டும் கேட்டான்.

"அதுசரி, கலீல் இப்ப எங்க இருக்கிறான்.? சவூதியிலதானோ? கடைசியாக எப்ப ஊருக்கு வந்தான்... இனி எப்ப வருவானாம்?"

"ஆரு கலீல் காக்காவையா கேள்கிறயள்... அவரு இனி வரமாட்டார்."

"ஏன்?..." அவன் ஆச்சரியமாகக் கேட்டான்.

"அவரும் மௌத்தாவாகிவிட்டார்..."

நயீமா சொன்னதை அவன் காதுகள் நம்பவில்லை. சின்னபள்ளிவாசலின் வாங்கோசை ஒலி காதில் கேட்டது.

"என்ன. கலீல்... மௌத்தா... எப்ப... ஏன்... என்ன நடந்தது?" அவனின் வார்த்தைகள் கோர்வையாகாமல் சிக்கி சிதறியது.

"கலீல் காக்கா சுடுபட்டு செத்துபோனார். சுட்டது ஆருமில்ல தாஸன், ஒங்கட ஆட்கள்தான்."

நயீமா சொன்னதைக் கேட்டதும் அவனின் கையில் உள்ள சோற்றுக் குழையல் தானாக கீழே விழுந்தது.

"ஏன்... எங்கட ஆட்கள் கலீல ஏன் சுட்டாங்கள்?" அவன் மெதுவானகுரலில் கேட்டான்.

"சவூதியில் இருந்து வந்த கலீல் காக்கா ஒரு தொழில் செய்யணும் எண்டு நினைக்காமல் வந்ததும் வராததுமாய் ஜிகாத் படையில சேர்ந்தார். அதாலதான் அவரையும் சுட்டுப்போட்டாங்க."

சொல்லிவிட்டு முகத்து முந்தானையால் கண்களை துடைத்துக்கொண்டாள் நயீமா.

என்னோடு சேர்ந்து பழகிய கலீல்! நீ ஜிகாத் படையில் சேர்ந்தாயா? உன்னை எனது பெடியன்கள் சுட்டார்களா? இது என்ன காலத்தின் கோலமா.

அவனின் மனம் ஆயிரம் கேள்விகளைக் கேட்டது.

'கலீல் உன்னோடு நான் சேர்ந்து திரிந்த காலங்களிலெல்லாம் என் வீட்டு விசேஷங்களிலும் பண்டிகை நாட்களிலும் நாங்கள் சந்தோசமாக இருப்பதுபோல நீயும் எங்களோடு ஒன்றாக இருப்பாயே.

உனது சமைய பெருநாள் என்றாலோ பள்ளிவாசல் ஹந்தூரி நாள் என்றாலோ நான் உன் வீட்டுக்கு வந்து உரிமையுடன் கேட்டுவாங்கி சாப்பிடுவேனே. அப்படியெல்லாம் பழகிய உன்னால் எப்படியடா என் இனம், பின்பு உன் இனம் என்று பிரித்துபார்த்து பழக முடிந்தது. ஒன்றாக பழகிய ஓர் இனத்துக்கு முன்னால் உன்னை துப்பாக்கி ஏந்த வைத்தது எந்த தீய சக்தியடா. உன்னைப்போல எத்தனை இளைஞர்களடா இப்படி? ஏனடா இப்படி?'

மீண்டும் மீண்டும் ஆயிரம் கேள்விகளை கேட்டது அவனின் மனம்.

அடுத்தநாள் லண்டன் வர கொழும்பு புறப்பட்டான் அவன். பதினைந்து வருடத்தின் பின்பு ஊருக்கு வந்தோம் என்ற பூரிப்போ அந்த ஊரை விட்டு மீண்டும் போகின்றேனே என்ற துக்கமோ எதுவுமே அவன் மனதில் இல்லை. ஏனெனின் அவன் எதிர்பார்த்து வந்த அனைத்தும் அவனை ஏமாற்றிவிட்டது. வெறுமையான சோகமொன்று அவனின் உள் மனதை ஊடறுக்க அந்த ஊரைவிட்டு புறப்பட்டான் அவன்.

அக்கரைப் பற்றிலிருந்து கல்முனை நோக்கி பிரதான வீதியில் பஸ் போய்க்கொண்டிருந்தபோது மெல்லிய பச்சை நிறசாயம் பூசிக்கொண்ட அந்த பள்ளிவாசலை திரும்பிப் பார்த்தான் அவன். வெள்ளிக்கிழமை பகல் நேர தொழுகை உள்ளே நடக்க, வெளியில் சிலர் வருவோர் போவோரை அவதானமாகப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஒரு காலத்தில் இதே பள்ளிவாசலுக்குள் தொழுகைக்காக கலீல் செல்லும்போது அவன் கலீல் வரும்வரை வெளியில் காத்துக்கொண்டு நின்ற அந்த நாட்களை நினைத்துக்கொண்டான் அவன்.

# அவள் ஒரு செந்தாமரை

"ஏண்டி சுமதி வாவனடி இரவுக்கு கோயிலுக்கு போவம்."

தனக்கு அடுத்த ரில்லில் நின்றுகொண்டிருந்த ஆனந்தியின் கேள்வியில் எரிச்சல் அடைந்த சுமதி ஆனந்தியை முறைத்து பார்த்தாள்.

"உனக்கு எத்தனையோ தரம் சொல்லியிருக்கன், நான் கோயிலுக்கு வரமாட்டன் என்று. புண்ணியம்தேட கோயிலுக்குபோய் பலபேரை பார்த்து மனதால ஆயிரம் பாவங்கள தேடுறதவிட வீட்டில இருந்து ஒரு நிமிடம் கடவுள நினைத்தால் ஆயிரம் புண்ணியம் கிடைக்கும். நீயெல்லாம் உண்மையிலேயே கோயிலுக்கு போறது சாமிகும்பிடத்தானோ."

மெதுவான குரலில் ஆனந்தியிடம் சொல்லிவிட்டு தனது ரில்லில் வைத்த ஒரு இந்திய பெண்ணுக்குரிய மரக்கறிகளை நிறுத்து விலையை ரில்லில் கணித்துக்கொண்ட ஆனந்தி, தனது ரில்லுக்குரிய வரிசையை நிமிர்ந்து பார்த்தாள்.

"சீ... சனிக்கிழமை பார்த்துத்தான் இந்த சனங்கள் எல்லாம் வெளியில் வரவேண்டுமா?" ரில்தட்டி வலிகண்ட தன் விரல்களை முடக்கி நிமிர்த்திவிட்டு மனதுக்குள் சலித்துக்கொண்டாள்.

மீண்டும் வரிசையை நிமிர்ந்து பார்த்தாள். கூடைநிறைந்த மரக்கறிகளுடன் ஆங்கிலேயர்களும், இந்தியர்களும் வரிசையின் கடைசியில் நின்ற அவனின் முகத்தில் சுமதியின் பார்வை நிலைகுத்தி நின்றது.

"அது.... அது... செந்தூரனா?"

மீண்டும் ஒருமுறை பார்த்தாள்.

"என்ன காதலன் நினைப்பா?"

ரில்லில் சாமான்களை வைத்த வெள்ளைக்காரன் அவளைப் பார்த்து கண்சிமிட்டியபடி சிரித்துக்கொண்டு கேட்டதை அவள் ரசிப்பதுபோல் சிரித்தாள்.

"என்னடி புருஷன் நினைப்பாடி உனக்கு" என்று ஊரில் ஆச்சி கேட்கும் அனாகரிக வார்த்தையைத்தான் இந்த ஆங்கிலேயன் நாகரிகமான ஆங்கிலத்தில் கேட்கின்றான். ஊர்ந்து முன்னேறிவரும் வரிசையின் கடைசியில் நிற்கும் அவனை மீண்டும் பார்க்கின்றாள். சுமதி வெளியில் அடிக்கும் குளிர் காற்றிலும் அவள் உடம்பு வேர்க்கத் தொடங்கியது.

மீண்டும் பார்க்கின்றாள்.

இப்போது தெளிவாக தெரிகின்றது, அது செந்தூரன்தான்.

தலை சுற்றுவதுபோல் இருந்தது அவளுக்கு. வயிற்றில் ஏதோ அமிலம் சுரந்து வாய் வழியே வருவதுபோல் உணர்ந்தாள் அவள்.

யாரைக் காணக்கூடாது என்று நினைத்தாளோ யார் தன்னைக் காணக்கூடாது என்று தன்னை இந்த ஆறுமாதமாக ஒழித்து வைத்துக் கொண்டாளோ அவன் இன்று தன்முன்னே வருவானென்று அவள் நினைத்திருக்கவேயில்லை.

அடர்ந்த தாடிக்கிடையில் தெரியும் சோகமுகம், தளர்ந்த உடல், கலைந்த தலைமுடியுடன் நிற்கும் செந்தூரனை பார்க்க

பரிதாபமாய் இருந்தது அவளுக்கு! அவனை இந்த நிலைமைக்கு ஆளாக்கிய தன்னை நினைத்து தானே வெட்கப்பட்டுக்கொண்டாள் அவள்.

பெண்ணடிமை ஒழியவென்று பெரிதாக பேசுவோரும்
பெண்ணினமே இவ்வுலகில் உயர்வென்று சொல்வோரும்
அவ்வினத்தை வாழவைக்க வாடகைதான் கேட்பதேனோ
கண்மணிகள் பெண்மணிகள் என்று நாங்கள் சொல்வதற்கு
கண்ணீரில் பெண்கள்பலர் மிதப்பதுதான் காரணமோ?

நேற்றிரவு லண்டன் தமிழ் வானொலியில் ரெலிபோனில் அவன் பாடிய கவிதை வரிகள் அவள் காதுகளில் இப்போதும் ஒலித்துக்கொண்டே இருந்தது.

அவனின் உடலில் மாற்றம் தெரிந்தாலும் அந்தக் கவிதையில் தெரிந்த அடுக்கடுக்கான சொற்களிலும், அழகான உவமைகளிலும் எந்த மாற்றத்தையும் அவள் அறியவில்லை. அதை அவள் மட்டும்தான் அறிவாள். ஏனெனில் ஒரு காலத்தில் அவனின் ரசிகையாக, அவனின் கவிதையாக, அதையும் மீறி அவனின் காதலியுமாக இருந்தவள் அல்லவா அவள். அவளால் எப்படி அவனையும் அவனின் கவிதையையும் மறக்க முடியும்.

செந்தூரனும் சுமதியும் ஒரே பாடசாலையில் படித்தவர்கள். அப்போதெல்லாம் வேறொரு புனை பெயரில் செந்தூரன் பத்திரிகைகளுக்கு எழுதும் கவிதைகளை அவள் விரும்பி ரசிப்பாள். அது தான்தான் என்று அவனும் சொல்லிக்கொள்ளவில்லை. அவளுக்கும் தெரிந்திருக்கவில்லை. ஒருமுறை பத்திரிகையில் வெளிவந்த தனது கவிதையொன்றை தானே அவளிடம் தரக்குறைவாக விமர்சனம் செய்தபோது அதனால் ஏற்பட்ட கோபத்தில் அவள் அவனோடு பல நாள் கதைக்கவேயில்லை.

அந்த வேளையில் பாடசாலை மாணவர்கள் எல்லோருமாக இலங்கை முழுவதுமாக சுற்றுப்பிரயாணம் மேற்கொண்டபோது கண்டிபேராதனை பூங்காவின் ஒட்கிற் மலர் வீட்டுக்குள் வைத்து.... 'என் கவிதையை காதலிப்பவளே என் காதல் என்ன உனக்கு கானல் நீரா? என் பாட்டுக்கு பாமாலை சூட்டுபவளே, உனக்கு நான் பூமாலை சூட்ட நினைத்திருப்பதை நீ அறிய மாட்டாயா?' என்று எழுதி அவளிடம் கொடுத்த அந்த காதல் கடிதத்தின் பின்புதான் அவர்கள் இருவரும் காதலர்கள் ஆனார்கள்.

வருடங்கள் கடந்தன. பாடசாலை படிப்பு முடிந்தும் காதலர்களாகவே இருந்தார்கள். நாட்டில் கலவரமும் தொடங்கியது. வேலை விசயமாக கொழும்பு வந்தான். இரவோடு இரவாக வீடுகளுக்குள் வந்த ராணுவம் கூட்டிச்சென்று தங்கள் கைகளாலேயே தங்களுக்கு குழிதோண்ட வைத்து குற்றுயிரும் குறையுருவுமாக சுட்டுக்கொல்லப்பட்ட ஐம்பத்தாறு தமிழ் இளைஞர்களுள் தன் தம்பியும் அடங்கினான் என்ற செய்தி கேட்டதும் கொழும்பில் இருந்து ஊருக்கு போகாமலேயே லண்டன் வந்ததில் அவனைப் பெற்ற தாய்க்கு நிம்மதி. ஆனால் தன் உயிர்க் காதலி சுமதியை விட்டு பிரிந்து வந்ததில் அவன் நிம்மதி இன்றி தவித்தான்.

நான்கு வருடங்களுக்குப் பின்பு சுமதியையும் லண்டனுக்கு வரவழைக்க ஏஜென்சிக்கு காசு கட்டினான். சுமதியின் வரவை எண்ணி அவன் தனது இல்லற வாழ்க்கையைப்பற்றி கனவு கண்டு கொண்டிருந்தான். கொழும்பில் இருந்து புறப்பட்ட சுமதி பல மாதங்களாகியும் தன்னிடம் வந்து சேராததை நினைத்தும், சுமதியிடம் இருந்து தனக்கு எந்த செய்தியும் கிடைக்காததையும் நினைத்து பைத்தியம் பிடித்தவன்போல் இருந்தான். கடைசியில் அவளைக் கூட்டிவந்த ஏஜென்சிக்காரன் சுமதியையும் அவளோடு வந்த இன்னும் பலரையும் ஏதோ ஒரு நாட்டில் விட்டுவிட்டு தலைமறைவாகிவிட்டான் என்றும், அது எந்த நாடு என்று தெரியாமலும் செய்வதறியாது அலைந்தான் செந்தூரான்.

வேலை முடிந்து வீடுவந்தால் அவன் அவளுக்காக வாங்கிவைத்திருக்கும் பொருட்களையும், அவளுக்காக ஏங்கிக்கிடக்கும் தன் கட்டிலின் பாதியையும் விரக்தியுடன் பார்ப்பான் செந்தூரான். அன்றும் அப்படித்தான் வேலைமுடிந்து வந்தவன் வெகுநேரத்தின் பின் தன் தொலைபேசி ஒலிப்பதிவு நாடாவைச் சுழல விட்டான்.

"செந்தூரான், நான்தான் உங்கள் சுமதி பேசுறன்... மன்னிக்கவும். உங்கள் சுமதியல்ல... உங்கள் மனைவியாக வேண்டுமென்று உங்களோடு சேர்ந்து வாழவேண்டுமென்று உங்களால் இந்த நாட்டுக்கு வரவழைக்கப்பட்ட நான் இன்று வேறொருத்தரோடு வாழும்போது உங்கள் சுமதியென்று என்னை நான் என்னவென்று சொல்ல முடியும்?"

"செந்தூரான் ஐந்தாறு பெடியன்களோடு என்னையும் கூட்டிவந்த ஏஜென்சிக்காரன் எங்களையெல்லாம் எங்கோ ஒரு நாட்டில் விட்டுவிட்டு ஓடிவிட்டான். எங்களோடு வந்தவர்களில் சிலர் தாங்கள் போக வேண்டிய இடங்களுக்குப் போய்ச் சேர்ந்துவிட்டார்கள். ஊருக்கும் போகத் தெரியாமல், உங்களோடும் தொடர்பு கொள்ள முடியாமல் கண்களைக் கட்டி நடுக்காட்டில் விட்டதுபோல் - துடுப்பில்லா படகொன்று நட்டாற்றில் தவித்ததுபோல் - நான் பயந்த நேரத்தில் என்காக உதவி செய்ய ஒருத்தர் முன்வந்தார். அதற்காக அவர் கேட்டது நம் காதலை. ஆம் தன்னை கல்யாணம் செய்து கொள்வதென்றால் என்னையும் தன்னோடு லண்டன் கூட்டிச் செல்வதாகச் சொன்னார். நானும் அவ்ரோடு வந்துவிட்டேன். நடந்தவைகளை நியாயம் என்று சொல்லி வாதாட நான் இவைகளைச் சொல்லவில்லை. என்னை நடத்தை கெட்டவள் என்று மட்டும் நீங்கள் நினைத்துவிடக்கூடாது என்பதற்காகவே இவைகளைச் சொல்லுகின்றேன். என்னை மன்னித்து மறந்துவிடுங்கள் செந்தூரன்."

தொலைபேசியில் ஒலித்த அந்தச் செய்தியைக் கேட்டு அழுதான், துடித்தான், துவண்டான், செந்தூரன். அதன் பின்பு

தன்னைத்தானே தேற்றிக்கொண்டு தொடர்ந்தும் பத்திரிகைகளுக்கும் வானொலிகளுக்கும் எழுதினான். தன் எழுத்துக்களில் தனது வாழ்வின் தோல்வியின் நிழல் படாமல் பார்த்துக்கொண்டான். அவனின் வாழ்வில் நடந்து முடிந்த அந்தச் சோக நிகழ்வுக்குப் பின்பு இன்றுதான் அவனை காணுகின்றாள் அவள்.

சுமதி பயந்ததுபோல் அவன் அவளின் ரில்லுக்கு வராமல் ஆனந்தியில் ரில்லுக்கு சென்று காசைக்கொடுத்து சாமான்களை வாங்கிக்கொண்டு வெளியில் சென்றதில் அவள் நிம்மதி பெருமூச்சு விட்டாள். இருந்தும் அவளின் உடலில் ஏற்பட்ட நடுக்கம் இன்னும் தீரவில்லை. அவசர அவசரமாக தனது ரில்லுக்குரிய காசை கணக்குப் பார்த்து மனேஜரிடம் கொடுத்துவிட்டு, தனது கை பையை தூக்கி தோளில் போட்டுக்கொண்டு வெளியில் வந்து ரோட்டின் இருபக்க வாகனங்களையும் பார்த்து மெல்ல ரோட்டை கடந்துவந்து மறுபக்க வீதியை அடைந்தவளின் முன்னால் யாரோ வழிமறித்து நிற்பதை உணர்ந்து நிமிர்ந்து பார்த்தவள் சிலையாக நின்றாள்.

இடுப்பில் கைகுத்தி சரிந்த தலையுடன் மெல்லிய சிரிப்புடன் தன் முன்னால் நாகரீகமாக நின்று கொண்டிருந்த செந்தூரன் பார்ப்பதற்கு அழகாக இருந்தான். அவனின் முகத்தில் எந்தவித சலனமும் இல்லை. ஆனால் சுமதியின் முகமோ பயத்தில் கறுத்தது. அவள் தலையைக் குனிந்து கொண்டாள்.

இவன் ஏன் என்னை வழிமறித்து நிற்கின்றான். இவன் என்ன கேட்கப்போகின்றான் என்னிடத்தில், எங்கேயடி இந்த நாட்டுக்கு நீவர நான் கட்டிய பணம் எங்கேயடி என்று கேட்கப் போகின்றானா?

காதலித்த என்னை கை கழுவிவிட்டு கண்டவன் ஒருத்தனோடு கைகோர்த்துவர உனக்கு... உனக்கு எப்படியடி மனம்

வந்தது என்று கேட்கப்போகின்றானா. அப்படி கூட்டிவந்தவன்கூட உன்னை இப்போது கைவிட்டுவிட்டானே, அதுதான் நீ எனக்குச் செய்த துரோகத்துக்கு சம்பளம் என்று சொல்லப்போகின்றானா? அப்படியெல்லாம் கேட்டால் அது நியாயமான கேள்விகள்தானே. ஆனால் அவைகளைத் தாங்கிக்கொள்ளும் சக்தியோ, அவனின் கேள்விகளுக்குரிய பதிலோ தன்னிடம் இல்லையே. இறைவா அதற்கிடையில் இந்த நிமிடமே என் உயிர் போய்விடக்கூடாதா? சுமதி தன்னைத்தானே கேட்டபோது,

"சுமதி எப்படி இருக்கிறீர்...."

வண்டின் ரீங்காரத்தில் பூவிதழ்கள் அசைவது போல் செந்தூரனின் அந்த கேள்வி அவளின் செவிப்பறைகளை குளிர வைத்தது.

அம்பை எதிர்பார்த்து நின்ற அவள் நெஞ்சை தும்பைப்பூவால் யாரோ வருடிவிட்டதுபோல் இருந்தது அவளுக்கு.

நான் செய்தது அனைத்தும் துரோகம் என்று தெரிந்தும் ஒரு தந்தையைப்போல் ஒரு தமையனைப்போல் இவனால் மட்டும் இவ்வளவு தயவாக எப்படி பேச முடிகின்றது. அவள் மௌனமாகவே நின்றாள்.

"எப்படி இருக்கிறீரப்பா...?"

மீண்டும் அழுத்தமாக கேட்டான் செந்தூரன்.

"ம்... எப்படி இருக்கிறாய். கூட்டிவந்தவன் கூட்டாளிகளோடு சேர்ந்து குடித்தான். வெளிநாட்டு நாகரீகம் பழகியதும் வெவ்வேறு பெண்களோடு சுற்றினான். ஏன் என்று கேட்டதற்கு என்னை ஏன்என்று கேட்க நீ என்ன என் மனைவியா என்றான். ஒருத்தனை

காதலித்துவிட்டு இன்னொருத்தனோடு வந்த நீ, நான் இன்னொருத்தியோடு பழகுவதை என்னவென்று தடுக்கமுடியும் என்றான். கடைசியாக தனக்கு சீதனத்தோடு பெண்பார்ப்பதாகவும் தன்னை மறந்துவிடு என்றும் சொல்லிவிட்டு சென்றுவிட்டான். காதலித்தவனை நான் கைவிட்டேன்; கைபிடிப்பேன் என்றவன் என்னை கைவிட்டான். கடைசியாக கன்னிப்பெண்ணாய் இல்லாமலும் கைம்பெண்ணாய் இல்லாமலும் கண்ணீரில் நிற்கின்றேன். எப்படி இருக்கின்றாய் என்ற உங்கள் கேள்விக்கு இப்படித்தான் இருக்கின்றேன் என்று எப்படி என்னால் சொல்ல முடியும்?" தனக்குதானே கேள்விகேட்டு தன் மனதுக்குள்ளேயே அழுது கொண்டாள் சுமதி.

"சுமதி என்னப்பா நான் கேட்கிறன் நீ பேசாமல் நிற்கிறீர்." சொல்லிக்கொண்டே அவனையும் அறியாமல் அவளின் தாடைதொட்டு முகத்தை நிமிர்த்தினான் செந்தூரன்.

சுமதியின் கண்களில் நீர் தேங்கி நின்றது. இன்னும் ஏதாவது சொன்னால் அவள் அழுதுவிடுவாள் என்பதை அவன் நன்கு அறிவான்.

"சுமதி, நான் எல்லாம் கேள்விப்பட்டேன். எல்லாம் உன் சினேகிதி ஆனந்திதான் சொன்னா. நீ எதுக்கும் கவலைப்படாத. இப்ப இதில நிண்டு கதைச்சால் ஆட்கள் புதினம் பார்ப்பினம். நீ வீட்டபோ. நான் நாளைக்கு வாறன். ஆயுத்தமாக இரு. அதற்கு பிறகு நாங்கள் கதைக்கலாம். கடந்த காலத்தை பற்றியல்ல நமது எதிர்காலத்தை பற்றி. இப்ப நீ வீட்டபோ."

சொல்லிவிட்டு நடந்து போய்க் கொண்டிருந்த செந்தூரனை வெகுதூரம்வரை பார்த்துக்கொண்டிருந்த சுமதியின் நினைவில் கடந்தவார பத்திரிகையொன்றில் வெளிவந்த அவனின் கவிதையொன்று தெரிந்தது.

ஓ... ஒரு வர்க்கமே.
பாட்டினிலே மட்டும் சொல்வீர் பத்தினிகள் என்று பெண்ணை
பரத்தையர் என்ற பட்டம் சூட்டியதும் ஆண்கள்தானே.
காட்டினுள்ளே சென்றுவந்த சீதையையே பரீட்சித்த
ராமபிரான் என்பவரும் ஆண் வர்க்க இனம்தானே.
சேற்றினிலே செந்தாமரை இருப்பதையோ ரசிக்கின்றீர்
தாமரையில் சேறுபட்டால் துடைப்பதற்கேன் மறுக்கின்றீர்.

சுமதி மீண்டும் அவனின் கவிதைக்கு ரசிகையாகவும் அவனின் கவிதையின் காதலியாகவும் மாறிவிட்டாள். அதையும் மீறிய இன்னும் ஓர் உறவாகவும்.

அவள் சேற்றில் நின்றபோதும் அவளில் சேறு பட்டபோதும் அவளை அவன் ரசிப்பதற்கும் ஏற்றுக்கொள்வதற்கும் என்றும் தயார். அதுதான் அவன் அவளில் கொண்ட காதலின் அடையாளம். அவனுக்கு என்றுமே எந்த நிலமையிலேயுமே அவள் ஒரு செந்தாமரைதான்.

# தியாகங்கள் பலவிதம்

நள்ளிரவு தாண்டிய அதிகாலை நேரம்.

மலைத்தேச மழை சிறிதாக பெய்து ஓய்ந்து விட காற்றில் மிதந்து வந்த பஞ்சுக் குவியல்போல சூழ்ந்திருந்த பனியில் பலகட்டிடங்களை கொண்ட சதுர வடிவான அந்த களுத்துறை சிறைச்சாலை அமைதியாக இருந்தது.

எத்தனை தமிழர்களை உள்ளடக்கி வைத்து நிக்கின்றது இந்த கட்டிடம். ஈழத்தின் தமிழ்பிரதேசங்களின் மூலை முடுக்குகளில் இருந்தெல்லாம் கொண்டு வரப்பட்ட இந்த தமிழ் இளைஞர்களின் மனதினுள் புதைந்து கிடக்கின்ற வெவ்வேறுபட்ட சோகங்களை யார் உணர்வார்கள். தாய் தந்தையை, சகோதர சகோதரிகளை, மனைவி பிள்ளைகளை, காதலியை, நண்பனை, இப்படி எத்தனையோவற்றை பிரிந்து தவிக்கும் இந்த தமிழ்கைதிகள் செய்த பாவம்தான் என்ன?

இறைவா ஏன் எனக்கிந்த தண்டனை. நான் யாருக்கு என்ன பாவம் செய்தேன் ஏன்? ஏன்? இப்படி சோதிக்கின்றாய், மனம் வெந்து பெருமூச்சு விட்டு விட்டு மறுபக்கம் புரண்டு படுத்தான் சஞ்ஜீவன். எத்தனை தடவை எப்படி புரண்டு படுத்தாலும் தூக்கம் என்பது அவனின் கண்களை நெருங்க மறுத்துக் கொண்டே இருந்தது. ஒரு சிலரின் குறட்டை சத்தத்தை தவிர வேறொரு சத்தமும் இன்றி அந்த சிறைக்கூடம் அமைதியாகவே இருந்தது.

களுத்துறை சிறைச்சாலை அமைந்திருப்பது ஓர் உயரமான இடத்தில். சுற்றிவர பலாமரச்சோலை. சிறைக் கூடத்தின் பின்னால் ஒரு பெரிய பள்ளத்தாக்கு போன்ற நிலவெளி. எங்கோ இருந்து வரும் ஒரு சிறிய நீர்வீழ்ச்சி அந்த பள்ளத்தாக்கில் விழுந்து ஓர் நீரோடைபோல் ஓடுவதை பார்க்க மிகவும் அழகாக இருக்கும்.

சிறைக்கூடத்தின் முன்வாசல் முழுவதும் பல வர்ண நிறங்களையுடைய குளிர் பிரதேசத்து பூஞ்செடிகள் அழகாக வளர்க்கப்பட்டிருக்கும். அதையும் தாண்டி கொஞ்சம் வெளியில் வந்தால் அழகாக பராமரிக்கப்பட்டு சமனாக வெட்டப்பட்ட தேயிலைச் செடிகள்.

சிறைக்கூடம் என்று தெரியாமல் புதிதாக வருவோர்களை அது ஓர் சுற்றுலா தலம் என்றே எண்ணத்தோன்றும் அளவுக்கு கலை ரசனையோடு வடிவமைக்கப்பட்ட அந்த கட்டிடங்களுக்குள்ளே அடைபட்டிருப்பது அப்பாவி தமிழர்கள் என்பதை நினைக்கும் போதுதான் நெஞ்சு நெருடுகிறது.

இப்பநேரம் என்ன இருக்கும். பக்கத்தில் படுத்திருக்கும் திருகோணமலை சீலன் மெல்லிய குரலில் குசு குசுத்தான்.

நாங்களெல்லாம் மணிபார்க்க சிறைச்சாலைக்குள்ள மணிக்கூடோடதானே இருக்கிறம். அடைப்பட்டு கிடக்கிற எங்களுக்கு பொழுது விடிஞ்சால்தான் என்ன? விடியாமல் விட்டால்தான் என்ன? சஞ்ஜீவனுக்கு மூண்றாவதாக படுத்திருக்கும் மண்டூர் பிரகாஷ் சீலனிடம் நக்கலாகச் சொன்னான்.

பலாமரத்தில் பழுத்துதொங்கும் பலாப்பழத்தை ஏதோ ஓர் பறவை கொத்தியதோ அல்லது பழம் பழுத்து விழுந்து வெடித்ததோ தெரியாது. பலாப்பழ வாசம் மூக்கை துளைத்து. பள்ளத்தாக்கில் ஓடுகின்ற நீர் ஓடையின் சலசலவென்ற சத்தம் காதுக்கு இதமாக இருந்தது. இத்தனை இருந்தும் சஞ்ஜீவனால் மட்டும் தூங்கவே முடியவில்லை. காரணம் நேற்று வந்த அக்காவின் கடிதம்.

அன்புள்ள தம்பி நீ எப்படி இருக்கிறாய் இங்கு என்னென்னமோ நடக்கிறது. அவைகளையெல்லாம் எழுதமுடியாத நிலைமை. நான் பெற்ற மூத்த மகனை ராணுவத்துக்கு பலிகொடுத்த பின்பு உன் உருவில் என் மகனை பார்த்துக் கொண்டிருந்தேன்.

படுபாவிகள் உன்னையும் கொண்டு அடைத்துவிட்டார்கள். இப்போது நம் வீடும் எங்கள் வாழ்வும் வெறிச்சோடி கிடக்கின்றது. தம்பி ஒரு விசயம் எழுதுகின்றேன். மனதை தேற்றிக்கொள். அம்மாவுக்கு இப்போதெல்லாம் என்னேரமும் உன் நினைவுதான். நீ விடுதலையாகிவிட்டாய் என்பது போலவும், நீ அவளின் முன்னால் நிற்கின்றாய் என்றும் சொல்லிக்கொண்டு ஏதேதோ பிகற்றுகின்றா. மறதியிலும் உன்னுடனேயே கதைக்கின்றா. அம்மாவுக்கு ஏதும் நடந்து திடீரென உனக்கு எழுதினால் நீ அதை தாங்கிக் கொள்ள மாட்டாய் என்பதாலேயே இதை எழுதுகிறேன். மனதை தேற்றிக் கொள் தம்பி. உண்மையை சொல்வதென்றால் இன்றைக்கோ நாளைக்கோ என்று அம்மா நாட்களை எண்ணிக் கொண்டிருக்கின்றா. ஏதோ கடவுள் விட்ட வழி நீ எதைப் பற்றியும் யோசியாமல் மனதை திடமாக வைத்துக்கொள். வேறில்லை. இப்படிக்கு உன் அன்பு அக்கா.

அக்காவின் கடிதத்தின் கடைசிவரிகள் சஞ்ஜீவனின் மனதில் முட்டிமோதியது. அம்மா, ஏன் அம்மா? நான் வரும்வரை உன்மகனுக்காக இன்னும் கொஞ்சகாலம் இருக்க மாட்டாயா? என்னைபெற்று எனக்காக நீ எவ்வளவோ செய்தாய். உனக்காக நான் இதுவரை என்னம்மா செய்தேன். அம்மா என்னை மடியில் சுமந்த உன்னை என் மடியில் சாய்த்து என்கையால் ஒருசொட்டு நீர் நீ பருகிவிட எனக்கொரு சந்தர்ப்பம் தரமாட்டாயா அம்மா. அம்மா ஒவ்வொரு நாளும் என் கனவில் வந்து என்னோடு ஏதேதோ எல்லாம் சொல்லுகின்றாய். உன் கனவில் நான் வந்து நான் சொன்னதை நீ கேட்டாயா என்று நான் யார்மூலம் அம்மா அறிவேன். அம்மா.

சஞ்ஜீவனின் கண்களில் இருந்து வடிந்த நீர் தலையணையாக வைத்திருந்த கையில் வடிந்து விழுந்தது. அண்ண ஏன் அண்ண அழறியள்.

சஞ்ஜீவனுக்கு மறுபுறம் படுத்திருக்கும் ரமேஸ் மெதுவாக கேட்டான்.

ரமேஸின் கேள்விக்கு சஞ்ஜீவன் எதுவித பதிலும் சொல்லவில்லை.

ரமேஸ், மூன்று நாட்களுக்கு முன் மகசீன் சிறைச்சாலையில் இருந்து களுத்துறை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டவர்களுள் ஒருவன். சஞ்ஜீவனுக்கு பக்கத்தில் இடம் கொடுக்கப்பட்டிருந்தாலும் இன்றுவரை சஞ்ஜீவன் ரமேஸுடன் அவ்வளவாக கதைப்பதோ பழகுவதோ இல்லை. விடிந்தால் தன் மகசீன் நண்பர்களுடன் கதைத்திருந்து விட்டு படுக்கைக்கு மட்டும் தன் இடத்துக்கு வருவான் ரமேஸ். இதற்குள் அவனுடன் கதைக்க சஞ்ஜீவனிடம் எந்த விசயமும் இருக்கவில்லை.

பல மணிநேர சிந்தனையின் சோர்வால் அயர்ந்து தூங்கிவிட்ட சஞ்ஜீவனை வெளியில் கலகலத்த காலைச் சாப்பாட்டு பாத்திரங்களின் சத்தம் தட்டி எழுப்பியது.

படுக்கையை சுருட்டி வைத்துவிட்டு சாப்பாட்டுக் கோப்பையுடனும் தேனீர்க்கப்புடனும் வெளியில் சென்று கணக்கெடுப்பு முடிந்ததும் வரிசையில் நின்று சாப்பாட்டையும் தேனீரையும் வாங்கி தன் இருப்பிடத்தில் வைத்து விட்டு பல்துலக்கி முகம் கழுவிவிட்டு கைதிகளின் பிரார்த்தனை அறைக்கு சென்று வெகுநேரமாய் கண்மூடி இருந்தவனின் முதுகில் யாரோ கைவைத்ததை உணர்ந்து திரும்பிப் பார்த்தான் சஞ்ஜீவன். ரமேஸ். ரமேஸ்தான் நின்று கொண்டிருந்தான்.

எண்னண்ண பிரச்சினை. இரவு இரவாக அழுதனீங்கள். இப்ப சாப்பிடவும் இல்ல. என்னண்ண பிரச்சினை.

ஒரு சகோதரனின் பரிவுடன் கேட்ட ரமேஸை கலங்கிய கண்களுடன் பார்த்தான் சஞ்ஜீவன்.

அண்ண அடைபட்டிருக்கிற எல்லாருமே தமிழர்கள். நம்மட மனதுக்குள்ள இருக்கிற கவலைகளை நாம நமக்குள் பகிர்ந்து கொள்ளுறதுலதான் நம்மட மனம் ஆறுதலடைய முடியும். அதைவிட வேற எதுவும் சொல்ல முடியாது. ஏன் அண்ண கவலையாய் இருக்கிறயள்.

கேட்டு முடித்த ரமேஸுடம் தன் தமக்கை அனுப்பிய கடிதத்தை கொடுத்தான் சஞ்ஜீவன்.

கடிதத்த படித்து முடித்த ரமேஸின் கண்கள் கலங்கியது. அம்மாவுக்கு என்னண்ண வருத்தம்.

தன் அம்மாவை அம்மாவுக்கு என்று பொதுவாக சொன்ன விதம் சஞ்ஜீவனின் மனதை நெருடப்பண்ணியது.

நான் பிடிபட்ட அதிர்ச்சியில் மாரடைப்பு வந்து அம்மா கீழ விழுந்திட்டா. இப்ப அம்மாவால நடக்கமுடியாது. நல்லாய் கதைக்கவும் முடியாது. சொல்லும் போதே சஞ்ஜீவனின் குரல் தளுதளுத்தது. கவலைப்படாதேயுங்கோ அண்ண. அம்மாவுக்கு எதுவும் நடக்காது. அது சரி உங்களுக்கு ஒரு லவ்வும் இருக்கிறதாக பிரகாஷ் சொன்னான் மெய்யே. புதிராக கேட்டான் அவன். ஓமோம் காதலிச்சன். என்னை காதலிச்ச பாவத்துக்காக எனக்காக காத்திருக்கிறாள் அவள் காலம் முழுவதையும் கம்பி வேலிக்குள்ள கடத்திவிட்டு, காலம் பூராவும் உன்னைக் கண் கலங்காமல் காப்பாற்றுவேன் என்று என்ன தைரியத்தில் நான் அவளுக்கு கடிதம் எழுதமுடியும். அதனால்தான் எனக்காக காத்திராமல் வீட்டில் பார்க்கும் மாப்பிள்ளையை கட்டிக் கொள் என்று எழுதிவிட்டன். விரக்தியுடன் சொன்னான் சஞ்ஜீவன்.

நீங்கள் ஈஸியாய் எழுதிப்போட்டியள். அவவின்ர மனம் என்னபாடு படும் என்று யோசிச்சியளே. அண்ண உள்ளுக்கு அடைப்பட்டிருக்கிறவையளில உங்களுக்கு மட்டும்தான் பிரச்சினை

என்று நினைக்கிறயளே. என்னுடையே வாழ்க்கையில எனக்கேற்பட்ட அனுபவங்களையும் சோக நிகழ்வுகளையும் நீங்கள் அறிய நியாயமில்லை. இருந்தாலும் சொல்லுறன்.

எனது சின்னவயதிலேயே அப்பா வருத்தமாய் கிடந்து போய் சேர்ந்திட்டார். இரண்டு அக்காமார் கணவன்களை இழந்து விட்டு கண்ணீர் வடிக்கின்றார்கள். ஒரு தங்கை அவளும் அக்காமாரின் பராமரிப்பில் வளர்கிறாள். குடும்பத்தின் மூத்தவன் என் அண்ணன் அவனும் இயக்கத்தில் சேர்ந்தான். அண்ணனைத் தேடிவந்த ராணுவத்தை கண்டதும் அண்ணன் ஓடி தப்பிட்டான். ஆனால் அண்ணனுக்கு வைச்சகுறி குசினிக்குள் இருந்த அம்மாவுக்கு பட்டு அம்மா அந்த இடத்திலேயே செத்துபோயிட்டா. குடும்பத்தை கவனிக்க வேண்டிய நான் இப்ப உள்ளுக்குள்ள. இப்ப சொல்லுங்கோ சோகங்கள் எல்லாருக்கும் இருக்குத்தானே. சாதாரணமாகவே சொல்லி முடித்தான் ரமேஸ்.

இப்படியெல்லாம் உன் குடும்பம் இருக்கும்போது ஏன் உண்ணாவிரதம் அதுஇது என்று இருந்து சும்மா அவன்களிட்ட அடிவாங்குகிறாய். உனக்கு ஏதும் என்றால் உன் குடும்பத்தை யார் பார்ப்பார்கள். சொல்லி முடித்த சஞ்ஜீவனை ஏளனமாக பார்த்தான் ரமேஸ்.

அண்ண உண்டு உண்டு உறங்கி விழிப்பதுதான் நம்வாழ்வா. நம்தேசத்தில மானபங்கப் படுத்தப்பட்ட பெண்கள் எத்தனை? கொன்று குவிக்கப்பட்ட தமிழர்கள் எத்தனை? வெந்து கருகிய குழந்தைகள் எத்தனை? கொண்டு வந்து அடைக்கப்பட்ட தமிழ் இளைஞர்கள் எத்தனை? அத்தனையும் இன்னும் எத்தனை நாட்களுக்குத் தொடரவேண்டும்? அடைப்பட்டுக்கிடந்தாலும் நாமும் மானம் உள்ள தமிழர்தான் என்பதை காட்டவேண்டாமா? எங்களுக்கு ஓர் விடிவு எப்போதுதான் ஏற்படுவது? நான் உண்ணாவிரதம் இருந்தது எனக்காக மட்டுமா? இல்லையே. ஏன் என்னுடைய உண்ணாவிரதத்தின் பலனாக உங்களுக்குக்கூட உங்கள்

அம்மாவைப்பார்க்க ஓர் சான்ஸ் கிடைக்கலாமே. அண்ண நாங்கள் வாழும்போது எங்களின்ர வாழ்க்கை நாலுபேருக்காவது பிரயோசனப் படவேணும். இல்ல சாகும்போது எங்கட உயிர் இன்னுமொரு உயிருக்காவது பிரயோசனப்படவேணும். இதுரண்டும் இல்லையெண்டால் நாங்கள் பிறந்தும் பிரயோசனம் இல்லை, இறந்தும் பிரயோசனம் இல்லை. என்னை பொருத்தவரையில என்னுடைய வாழ்வில் இனிமேல் இழக்கவும் எதுவும் இல்லை. இனிமேல் என்வாழ்வும் உடலும் உயிரும் என்னுடைய தாய்மண்ணுக்குத்தான். இதில இனி எந்த மாற்றமும் இல்ல. சொல்லிமுடித்த ரமேஸின் முகத்தை நிமிர்ந்துபார்க்க சக்தியற்றவனாகி தலைகுனிந்தான் சஞ்ஜீவன். தன்னைவிட வயதில் இளையவனாய் இருந்தாலும் அவனின் வார்த்தைகளுக்கு மானசீகமாக தலைவணங்கினான் சஞ்ஜீவன்.

இப்போதெல்லாம் சஞ்ஜீவனும் ரமேஸும் ஒருவருக்கொருவர் ஆறுதல் கூறும் நண்பர்களாகவே பழகத் தொடங்கிவிட்டார்கள்.

இன்று குளித்துமுடித்து விட்டு வெளியில் வந்த சஞ்ஜீவனிடம் உனக்கோர் கடிதம் வந்தது. அதை ரமேஸ் வாங்கிக் கொண்டு போனான் என்று பிரகாஷ் சொன்னதும், ரமேஸை தேடிப் பிடித்து கடிதத்தை கேட்டபோது, ரமேஷ் தரமாட்டேன் என்று சிரித்துக் கொண்டிருந்தான்.

சஞ்ஜீவன் எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தான்.

அது உங்கட ஆள் அனுப்பிய கடிதம். இரண்டொரு நாள் உங்கள ஏங்கி தவிக்க விட்டுத்தானண்ண கடிதத்தருவன். எண்டாலும் அண்ண உங்களில அவவுக்கு இவ்வளவு ஆசையே. நீங்கள் எழுதின கடிதத்துக்கு நல்லாய் பேசியும் எழுதியிருக்கிறா தெரியுமே. என்ன பார்க்கவேணும் போல இருக்கே.

ரமேஸ் கதைக்க, கதைக்க, சஞ்ஜீவனுக்கு சிரிப்பும் கோபமும் மாறி மாறி வந்தது.

ரமேஸ் எனக்கு வந்த கடிதத்த நான் காட்டாமல் நீ படிச்சதே பிழையான விசயம். அதுக்குள்ள நையாண்டி வேற. மரியாதையா கடிதத்த தா. இல்ல உதை வாங்குவாய்.

சஞ்ஜீவன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே மதியநேர சாப்பாட்டு மணி ஒலிக்க எல்லோரும் கோப்பைகளுடன் வரிசையில் வர சஞ்ஜீவனும் வந்துவிட்டான்.

மதிய சாப்பாடு முடிந்து இரவு சாப்பாட்டு நேரம் வரைக்கும் சஞ்ஜீவன் எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தும் ரமேஸ் கடிதத்தை தர மறுத்துவிட்டான். தன் காதலி புவிதா கடிதத்தில் என்ன எழுதியிருப்பாள் என்பதை அறிய சஞ்ஜீவனின் மனம் அங்கலாய்த்தது.

இரவு நேரச்சாப்பாடும் முடிந்து எல்லோரையும் உள்ளே விட்டு கதவும் பூட்டியாகி விட்டது. இனி கடந்தகால நினைவுகளை துணைக்கழைத்துக் கொண்டு எல்லோரும் தூங்கவேண்டியதுதான். தூங்குகின்றார்களோ தூங்குவதை போல் நடிக்கின்றார்களோ தெரியாது. ஆனால் சிறைக்கூடம் மட்டும் மயான அமைதியாகவே இருந்தது. சஞ்ஜீவனின் கண்களை மட்டும் நித்திரை நெருங்கவே மறுத்தது.

என்ன லவ் லெற்றர் நித்திரையை குழப்புதோ.

அருகில் படுக்கும் ரமேஸ் கிண்டலாக காதுக்குள் குசுகுசுத்ததை கேட்டதும் அவனை எட்டி உதைக்க வேண்டும்போல் எரிச்சலாக இருந்தது சஞ்ஜீவனுக்கு.

கொஞ்ச நேரத்தில் குறட்டைவிடத் தொடங்கினான் ரமேஸ். ஆனால் சஞ்ஜீவனின் இமைகளைமட்டும் புவிதாவின் கடித நினைவுகள் மூடவிடாமல் தடுத்துக் கொண்டே இருந்தது.

புவிதா நீ என்ன எழுதியிருப்பாய் அந்த கடிதத்தில், ஏன் புவிதா என்னை தூங்க விடாமல் இந்த அர்த்த ராத்திரியில் சித்திரவதை செய்கின்றாய். புவிதா என்ன எழுதியிருப்பாய் என்னை மறந்து வேறொருவனை கல்யாணம் செய்து கொள் என்று எப்படி உங்களால் எழுதமுடிந்தது என்று கேட்டு எழுதியிருப்பாயா? அல்லது.... அல்லது நமக்குள் எத்தனையோ தொடர்புகள், ஊடல்கள், கூடல்கள், அவை அத்தனையும் மறந்து விட்டீர்களா என்றுகேட்டு எழுதியிருப்பாயா? அப்படி ஒரு வார்த்தை நீ எழுதியிருந்தால் அதற்கு எப்படி என்னால் பதில் எழுத முடியும் புவிதா.

புவிதா உனக்கு நினைவிருக்கின்றதா நமது அந்த கடைசி சந்திப்பும் அதில் நமக்கு ஏற்பட்ட தித்திப்பும் உனக்கு நினைவிருக்கின்றதா? புவிதா நான் பிடிபட்ட நாளின் முன்னிரவு நேரம், உன் வீட்டார், என் வீட்டார், அயல்வீட்டார் எல்லோரும் கோயிலுக்குபோய் விட உன்வீட்டு பின்தோட்ட மாமரத்தின்கீழ் உனக்காக நான் காத்திருந்தது உனக்கு நினைவிருக்கின்றதா? நீ வருவாயா மாட்டாயா என்று என் இதயம் துடித்ததையும், உன்காலடி ஓசைக்காக என் காதுகள் தவம் கிடந்ததையும் நீ அறிவாயா? அவையெல்லாம் இப்போது எனக்கு உன் நினைவின் ஸ்பரிசங்கள் புவிதா?

புவிதா நம் அந்த கடைசி இரவை நான் இன்னும் மறக்கவில்லை. அந்த சித்திரை மாதமொன்றின் இரவு பத்தரைநேர மதில் சித்திரமாம் உன்முகத்தில் முத்திரையை நான் பதிக்க நித்திரைபோல் நீ மயங்கி என்மடியில் நீ துவள, நிலவு வெளிச்சத்தில் தெரிந்த உன் முகத்தை பார்த்தும் பேச வார்த்தைகள் இன்றி கடந்த அந்த நம் கடைசி இரவை நான் இன்னும் மறக்கவில்லை புவிதா. புவிதா என்னை மன்னித்துவிடு, என்னை மறந்து விடு என்று நான் எழுதி இருக்கக்கூடாது. புவிதா நான் ஓர் நாள் வருவேன். அப்போது நம் திருமணம் நடக்கும். நம்மை அம்மா ஆசீர்வதிப்பா. அதுவரையில் அம்மாவுக்கும் எதுவும் நேர்ந்துவிடாது. நேர்ந்துவிடக்கூடாது.

புவிதாவின் நினைவால் தூங்காமல் விழித்திருந்த சஞ்ஜீவன் தற்செயலாக வாசல் கதவின் கீழ்தெரிந்த சப்பாத்து கால்களைக் கண்டு துணுக்குற்று நிமிர்ந்து பார்த்தான்.

இரண்டு நான்காக தெரிந்த சப்பாத்து கால்கள் எண்ண முடியாத அளவுக்கு கூடிவிட்டதை உணர்ந்தவன் எழுந்து உட்கார்ந்து அருகில் படுத்திருந்த ரமேஸை உசுப்பி எழுப்பினான்.

அப்போது திடீரென வாசல் கதவு திறக்கப்பட்டது. மண்டபம் முழுதும் மின்சார விளக்கின் வெளிச்சம் பரவியது. படுத்திருந்தவர்கள் அனைவரும் தட்டுக்கெட்டு எழும்பி விட்டனர். எல்லோர் முகத்திலும் மரண பீதி.

என்ன நடக்கப் போகின்றது என்று ஊகித்து முடிவெடுக்கும் அவகாசத்தின் இடையே அவசரப்பட்டு உட்புக முடிந்த காடையர்களை தடுத்து நிறுத்த முற்பட்ட தமிழ் இளைஞர்கள் பலமாக தாக்கப்பட்டார்கள்.

பளபளத்த இரும்பு வாள்கள் ரத்தத்தில் நிறம் மாறியது. அம்மா என்று அலறிய அப்பாவி தமிழனொருவனின் வெட்டுண்ட கால் அரைநிமிடம் துடித்து அடங்கியது.

உன் தங்கையையும் தாயையும் என் படுக்கைக்கு தாடா என்று கேட்டவனின் முகத்தில் தூ என்று துப்பிய தமிழனின் குரல்வளையை கூரியவாள் ஒன்று குறி பார்த்தது.

நிராயுதபாணியான அப்பாவித் தமிழர்கள் ஆயுதம் ஏந்தியவர்களால் வெட்டிச் சாய்க்கப்பட்டார்கள்.

கொடுஞ்செயல் புரியும் பாதகர் செயல்கண்டு சுதந்திர தேவி ஓடி ஒழிந்து கொண்டாள். இனவெறி நாய்களின் வாயிலே தன் சேலையை பறிகொடுத்த நீதிதேவதையோ நிர்வாணம் ஆக்கப்பட்டு

மானபங்கம் செய்யப்பட்டாள். அத்தனை கொடுமையும் ஒத்திகை பார்க்கப்பட்டே செயல்படுத்தப்படுகின்றன. ஆம் ரெத்த வெள்ளத்தின் காலடி ஓசைகள் கசகசக்கின்றன. 83-ம் ஆண்டு வெலிக்கடை சிறைக்குள் தொடங்கப்பட்ட கொலை வெறி ஆட்டத்தின் இரண்டாம் பாகம் இன்று இதோ இந்த களுத்துறை சிறைச்சாலைக்குள் அரங்கேறிக் கொண்டிருக்கிறது.

எப்போது காண்பேன் என் மகளை என்று ஏங்கிய தகப்பன், உன்னைக் கண்டபின் தான் நான் உண்ணும் உணவு என்னுடலில் சேரும் என்ற கணவன், அன்பே உன் அணைப்பில் நான் உறங்கும் நாள் வெகுதூரம் இல்லை என்று அன்புமடல் வரைந்த காதலன். இப்படி எத்தனையோ உணர்வுகளை மனதில் சுமந்த தமிழன் இன்று ரத்தச் சகதியில் புரள்கின்றான்.

இனவெறியின் கோரத்தாண்டவம் உக்கிர நிலையை அடைந்து கொண்டிருந்தது அந்த சிறைச்சாலைக்குள்.

அதோ, அதோ, மூன்றுபேர் சேர்ந்து ரமேஸின் தலையை சுவரோடு இடிக்கின்றார்கள். கையில் கிடைத்த ஆயுதம் ஒன்றை எடுத்துக் கொண்டு ஓடிச்சென்று அந்த மூவரில் ஒருவனின் தலையில் பலமாக அடிக்கின்றான் சஞ்ஜீவன். சஞ்ஜீவனின் தாக்குதலில் நிலைகுலைந்த அந்த மூவரும் ரமேஸை விட்டுவிட்டு சஞ்ஜீவனை சுவரோடு சேர்த்து அமுக்கி பிடிக்க ஓர் கூரியவாள் சஞ்ஜீவனை நோக்கிவருகின்றது. இதோ, இதோ அந்த ஆயுதம் தன் தலையையோ கண்ணையோ, கழுத்தையோ, காலையோ, நோக்கி கீழ் இறங்கப் போகின்றது. தனக்கு நேரப்போகும் கொடுமையை தன்கண்களே பார்க்க மறுத்ததனால் ஆண்டவனை வேண்டிக்கொண்டு கண்களை மூடுகின்றான் சஞ்ஜீவன். மூடிய கண்களின் மேல் பீறிட்டுப்பாய்கின்றது இளஞ்சூடான ரத்தம். கண்களை திறந்து பார்க்கின்றான் சஞ்சீவன். தன்னை நோக்கிவந்த வாளை தன் கழுத்தினில் ஏந்தியபடி அவன் மடியினில் சாய்கின்றான் ரமேஸ்.

வாகனச் சத்தங்களின் உறுமல்கள் துப்பாக்கிவேட்டுச் சத்தங்கள், செய்ததுபோதும் வெளியேவாருங்கள் என்று வரவேற்க கொலை வெறியர்கள் அவசரமாக வெளியேறுகின்றார்கள்.

தன் மடியில் சரிந்து கிடக்கும் ரமேஸை குனிந்து பார்க்கின்றான் சஞ்ஜீவன். அவன் சட்டை பையிலிருந்து எட்டிப்பார்த்தது ஓர் காகிதம். ரத்தம் தோய்ந்த கரங்களால் கடிதத்தை பிரித்துபார்க்கின்றான் சஞ்ஜீவன்.

அன்புள்ள தம்பி - சஞ்ஜீவனுக்கு அக்கா எழுதிக்கொள்வது, மனதை திடப்படுத்திக்கொள். நம்மையெல்லாம் விட்டுவிட்டு நம் அம்மா போய்விட்டா. அம்மாவின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டிக்கொள். இதை எப்படித்தான் தாங்கிக் கொள்வாயோ தெரியாது. எல்லாம் இறைவன் விட்ட வழி. இப்படிக்கு அக்கா.

கடிதத்தை படித்துமுடித்த சஞ்ஜீவன் ரமேஸின் முகத்தை குனிந்து பார்க்கின்றான்.

ரமேஸ் இதுதானா நேற்று எனக்கு வந்த கடிதம். என் காதலி அனுப்பிய கடிதம் என்று சொல்லி என்னிடம் காட்ட மறுத்த கடிதம் இதுதானா. ஏன் என் தாயின் பிரிவை தாங்கமாட்டேன் என்றுதான் நீ அதை தர மறுத்தாயா? அம்மாவின் உயிர் போனதை சொல்ல மறுத்தாய். இன்று போக இருந்த என்னுயிரை உன்னுயிரைக்கொடுத்து தடுத்தாய். இப்படி என்னில் அன்புகாட்ட எனக்கும் உனக்கும் என்ன உறவடா. நீ என் நண்பனா! சகோதரனா! இல்லை முற்பிறப்பின் கடனா! ஏனடா ஏனடா? என்னை இப்படி துயரத்தில் விட்டுவிட்டு சென்றுவிட்டாய். ரமேஸின் முகத்தை தன்முகத்தோடு சேர்த்துக்கொண்டு குலுங்கிக் குலுங்கி அழுதான் சஞ்ஜீவன்.

அதிகாரிகள் வந்தார்கள். இறந்தவர்களை இழுத்துக்கொண்டு சென்றார்கள். சப்பாத்துக்கால்களின் ரத்தத்தடங்களை அழித்துக்கொண்டு சென்றது ரமேஸின் உடல்.

இழுத்துச் செல்லப்படும் ரமேஸின் உடலை பிரமை பிடித்தவன்போல் வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான் சஞ்ஜீவன். அண்ணா நாங்கள் வாழும்போது எங்கடவாழ்க்கை நாலுபேருக்காவது பிரயோசனப்படவேணும் அல்லது சாகும்போது எங்கட உயிர் இன்னொரு உயிருக்காவது பிரயோசனப்படவேணும். அன்று ரமேஸ் சொன்னது இன்னும் சஞ்ஜீவனின் காதுகளில் ஒலித்துக்கொண்டே இருந்தது. தியாகங்கள் பலவிதம். இது அதில் ஒருவிதம். பாடல் தோல்வி நிலையென நினைத்தால்.

# மந்திரவாதி

"டேய் நவரெத்தினம் அப்பா கூப்பிடுறார்டா. போய் என்னெண்டு கேளண்டா."

கிணற்று கட்டுமேல் ஏறி இருந்து கொண்டு மாட்டுக்கார வேலன் சினிமாப் படப்பாடல் புத்தகத்தை மனப்பாடம் செய்துகொண்டிருந்த நவரெத்தினத்தின் காதுகளில் விழுந்த அக்காவின் குரலால் அவனின் மனம் ஒருகணம் நடுங்கியது. அக்காவை நிமிர்ந்து பார்த்தான். அவன் தன்னைப் பார்ப்பதைக் கவனிக்காததுபோல் அவள் கோழிக்குஞ்சுகளுக்குத் தீனிபோட்டுக் கொண்டிருந்தாள்.

அவனுக்குத் தெரியும், அப்பா ஏன் கூப்பிடுகிறார் என்று. நேற்றிரவே சொல்லிவிட்டார். விடிந்ததும் போய் பக்கத்து ஊரில் நேற்று இறந்துபோனது தாய்க்கு தலைமகன்தானா என்பதை தெரிந்துகொண்டு வரும்படி அவனிடம் சொல்லியிருந்தார். இதுவரையில் அவன் போகாமல் இருப்பதால்தான் உடனே போகச் சொல்வதற்காகத்தான் இப்போது அப்பா கூப்பிடுகிறார்.

தகப்பனின் தொழிலும் அதற்காக அவர் கடைப்பிடிக்கும் வழிமுறைகளும் நவரெத்தினத்துக்கு கொஞ்சம்கூட பிடிக்கவில்லை. தன் தகப்பனின் இந்த தொழிலால் அவன் படிக்கும் பாடசாலையில் அவன் தினம் தினம் எவ்வளவு அவமானப்படுகிறான் என்பதை தாய் மூலம் தகப்பனிடம் எத்தனையோ தடவை சொல்லிவிட்டான். எத்தனை தடவை சொல்லியும் தகப்பனின் புத்தி மாறுவதாகவே தெரியவில்லை.

"ஏண்டா உன்ன ஆருடா பள்ளிக்குப் போகசொன்னதும் படிக்கச் சொன்னதும்? உண்டபடிப்பு ஆசைக்காக எண்ட பரம்பரைப் படிப்பையும், எண்ட மூதாதையர் சொல்லித்தந்த இந்த தொழிலையும் விட்டுவிட முடியுமாடா. டேய் பேசாமல் இப்பஇருந்தே எனக்கு பக்கத்துல இருந்து நான் செய்யுறத கத்துக்கொண்டால்தான் என்கடைசி காலத்துல எனக்குப் பிறகு இந்த தொழிலை உனக்கிட்ட தந்து போட்டு நான் நிம்மதியாய் கண்மூடமுடியும்." பழங்காலத்தில் ஊறிப்போன தகப்பனின் பேச்சை படிப்பறிவு பெற்ற நவரெத்தினத்தால் ஏற்றுக்கொள்ளமுடியாது என்றாலும் அவனால் தகப்பனை எதிர்த்து ஒரு சொல்கூட பேசமுடியாது.

என்ன பெரியதொழில்? செய்வினை எடுக்கிறன்; சூனியம் செய்யிறன், என்று கொண்டு ஊர்ஊராக போறதும், இரவு நடுச்சாமத்தின் பின் அத்தனை கடவுள் விக்ரகம் முன்னாலும் இருந்து கொண்டு யாகம் வளர்த்து உடுக்கை அடித்து மந்திரம் சொல்வதும், கடைசியாக காளியை கண்டேன்; வைரவனோடு பேசினேன் என்றுகொண்டு தன் உடம்பில் தானே சாட்டையால் அடித்து தன்னைத்தானே வருத்திக் கொள்வதும் ஒருதொழிலா. "எங்கட குடும்பத்துல ஒரு நல்லது கெட்டது நடந்தால் இந்த ஊரவர்கள் யாராவது எங்கடவாசலுக்கு வாறாங்களா? அதுதான் பரவாயில்லை. ஏற்கனவே சாதிகுறைஞ்சவன் என்ற பெயர் வேற. அதோட சூனியக்காரனின் மகன் என்ற பயத்தினால என்னோட வகுப்பில யாருமே எனக்கு பக்கத்துல இருக்கமாட்டாங்கள். நான் ஒவ்வொரு நாளும் பள்ளிக்கூடத்தில எவ்வளவு அவமானப்படுறன் எண்டு உனக்கு தெரியுமாக்கா," என்று நவரெத்தினம் இரவில் தூங்கும்போது தமக்கையிடம் சொல்லும்போதெல்லாம் அவள் அவனின் வாயைத் தன்கைகளால் பொத்திவிடுவாள்.

தம்பி படித்து நல்ல உத்தியோகம் பார்த்து தன் சாதிக்குள்ளேயே மதிப்புள்ள பெரியமனிதன் ஆகிவிடவேண்டும் என்பதே அவளின் ஆசை.

நவரெத்தினத்தின் தகப்பன் கறுப்பன் மாகாணத்திலேயே பெயர் பெற்ற மந்திரவாதி. தினம் தினம் தன்னைத் தேடி வரும் அயல் ஊரவர்களைக் கொண்டே தன் மதிப்பை எடைபோட்டுக்கொண்ட கறுப்பனின் மனதில் நெடுநாட்களாக ஓர் தீராத ஆசை. ஒருசொட்டு எண்ணெயை எடுத்து மற்றவர்கள் மேல் அவர்களுக்குத் தெரியாமல் தடவிவிட்டால் அதன்பிறகு தனக்கு அவர்கள் வசியமாகி, தான் சொல்வதையெல்லாம் அவர்கள் செய்வார்களாம். அப்படிப்படட ஒரு எண்ணெயைத் தயாரித்து விடவேண்டுமென்பதுதான் கறுப்பனின் நீண்டகால ஆசை. தன் முன்னோர்களால் கூட இதுவரையில் செய்துவிடாத அந்த அரிய பெரிய விசயம் இன்றோ நாளையோ கைகூடும் என்பதில் கறுப்பனுக்குக்குத் தீராத நம்பிக்கை.

பக்கத்து ஊரில் நேற்று இறந்துபோனது தாய்க்கு தலைமகன் என்ற அந்த செய்தி மட்டும் உண்மையாய் இருந்தால் இந்த உலகத்தையே தன் கைக்குள் அடக்கிவிடலாம் என்ற நினைப்பு கறுப்பனுக்கு. அது உண்மையா என்பதை அறியத்தான் தன் மகனைப் போகச் சொல்லிக் கொண்டிருந்தான் கறுப்பன்.

தன் முன்னோர்கள் எழுதிவைத்துவிட்டுப் போன புத்தகங்களை எடுத்து மீண்டும் புரட்டிபார்த்தான் கறுப்பன். கறையான் தின்ற மீதி பாதிப் புத்தகத்தில் உள்ள புள்ளிகள் அற்ற எழுத்துக்களை பாட்டுவடிவில் படித்துப்பார்த்தான் அவன்.

'தாய்க்குத் தலைப்பிள்ளையாய் இருக்கவேண்டும். அதுவும் ஒரே மகனாய் இருக்கவேண்டும். கல்யாணம் கட்டாத பதினாறு வயது வாலிபனாக இருக்கவேண்டும் அப்படிப்பட்ட ஒருமகன் இறந்தால் அந்த மகனின் மண்டையை நெருப்பில் உருக்கி, அதிலிருந்து வரும் எண்ணெயைக் கொண்டு வசிய மருந்தைத் தயாரித்துக் கொள்ளலாம். ஆகா எனக்காகத்தான் பக்கத்து ஊரில் ஓர் தாய் ஒரு மகனைப் பெற்று இன்று பறி கொடுத்திருக்கின்றாள்,

எல்லாம் இறைவன் செயல். புத்தகத்தைப் படிக்கும்போதே தனக்குள், சொல்லிக்கொண்டான் கறுப்பன்.'

'தலைப்பிள்ளையின் தலையை உருக்கும் போது உரிய தெய்வங்களுக்குச் செய்யும் சடங்குகளையும், சொல்லும் மந்திரங்களையும் ஒன்றும் தவறாமல் செய்யவேண்டும். அப்படி ஏதேனும் ஒன்றைச் செய்யவோ சொல்லவோ தவறினால், உடனிருப்பவர்களில் எவரேனும் ஒருவர் சுடலைமாறனுக்கு பலியாவது நிச்சயம், இதை தவிர்க்கவே முடியாது.' புத்தகத்தில் உள்ள இந்த கடைசி வரிகளைப் படிக்கும்போது கறுப்பனின் முகம் வியர்த்தது.

இரண்டு விளக்குகளுக்கு நடுவில் நீண்டு படுத்திருக்கும் அந்தத் தலைமகனின் இறுதிச்சடங்குகளுக்குரிய கிரியைகள் அனைத்தும் அந்தவளவின் ஒவ்வொரு பக்கங்களிலும் நடந்து கொண்டிருந்தது. தகப்பனால் வேவு பார்க்க அனுப்பப்பட்ட நவரெத்தினம் சனங்களுக்கு நடுவில் நின்று கொண்டிருந்தான். சொந்தபந்தமும் இல்லாமல், சாதிசன உறவுமுறையுமில்லாத அந்த சாவீட்டுக்கு தான் ஏன் வந்தேன் என்பதை மற்றவர்கள் யாரும் சந்தேகமாக பார்த்துவிடுவார்களோ என்ற பயம் அவனுக்கு இருந்தாலும், தகப்பனின் சந்தேகத்தைத் தீர்க்கும் கேள்விக்கு விடைகாணவேண்டுமென்ற ஆவலின் மத்தியில், உயிரற்ற தன் மகனின் உடலின் தலைமாட்டில் மௌனமாக இருக்கும் அந்தத் தாயின் முகத்தைப் பார்க்க அவனுக்கு நெஞ்சில் ஏதோ செய்தது.

வளவில் ஒருமூலையில் அடுப்பெரித்து சோளப்பொரி பொரித்துக்கொண்டிருந்தான் சலவைத்தொழிலாளி நாகமணி. நிறக்காகிதங்களால் அலங்கரிக்கப்பட்ட தட்டி தயாராக இருந்தது வாசலில். உடலை குளிக்கவைத்து, புதுவேட்டி சட்டைபோட்டுக்

கொண்டு செல்ல தட்டியில் தூக்கிவைத்தபோது கூடியிருந்த பெண்கள் அத்தனைபேருமே தலையில் அடித்து அழத்தொடங்கிவிட்டார்கள். தன் மகனைத் தூக்கிச் செல்ல முற்பட்டபோதும், அந்தத் தாய் பிரமை பிடித்தவள்போல் அசைவின்றிக் கிடந்தாள்.

"அடியே... அடியே... உண்ட மகனகொண்டுபோறாங்கடி ஒருக்கா அவன பாருடி... இனி எப்படி அவனப்பார்க்கபோறாய்... அம்மா... அம்மா... என்டதாயே... மகளே ஏனம்மா இப்படி இருக்கிறாய்... அழுடி... அழு அப்பதான்டி உண்ட நெஞ்சில இருக்கிற பாரம் இறங்கும். நாகம்மா அழடி... அழடி அடியே... என்னகொடுமையிடி... தவம் இருந்து பெத்த ஒரேயொரு மகனையும் இப்படி பறிகொடுத்துட்டு துக்கம் தாங்கமுடியாம இப்படி தொண்டை அடைச்சி விறைச்சிப்போய் இருக்கிறயேடி? எப்படியடி தாங்கப்போறாய். கண்கெட்ட கடவுளே உண்டகாலனை இவளுற ஒரேயொரு தலை மகனுக்கிட்டதானா அனுப்பவேணும்! நாகம்மா... நாகம்மா உண்ட மகனக்கொண்டுபோறாங்கடி பாருடி... பாரு ஐயோ. எண்டபேரன் போயிற்றானே. இனி நான் எப்ப பார்ப்பன் அவன! அடிபாதகத்தி நீ செய்த புண்ணியமும் நீ பெற்ற வரமும் இதுதானடி. எண்டராசா நீ போறயே... கொம்மை எப்படியப்பா இதத்தாங்குவா."

நிறக்காகிதங்களால் அலங்கரிக்கப்பட்ட அந்தத் தட்டியை நான்குபேர் தூக்கிக்கொண்டுவளவுக்குவெளியே வந்து ஒழுங்கைக்குள் இறங்கி, சுடலையை நோக்கிப் போய்க் கொண்டிருப்பதை நவரெத்தினம் கனத்தமனதுடன் பார்த்துக்கொண்டு நின்றிருந்தான்.

"அடியே... அடியே... நாகம்மா... கொண்டுபோயிற்றாங்கடி... எண்டபேரன் இனிவரமாட்டாண்டி... உண்டமகன் நீ பெத்தெடுத்த தலைமகன் உன்னவிட்டிற்று போயிற்றாண்டி! அடியே ஒண்டேயொண்ட பெத்து அதையும் இப்படி இடை நடுவில பறிகொடுத்திட்டு நிற்கிறயேடி. இனி என்னடி செய்வாய்?" அந்த பாட்டி கிழவி அழுது புலம்புவது நவரெதினத்தின் காதுகளில்

இப்போதும் கேட்கிறது. அந்தப் புலம்பலில் தன் தகப்பனின் கேள்விக்குரிய விடையைக் கண்டுபிடித்துவிட்ட நிம்மதியில் நடந்து கொண்டிருந்தான், நவரெத்தினம்.

❀❀❀

**ப**ன்னிரண்டு மணியைத் தாண்டிய நடுச்சாம இருளில் மூழ்கியிருந்த அந்த மயானத்தின், நடுவில் உள்ள ஆலமரம் ஒன்றின்கீழே கறுப்பனும், அவன் மகன் நவரெத்தினமும் சடங்குகள் செய்துகொண்டிருந்தனர். புதைகுழியிலிருந்து தோண்டி எடுக்கப்பட்ட அந்த தலைமகனின் உடல் ஆலமரகிளையொன்றில் தலைகீழாக கட்டி தொங்கவிடப்பட்டிருந்தது. நிலத்திலிருந்து மூன்றடி உயரத்தில் தொங்கும் தலையின் கீழே எரியவிடுவதற்காக பல மூலிகை விறகுகளை அடுப்புபோல் செய்து தயாராக வைத்திருந்தான் கறுப்பன். மந்திரத்தை உச்சரித்துக்கொண்டே மகனிடம் கைநீட்டும் போதெல்லாம் தகப்பன் என்ன கேட்கின்றார் என்று குறிப்பறிந்து. பூ, பழம், சாம்பிராணி, சந்தனக்குச்சி, திருநீறு, சந்தனம், குங்குமம் என ஒவ்வொன்றாக கொடுத்துக் கொண்டிருந்தான் நவரெத்தினம்.

கொண்டுவந்த அரிசிமாவைக் குழைத்து ஒரு மனிதபொம்மையைச் செய்து, குண்டுமணிகளால் கண்வைத்து, அறுகம்புல்லால் வாய் மீசைவைத்து தன் எதிரில் நிறுத்தினான் கறுப்பன். தேங்காயை உடைத்து மண்பொம்மையின் மண்டையை இரண்டாக பிளந்துவிட்டு எண்ணெயை உருக்கத்தொடங்கினால் விடிந்ததும் இந்த உலகமே என்கையில் வசப்படும் என்ற பெருமிதத்தில் மிதந்துகொண்டு மந்திரங்களை உச்சரித்துக் கொண்டிருந்தான் அவன். சொல்லும் மந்திரங்களிலோ செய்யும் சடங்கினிலோ ஒன்றேனும் தவறாக நடந்துவிட்டாலும் பக்கத்தில் இருப்பவர்களில் யாரையேனும் சுடலைமாறன் பலிவாங்கிவிடுவான் என்று தான்நேற்று படித்து அறிந்து கொண்டதை நினைத்துக் கொண்டான் கறுப்பன். அதன்படியே, செய்வதை அவதானமாகவே செய்துகொண்டிருந்தான் அவன்.

தந்தைக்கு முன்னால் உள்ள மாப்பொம்மையை உற்றுநோக்கினான் நவரெத்தினம். அது தன்னைப் பார்த்து பயங்கரமாய் சிரிப்பதுபோல் இருந்தது அவனுக்கு. மயானத்தை ஒட்டிய கடல் அலைகளின் இரைச்சல் பேய்கத்தல் போல் யாரோ தன்னை விரட்டிக்கொண்டு வருவதுபோல் இருந்தது. தூரத்தில் ஓர் பிணம் எரிந்து கொண்டிருந்தது. எப்போதோ புதைத்த மனிதபிணத்தைத் தோண்டிஎடுத்து தின்றுகொண்டிருக்கும் நாய்கள் தங்களுக்குள் சண்டைபோடும் சத்தம் காதில் கேட்டது. அடிக்கின்ற காற்றின் வேகத்தில் பேயாட்டம் ஆடிய ஆலமரத்தில் இருந்த வெளவால்களும் பறவைகளும் சிறகடித்து பறந்துசெல்ல, நவரெத்தினத்தின் நெஞ்சம் திக்கென்றது. தன் கால்களுக்கு கீழே ஏதோ ஊர்ந்துசெல்வதை உணர்ந்தான் அவன். தூரத்தில் ஊளையிடும் நரிகளின் சத்தம் அவனை மேலும் பயம் கொள்ளவைத்தது.

நெஞ்சு டப்... டப்... டப்பென்று அடித்துக் கொண்டது பேய்களையும், மந்திரசூனியங்களையும் ஒருகாலத்தில் நம்பியவன்தான் நவரெத்தினம். ஆனால் அவையெல்லாம் பொய்யென்றும் தன் தகப்பன் ஓர் பித்தலாட்டக்காரன் என்றும் தான் பள்ளி சென்றபின் உணர்ந்துகொண்டான் அவன். தகப்பன் கூப்பிட்டதும் பேய்க்குப் பயப்படத்தேவையில்லை; ஆனால் தகப்பனுக்குப் பயப்படவேண்டும் என்ற கட்டாயத்தில் வந்துவிட்டான் அவன்.

நவரெத்தினத்தின் துணிச்சலை இந்த சந்தர்ப்ப சூழ்நிலை முற்றாக உடைத்துவிட்டது. அவனின் இதயம் வேகமாக அடிக்கத்தொடங்கியது. தலை சுற்றுவதுபோல் இருந்தது. தகப்பனுக்கு முன்னால் உள்ள மாப்பொம்மை தன்னைப்பார்த்து சிரித்துக்கொண்டே தன்னைநோக்கி வருவதுபோல் இருந்தது அவனுக்கு. பின்னிலவு வெளிச்சத்தில் நிலத்தில் அசைகின்ற மரநிழல்கள் பயங்கரமான உருவங்களில் தன்னை நோக்கி வருவதுபோல் உணர்ந்தான் அவன். இப்போது அவனின் தலைசுற்றி அவனுக்கு மயக்கம் தருவதுபோல் இருந்தது. திடீரென முகத்தில் வந்துவிழுந்த வெளவாலினால் ஏற்பட்ட

அதிர்ச்சியில் ஆ.. வென கத்திக்கொண்டு ஓட முற்பட்டவனின் முன்னால் ஒருகரம் நீண்டது. தலை கூந்தலுடன் ஆக்ரோஷமாக காட்சி தந்து கொண்டு கைநீட்டிய கறுப்பனின் கைகளில் கத்தியை கொடுத்தான் நவரெத்தினம்.

நவரெத்தினத்திடமிருந்து கத்தியை வாங்கிய வேகத்தில் ஓங்கி வெட்டியவெட்டில் மாப்பொம்மையின் தலை இரண்டாக பிளந்து நிலத்தில் சரிந்த அடுத்தகணம் தன் சடங்கில் தவறு நடந்துவிட்டதை உணர்ந்துகொண்டான், கறுப்பன். தேங்காயை உடைப்பதற்கு முன்பு மாப்பொம்மையை வெட்டிவிட்டதையும், தேங்காயைக் கேட்டு கைநீட்டியபோது தன்மகன் கத்தியைத் தந்ததால்தான் இந்தத் தவறு நடந்துவிட்டது என்பதையும் உணர்ந்து கொண்ட கறுப்பன் ஆத்திரத்துடன் மகனைத் திரும்பிப்பார்த்தான். பார்த்த கறுப்பனின் மார்பில் வாயில் ரத்தம் வடிந்தநிலையில் மகன் நவரெத்தினம் சரிந்துவிழுந்தபோது அவனைத் தாங்கி நிமிர்த்தி பார்த்தபோது மகன் நவரெத்தினத்தின் உயிர் பிரிந்துவிட்டதை அறிந்து சிலையானான் கறுப்பன்.

தூரத்தில் ஓர் பிணம் எரிந்து கொண்டிருக்க, தோண்டி எடுத்த பிணத்தினைத் தின்றுகொண்டு சண்டையிடும் நாய்களையும், ஊளையிடும் நரிகளையும் முகத்தில் மோதும் வெளவால்களையும் கடந்து கடல் அலை எழுப்பும் பேய் இரைச்சல்களால் துரத்தப்பட்டவன்போல் மயானத்தில் இருந்து தன் வீட்டுக்கு தன் மகனின் உடலைத் தோளில் சுமந்துகொண்டு நடந்துகொண்டிருந்தான் கறுப்பன். சடங்கு செய்தபோது தான் செய்ததவறினால்தான் சுடலைமாறன் தன் மகனைப் பலிவாங்கிவிட்டது என்றே அவன் நம்பிக்கொண்டு நடந்து கொண்டிருந்தான். விஞ்ஞானம் என்ற ஒன்றை அன்று அவன் அறிந்திருக்கவில்லை. அதற்குரிய அறிவும் அன்று அவனிடம் இல்லை.

# ராணியும் அவளும்

வரதன் கடிகாரத்தை நிமிர்ந்து பார்த்தான், மணிபன்னிரண்டை காட்டியது. இன்னும் ஏழுமணித்தியாலங்கள் இந்தபெற்றோல் செற்றுக்குள்ளேயே அடைபட்டுக்கிடந்து இந்த ரில்லுக்கு காவல் இருக்கவேண்டும். நாளைக்காலை வந்து வரதனை விடவேண்டிய மூர்த்தி காலையில் எத்தனை மணிக்கு வருவானோ தெரியாது. இன்று இவன் வந்து அவனை விட பத்துநிமிடங்கள் தாமதமாகிவிட்டது. வேலைக்கெண்டு வெளிக்கிட்டு வெளியில் வரும்போதுதான், "பிள்ளைக்குபாலும் காலைக்கு பாணும் முடிந்துவிட்டது ஒருக்காவாங்கி தந்துபோட்டு போங்கோ" என்று மனைவி சொன்னாள். வாங்கிக் கொடுத்துவிட்டு அவசர அவசரமாக ஓடிவந்தும் பத்து நிமிடம் தாமதமாகிவிட்டது.

"உனக்குமட்டும்தான் குடும்பமும் பிள்ளையுமே எங்களுக்கும் அது இருக்குதுதான்காணும்."

வரதனின் தாமதத்துக்கு முகத்தில் அடித்தால் போல் மூர்த்தி சொன்ன பதிலுக்கு வரதன் எதுவும் பேசவில்லை. தினமும் சந்திக்கும் ஒருவனுடன் - ஒன்றாக வேலைசெய்யும் ஒருவனுடன் - அதுவும் நாளைக்காலை தன்னைவந்துவிடப்போகும் ஒருவனுடன் வார்த்தைகளை வளர்த்து பகைமையை ஏற்படுத்திக் கவலை கொள்ள அவன் விரும்பவில்லை. கோபப்படுவதற்கும் கவலை கொள்வதற்கும் நாட்டில் எவ்வளவோ இருக்க இதற்கெல்லாம் கோபித்துக் கொள்வது சிறுபிள்ளைத்தனம் என்று நினைத்துக்கொண்டான்.

ஒருகாலத்தில் கையில் துப்பாக்கியுடன் ஊரில் வலம் வந்தபோது ஊரே தன்னைப்பார்த்து பயந்து நடுங்கியதை நினைத்து தனக்குள்ளேயே சிரித்துக்கொண்டான்.

இன்னும் ஏழுமணி நேரத்தைக் கழிக்கவேண்டும். மேசையில் இருந்த ஆனந்த விகடனை விரித்தான். ஆனந்த விகடனில் உள்ள எழுத்துக்கள் இன்று ஊரில் இருந்த அக்கா அனுப்பிய கடிதத்தில் உள்ள எழுத்துக்களாகவே தெரிந்தது.

"பாவம் தம்பி. நம்ம பக்கத்து வீட்டு ராணி நஞ்சுகுடிச்சி செத்துபோய்விட்டாள். அவளுக்கு ஆரோ ஒரு பெடியனோட தொடுப்பாம் எண்டு ஊரெல்லாம் கதை. நானும் கூட இதப்பத்தி ஒருநாள் அவளிட்ட கேட்டன்; எதுவுமே சொல்லாமல் அழுதுகொண்டுபோய்விட்டாள். இப்ப என்னடா எண்டால் திடீரெண்டு நஞ்சு குடிச்சி செத்துபோயிற்றாள். ஊரெல்லாம் கதைக்கிறது உண்மைதானே எண்டு நினைத்து அவமானத்துல செத்தாளோ, இல்ல புருசன் இல்லாத என்னைப்பற்றி ஊரெல்லாம் இப்படி கண்டபடி கதைக்குதே இதுக்குப்பிறகும் நான் இன்னும் ஏன் உயிரோடு இருக்கவேணும் எண்ட கவலையில செத்தாளோ தெரியாது. அவள் போய் சேர்ந்திட்டாள். பாவம் அவளின்ர புள்ளைகள்தான் இப்ப தெருத்தெருவாக வீடுவீடாக அலையுதுகள்."

அக்காவின் அந்த கடிதவரிகள் வரதனின் நெஞ்சை என்னவோ செய்தது.

மார்கழி குளிரும் பனியும் சேர்ந்து திறந்திருந்த ஜன்னல் வழியாகவந்து அவனின் முகத்தை அறைந்தது.

புத்தகத்தை மூடிவிட்டு ஜன்னலை மூடிவிட எழுந்தவன் ஜன்னலுக்கு வெளியே நிற்கும் ஆபிரிக்க கறுவலைக்கண்டு பயந்தேவிட்டான்.

"சனியன் சொல்லாமல் கொள்ளாமல் வந்து ஜன்னலைக்கூட தட்டாமல் என்னவேண்டும் என்று கேட்காமல் இந்த நடுச்சாமத்தில் கூட கறுப்புக்கண்ணாடியை போட்டுக்கொண்டு திடீரென்று பார்க்கும் மனிதரை ஏன் இப்படி பயம்காட்டுகிறான். மூதேவியின் முறுக்கி

புரிந்த சடையும் முப்புரி நூலும் தொங்குகின்ற தலை முடியும் ஆளும்..."

வரதன் தனக்குள்ளேயே கறுப்பனை திட்டிக்கொண்டு, "என்னவேண்டும்?" என்று தயவாகவே கேட்டான்.

கறுப்பன் எதுவுமே பேசாமல் வரதனையே பார்த்துக்கொண்டு நின்றான்.

"என்ன வேண்டும்? என்நேரத்தை வீணடிக்காதே" என்று வரதன் கண்டிப்புடன் மீண்டும் சொன்னது கறுவலுக்கு பிடிக்கவில்லை.

வரதனையே உற்றுப்பார்த்துக்கொண்டிருந்த கறுப்பன் கண்ணாடியில் எச்சிலை உமிழ்ந்து துப்பிவிட்டு ஓடிவிட்டது. வரதனின் நாடி நரம்புகள் புடைத்து முகம் சிவந்து கண்களில் அனல் கிளம்பியது.

வரதனுக்கு மட்டுமல்ல, லண்டனில் பெற்றோல் செற்களில் வேலைசெய்யும் அத்தனைபேருக்கும் இது புதுஅனுபவமல்ல. ஆனால் உயிருக்கு உத்தரவாதமில்லையென்று இந்த நாட்டுக்கு ஓடிவந்தால் இங்குமட்டுமென்ன அதே நிலைதான். அடக்குமுறையும் ஒடுக்குமுறையும் துவேசமும் எந்த நாட்டில்தான் இல்லை. ஒவ்வொருநாட்டவரும் அதை வெளிப்படுத்தும் வடிவங்கள்தான் வேறு. ஆங்கிலேயனோ தன் நாகரீகமான அழகான ஆங்கிலத்தில் நளினமாக பேசி சிரித்துக்கொண்டே நக்கலடித்து தன் துவேசத்தை காட்டுவான். கறுப்பனோ இப்படி துப்பி அல்லது நேரடியாக பேசி பச்சையாகவே தன்துவேசத்தை காட்டுவான். இதுவே நம் நாடென்றால் கொன்றுகுவித்து குரோதத்தைக் காட்டுவார்கள். இவையெல்லவற்றையும்விட செய்வினை பயன் என்ற ஒன்றும் உண்டல்லவா. அப்போது கையில் துப்பாக்கியை ஏந்திக்கொண்டு படித்தவர்களையும் வயதுக்கு மூத்தவர்களையும் மதிக்காமல்

நடந்ததற்கான பாவத்தின் சம்பளத்தைத்தான் இப்போது அனுபவிக்கின்றோமோ என்னவோ. மீண்டும் வரதனின் மனதில் ராணியே தோன்றினாள்.

'ஊரில் இருந்தபோது தன்னோடு ஒன்றாகத் திரிந்த தனது நண்பன் முகுந்தன் குண்டடிபட்டு இறந்துவிட்டான். இப்போது அவனின் மனைவி ராணியும் இறந்துவிட்டாள் என்றால் அவனின் குழந்தைகளை யார் கவனிப்பார்கள்? எந்த சந்தர்ப்பத்தில் எப்படிப்பட்ட நிலைமையில் ராணி இந்த முடிவெடுத்தாளோ.' இறந்துபோன ராணியை நினைத்து பரிதாபபட்டுக் கொண்டான் வரதன்.

றோட்டில் ஒரு கறுப்பனின் வாகனத்தை சைரன் ஒலியுடன் பொலிஸ் கார் ஒன்று துரத்திக்கொண்டு செல்லுகின்றது.

குற்றம் செய்தாலும் செய்யாவிட்டாலும் கறுப்பர்களின் வாகனமாய் இருந்தால் கண்ட கண்ட இடத்தில் நிறுத்தி திடீர் பரிசோதனை செய்து தங்களின் நிறத்துவேசத்தை காட்டுவதில் வெள்ளை பொலிஸ்காரர்களுக்கு நிகராக யாரும் இருக்கமுடியாது.

மீண்டும் வரதன் ஆனந்தவிகடனை விரித்தான். ராணி ஏன் இறந்திருப்பாள்? சிலவேளை உண்மையாகத்தான் இருக்குமோ என்று தன் மனைவி தன்னிடம் கேட்டது நினைவுக்கு வந்தது அவனுக்கு. குளிர் காற்று வேகமாக அடித்துக்கொண்டிருந்தது. வெளியில் உள்ள குப்பைவாளிகள் உருண்டோடிக்கொண்டிருந்தன. கிறிஸ்மஸ் முடிந்துவிட்டால் கொஞ்சநாளைக்கு வெள்ளையர்கள் வெளியில் வரமாட்டார்கள். கையில் உள்ள காசையெல்லாம் கிறிஸ்மஸுக்கு செலவு செய்து குடித்து கும்மாளம் இட்டுவிட்டு மார்கழியின் மிகுதிநாட்களை சோகமாக நினைத்துக்கொண்டு வீட்டுக்குள் முடங்கிக்கிடப்பதென்பது அந்த பெற்றோல் செற்றுக்குள் வந்துபோகும் கீழ்மட்ட வெள்ளையர்களின் வழமையானவாடிக்கை

என்பதை வரதன் நன்கு அறிவான். அதனால்தான் இன்றும் பெற்றோல் செற் வாசல் வெறிச்சோடிக்கிடக்கின்றது.

ஆனந்தவிகடனில் ஆழ்ந்திருந்த வரதன் வெளியில் யாரோ நிற்பதை உணர்ந்தவனாய் நிமிர்ந்துபார்த்தான்.

அவன் தன்னைப் பார்ப்பதைக் கண்ட அவள் அவனைப்பார்த்து கண்சிமிட்டி அழைப்பதுபோல் பாவனை செய்து சிரித்தாள்.

இந்த குளிருக்குள்ளும் முழங்காலுக்கு மேல் ஏறிய பாவாடையுடனும் மார்பகங்கள் தெரிய கீழ் இறக்கிவெட்டிய சட்டையுடனும் நிற்கும் அவளைப் பார்த்து, "என்னவேண்டும்?" என்றான்.

"ஒன்றும் வேண்டாம். நான் ஒருவருக்காக காத்துக்கொண்டு நிற்கிறேன்" என்றாள் அந்த ஆங்கிலேயபெண். வயது இருபது இருபத்திரெண்டுக்கு மேல் இருக்காது.

அவனுக்குப் புரிந்துவிட்டது. இவள் ஒருவருக்காக அல்ல, யாராவது ஒருவருக்காக வந்து நிற்பவள் என்று. இதற்குமுதல் அவளை அவன் இங்கு கண்டும்இல்லை. புதிதாக வந்ததாக இருக்கும் இந்த பெற்றோல் செற்றில் வேலைக்கு சேர்ந்து இரவுவேலைசெய்யத் தொடங்கிய இவ்வளவு காலத்துக்கும் தான் கண்ட புதினங்களையும் தனக்கேற்பட்ட அனுபவங்களையும் நினைத்துப்பார்த்து மனதுக்குள் சிரித்துக்கொண்டான் வரதன்.

ராணி! அவள்... புருசன் இல்லாதவள்தானே என்று அவள் பூட்டிய வீட்டிற்குள் முடங்கிக்கிடந்தநேரம் போனவன் வந்தவன் எல்லாம் கதவைத் தட்டி எழுப்பி அழைத்திருப்பார்களா? அல்லது புருசன் இல்லாதவள் பிள்ளைகளோடு கஸ்டப்படுகிறாளே என்று நினைத்து யாராவது முற்போக்கு சிந்தனையுள்ள இளைஞன் உதவி

செய்திருப்பானா. அதை ஊர்சனம் வேறுவிதமாக பார்த்திருக்குமா? முகுந்தன் இருக்கும்போது எந்தக்குறையும் இல்லாமல் எப்படிக்கவனித்துக்கொண்டான், மனைவி ராணியை. ஊரில் உள்ள இளைஞர்களெல்லாம் ஆயுதம் ஏந்தி இந்தியா ஓடியபோது, "உனக்கு மட்டும் நாட்டுப்பற்று என்பதே இல்லையாடா" என்று வரதன் கேட்டபோது, "நாட்டுபற்று இல்லாமல் இல்லை. ஆனால் என்னைப்பிரிந்த ராணிஇருக்கமாட்டாள். அவளை இழந்து என்னை நான் நாட்டுக்கு கொடுக்களனக்கு இஸ்டமில்லையடா" என்று முகுந்தன் ஒருமுறை சொன்னதை நினைத்துப்பார்த்தான் வரதன்.

ராணியின் நினைவில் இருந்தவனின் கண்களைக் கூசவைக்கும் வெளிச்சத்துடன் ஒரு கார் வந்து நிற்பதைக் கண்டதும் நிமிர்ந்து பார்த்தான் வரதன்.

காருக்குள் ஓர் அழகான இளைஞன் இருந்தான். ஆங்கிலேயனா அல்லது வேறு நாட்டவனா என்று அறியமுடியாத முகத்தோற்றம் அவனுக்கு. இதுவரையில் யாருக்காகவோ காத்துநின்ற அந்தவெள்ளைக்காரி அவனைக்கண்டதும் கார்கதவை திறந்து ஏதோ கேட்டாள்; அவனும் ஏதோ கேட்டான். அவள் சொன்னாள், அவன் மீண்டும் ஏதோ கேட்டான். அவள் இல்லை என்பது போல் தலைஅசைத்தாள்.

அவன் மீண்டும் ஏதோ சொன்னான்.

இவள் சரி என்பதுபோல் தோளைக் குலுக்கிக்கொண்டு காருக்குள் புகுந்து முன் சீற்றில் அமர்ந்தாள்.

அவன் அவளை உற்றுப்பார்த்தான்.

அவள் அவனின் தோளில் கை போட்டு அணைத்து உதட்டில் முத்தமிட்டாள்.

ஒருகாலத்தில் இப்படியொரு முத்தக்காட்சி இடம்பெற்ற ஓர் ஆங்கிலப்படத்தை பார்க்க அப்பாவுக்குதெரியாமல் நண்பர்களுடன் இரண்டாம் காட்சிசினிமாவுக்குப்போனது வரதனுக்கு நினைவு தந்தது.

இப்போது அவனுக்கு பார்த்துபார்த்து அலுத்துவிட்ட விசயம் இது. *சீ.* என்ன மனிதர் என்ன நாகரீகம்! உயர்ந்த கட்டிடங்களும், நிறைந்தவாகனங்களும் நல்ல விஞ்ஞான வசதியும் இருந்தால்மட்டும்போதுமா, நான்கு சுவர்களுக்குள் செய்யவேண்டிய உடலுறவை நடுச்சந்தியில் செய்யக்கூடாது என்று மட்டும் இவர்களுக்குத் தெரியமாட்டேன் என்கிறது. கேட்டால் இதுதான் எங்கள் நாகரீகம். நீங்கள் மூன்றாம் உலக நாடுகளில் இருந்து வந்தவர்கள் உங்களுக்கு எங்கள் நாகரீகம் தெரியாது என்பார்கள். எது இவர்கள் நாகரீகம்? பெற்ற பிள்ளையைச் சங்கிலியில் கட்டி நடக்கவிட்டுவிட்டு வளர்ப்பு நாயை தூக்கி அணைத்துக்கொண்டுபோவதா உங்கள் நாகரிகம்? வரதன் தனக்குள்ளேயே கேட்டுக்கொண்டான். அவளோடு அந்த காரும் போய்விட்டது.

மீண்டும் ஆனந்தவிகடனை விரித்தான். நேரத்தை பார்த்தான். மூன்றுமணியை காட்டியது கடிகாரம். இன்னும் நான்குமணி நேரம் இருக்கின்றது. இந்தநேரத்துக்குள் என்ன நடக்கவிருக்கோ. யார் வந்து பெற்றோல் போட்டுவிட்டு பணம்தராமல் ஓடுவார்களோ. எந்தகறுப்பன்வந்து கத்தியை நீட்டி காசுகேட்பானோ. எந்த இனவெறிபிடித்த வெள்ளையன் வந்த துவேசம் பேசி முகத்தில் துப்புவானோ? சிந்தித்துக் கொண்டே புத்தகம் படித்துகொண்டிருந்தபோது, யாரோகண்ணாடியில் தட்டியதும் திடுக்கிட்டு விழித்து நிமிர்ந்து பார்த்தபோது, சற்று முன் காரில் ஏறிச்சென்ற அவள் அவனைப் பார்த்துச் சிரித்துக்கொண்டு நின்றாள். அதேகாருக்குள் அதே இளைஞன் இவளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

என்னவேண்டும் என்பதுபோல் அவளைப் பார்த்தான் வரதன்.

சில்லறைவேண்டும் என்றுகொண்டு ஓர் புது ஐம்பது பவுன்நோட்டை கொடுத்தாள் அவள்.

பணத்தை வாங்கியவன் இருபுறமும் மாற்றி மாற்றி பார்த்தான். "என்ன பார்க்கிறாய் கள்ளநோட்டுஎன்றா. பயப்படாதே நான் அப்படிப்பட்டவள் அல்ல. நான் உடம்மை விற்பவளே தவிர ஏமாற்றுப் பேர்வழி அல்ல." அவளின் அழகான ஆங்கிலத்தை தன் மனதுக்குள் தமிழில் மொழிபெயர்த்து பார்த்த வரதனுக்கு அது ஓர் பெரிய தத்துவமாகத் தெரிந்தது.

இரண்டு இருபது நோட்டுகளையும் ஒரு பத்து பவுன்நோட்டையும் அவளிடம் கொடுத்துவிட்டு, அதை தான் பார்த்ததுபோல் அவளும் பார்ப்பாள் என எதிர்பார்த்தான் வரதன்.

"என்ன பார்க்கிறாய் உன்னைப்போல் நம்பிக்கையில்லாம்ல் நானும் பார்ப்பேனென்றா? பயப்படாதே. நான் மனிதர்களை நம்புபவள்." அவள் சிரித்துவிட்டு சென்று காருக்குள் இருக்கும் இளைஞனிடம் நோட்டுகளை கொடுக்க, அவன் அதில் இரண்டு நோட்டுகளை அவளிடம் கொடுத்துவிட்டு போய்விட்டான். அவளும் போய்விட்டாள். அவள் போய் பதினைந்து நிமிடமாகியும் அவளையும் ராணியையும் மாறிமாறி வரதனின் மனம் நினைத்துக்கொண்டது.

மீண்டும் கண்ணாடியை தட்டும் சத்தம். நிமிர்ந்தான். அவளேதான் நின்று கொண்டிருந்தாள். கையில் மூன்று வ்யது மதிக்கத்தக்க குழந்தையொன்று பாதிநித்திரையில் தாயின்தோளில் தூங்கி விழுந்துகொண்டிருந்தது. அந்தக் குழந்தை குளிரில் நடுங்குவதைப் பார்க்க பரிதாபமாய் இருந்தது.

"குழந்தைக்கு கொஞ்சம் சாப்பாட்டுச்சாமான்கள் வாங்கவேண்டும் என்னையும் குழந்தையையும் உள்ளே விடமுடியுமா?" அவள் கெஞ்சும் குரலில் தயவாக கேட்டதும் வரதன் மறுப்பேதும் சொல்லாமல் கதவைத்திறந்து உள்ளேவிட்டான்.

"இந்த நேரத்தில் கதவு திறக்க எனக்கு அனுமதியில்லை. உனக்காக மட்டும்தான் திறந்தேன்" வரதன் சொல்ல அவள் நன்றி சொன்னாள்.

குழந்தை ஓடிஓடி தனக்கு விரும்பிய சொக்லேட்டுகளை எடுத்து தன் நெஞ்சோடு அணைத்துக்கொண்டது.

அவள் குழந்தைக்குரிய சாப்பாட்டு சாமான்களையும் பால்மாவையும் எடுத்துக்கொண்டாள்.

"போதுமா இன்னும் ஏதாவது வேண்டுமா?" என்று தனித்து குழந்தையிடம் கேட்டாள் அவள்.

"போதும் மம்மி" என்று கொண்டு தாயின் கன்னங்களை மாறி கொஞ்சிவிட்டு, "தாங்ஸ் மம்மி" என்றது அந்தக்குழந்தை. "இரவு முழுவதும் ஒன்றும் சாப்பிடவில்லை என் குழந்தை." அவளுக்கு நல்லபசி. அவள் வரதனிடம் சொன்னதும் அவனின் மனதில் ஏதோ தைத்ததுபோல் இருந்தது.

"ஏன்?" என்றான் அவன்.

"நீ கண்டாய்தானே. எவ்வளவு நேர காத்திருப்புக்குபின் ஒரு கஸ்டமஸ் கிடைத்தானென்று. என்னசெய்வது என்தொழில் அது. அதுவரையில் பசிபொறுக்கவேண்டியது இதன் கடமை" அவள் சொல்ல அவனுக்கு என்னவோபோல் ஆகியது.

'சற்றுமுன் கட்டைசட்டையுடன் ஆபாசமாக யாருக்காகவோகாத்து நின்றதும் அந்த இளைஞனைக் கண்டதும் காதலனைப்போல, கணவனைப்போல கட்டிப்பிடித்துஅவனோடு கொஞ்சிக்குலாவியதும் அவள் பெற்ற இந்த பிஞ்சுக்குழந்தைக்காகத்தானா?' வரதன் தன்னைத்தானே கேட்டுக்கொண்டான்.

குழந்தை மீண்டும் மீண்டும் தாயைக் கொஞ்சியது. "தாங்ஸ் மம்மி. தாங்யு மம்மி" என்றதும் அவளின் கண்கள் கலங்கியது. வரதன் அவளைப்பார்த்தான். முதன்முதலாக ஓர் பரிதாப உணர்வு ஏற்பட்டது அவனுக்கு. ராணியையும் நினைத்துக்கொண்டான். முதன்முதலாக அவன் ராணியில் கோபப்பட்டான். அவன் ராணியில் மட்டுமல்ல அவளைவாழவிடாமல் செய்த அந்த சமுதாயத்தின்மீதும்....

"சாமான்களுக்கு நான் எவ்வளவு தரவேண்டும்?" அவள் அவனின் சிந்தனையைக் கலைத்தாள்.

சகஜ நிலைக்கு வந்தவனாக தன்னைச் சமாளித்துக்கொண்டு விலையைச் சொன்னான்.

அவள் அவனிடம் ஓர் இருபது பவுன் நோட்டை நீட்டினாள். இதுகள்ள நோட்டா என்று நீ பார்க்கவேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் இது நீ தந்த நோட்டுத்தான். அவனிடம் நோட்டை நீட்டும்போதே அவள் சொன்ன அந்த வார்த்தை சாட்டையாக அவன் காதுகளில் விழுந்தது.

அவன் சிரித்துக்கொண்டே பணத்தை வாங்கிவிட்டு மீதிச் சில்லறையை அவளிடம் கொடுக்க நன்றிசொல்லிவிட்டு வெளியில் செல்ல அவன்கதவை மூடிவிட்டுவந்து மீண்டும் வந்து அவள் கொடுத்த அந்த நோட்டை திருப்பித் திருப்பிப் பார்த்தான். பார்த்தது கள்ளநோட்டாய் இருக்குமா என்றல்ல, மீண்டும் பார்த்தான்.

தொட்டுப்பார்த்தான். தடவிப்பார்த்தான். குறிப்பிட்ட ஒருசில மணிநேரங்களுக்குள் அந்த நோட்டு எத்தனை கரங்களில் கைமாறி இருக்கின்றது என்பதையும் இந்த ஒரு நோட்டினால் ஒவ்வொருவரும் பெற்ற பயனையும் நினைத்து மனதுக்குள் சிரித்துக்கொண்டான் வரதன்.

இந்த நோட்டுத்தானே ஒரு மனிதனின் மானம் மரியாதையை நிர்ணயிக்கும் அளவு கோலாகின்றது! ராணியைப் போன்றவர்களின் உயிரைப்போக்கி அவளின் விதியை மாற்றியதும் இந்த நோட்டுத்தானே. அவன் மீண்டும் அந்த நோட்டை பார்த்தான். அந்த நோட்டில் கடைசியாக கைபதித்த அந்த அவளின் முகம்தெரிந்தது. அதில் தாய்மையின் அடையாளம் தெரிந்தது. ராணியின் முகமும் கூடத்தான்.

ராணியும் அவளும் மாறிமாறி அவனின் நினைவில் வந்து போனார்கள், அவளின் மேல் அவனுக்கு அனுதாபம் ஏற்பட்டது. தன்பிள்ளைகளை அனாதையாக்கிவிட்டுச் சென்ற ராணியின் மீது பாசமும் பரிதாபமும் கலந்த சிறுகோபமும் ஏற்பட்டது.

# விடியலைநோக்கி

அம்மன்கோயில் வாசலில் குவிந்திருந்த கடற்கரை பெருமணல் மேட்டில் தலைவைத்து மல்லாந்து படுத்திருந்த அகிலனின் முகத்தில் வந்து விழுந்த இலுப்பை பூவை எடுத்து முகர்ந்து பார்த்தான் அவன். இலுப்பை மரக்கிளைகளுக்குள் சிறகடித்து சத்தம் எழுப்பிக்கொண்டிருந்த வௌவால்களின் எச்சங்கள் நிலத்தில் விழுந்து கொண்டிருந்தது. உச்சிவானில் மிதந்து கொண்டிருக்கும் நிலவையும் மேகத்துக்குள் ஒளிந்து கண்சிமிட்டும் நட்சத்திரத்தையும் ரசிக்கும் நிலையில் அகிலனின் மனநிலை இல்லை. பக்கத்தில் படுத்திருக்கும் நண்பன் தியாகு நித்திரையா இல்லையா என்று அறியமுடியாத மௌனம்.

அவர்களுக்கு இரண்டடி நான் கடிக்குஅப்பால் மூன்று நான்கு பேர்களாக கூடி மணலில் படுத்திருந்து, தங்கள் அந்தரங்கங்கங்களை பேசிக்கொண்டிருக்கும் இளைஞர்களின் பேச்சொலி அகிலனின் காதுகளில் கேட்கின்றது.

அந்த அம்மன்கோயில் வாசல் இரவு நேரத்தில் இளைஞர்களின் அந்தரங்க மகாநாட்டு மைதானமாவது மனதுக்கு சந்தோசம் தரும் காட்சிதான். ஆனால் அகிலனை பொருத்தவரை இந்த இரவு இரண்டுவருட நீண்டகால இடைவெளிக்குப் பிறகு கிடைத்த முதல் இரவ. அவனால் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு, இதே கோயில் மணலில் படுக்கும்போது தன் மனதில் ஏற்பட்ட சிலிர்ப்பும் கிளர்ச்சியும் இன்று ஏற்படாததை நினைத்து அவன் ஆச்சரியப்படவில்லை. அதற்குக் கரணம் கடந்த இரண்டு வருடமும் அதற்குபிந்திய இந்த இரண்டொரு வாரங்களும் தந்த அனுபவப் பாடமும்தான்.

நேரம் இரண்டு மணி ஆகியிருக்கும். நாகம்மா கிழவி பாலப்பம் சுடுகின்ற வாசனை காற்றில் மிதந்துவந்து மூக்கை துளைக்கின்றது.

"என்ன எதுவுமே பேசாமல் படுக்கிறாய்?" தன்கையில் பதிந்திருந்த பெருமணல்களை தட்டிவிட்டுக்கொண்டே கேட்டான் தியாகு.

இரண்டு வருடங்களுக்கு பின்பு மூன்று வாரங்களுக்கு முன்பு இந்த ஊருக்கு வந்தபோது எதையும் மறக்காமல் தன் பழைய நினைவுகளோடு வழமைபோல் பழகிய ஒரே ஒருத்தன் இந்த தியாகு ஒருத்தன்தான்.

"என்ன? ஏன் எதுவுமே பேசாமல் இருக்கிறாய்?" மீண்டும் கேட்டான். "ஏனோ தெரியயில்ல. ஏன்தான் இந்த ஊருக்கு திரும்பவும் வந்தேன் என்பதுபோல் இருக்கு." அகிலன் மெதுவாகச் சொன்னான்.

"ஏன் மறியல் சாப்பாடு அவ்வளவு ருசியோ?"

"பார்த்தாயா? நீ கூட நக்கலாகத்தான் கேட்கிறாய். ஒருவகையில அந்த வாழ்க்கை கூட நல்லதுதான் போல தெரியுது. இரண்டு வருடமாக ஒன்றாக வாழ்ந்த பலபகுதி பெடியன்களும் எவ்வளவு ஒற்றுமையாக இருந்தோம். இப்ப எல்லாரும் ஒவ்வொரு பகுதிக்கு போயிற்றம் இனிமேல் அவர்களையெல்லாம் காணமுடியுமோ என்னமோ?"

"அதுக்காக ஜெயிலுக்குள்ளேயே இருந்திருக்கலாம் என்று நினைக்கிறது எவ்வளவு பேய்த்தனம்."

"இங்க வந்துதான் என்னத்த கண்டன்? ஊரே புதினமாய் படுகுது. உறவுகளே அன்னியமாகத் தெரியுது. சிலரின் நக்கல் பேச்சும் கேலிப்பார்வையையும் சகிக்கமுடியாமல் இருக்கின்றது. நான்

விடுதலை வீரனோ போராட்ட தியாகியோ இல்லைதான்; அதற்காக சிறைசென்று வந்தவர்களையெல்லாம் தரம் குறைத்து பார்க்கவேண்டுமா?" அகிலன் கண்கள் கலங்கியிருப்பதை தியாகுவால் இருட்டில் பார்க்கமுடியவில்லை.

"சும்மா நீயே நினைத்து நீயே கதைத்துக் கொண்டால் அதற்கு மற்றவர்கள் என்ன செய்யமுடியும்?"

"அப்படி என்று நீ நினைக்கின்றாய். என்னுடைய மனம் அழுவதை யார் அறிவார். இரண்டுவருடத்தை உள்ளே கழித்துவிட்டு வெளியேவந்தால் வருமானத்துக்கு என்ன செய்வேன். இருபத்தேழுவயது ஆண்மகன் யாரிடம் கையேந்த முடியும்? படித்தபடிப்புக்குரிய வேலையில்லை வெற்றிடவேலைக்குரிய படிப்பு என்னிடம் இல்லை. இதையெல்லாம் விட்டுவிட்டு கூலிவேலை செய்யப்போக குடும்ப கௌரவம் விடுகுதில்லை."

"இதையெல்லாம் பற்றி கவலைப்படாத. கொஞ்சநாள் போகசரியாய் போயிடும். நீ உள்ளுக்குள்ள இருக்கும்போதே வாத்தியார் வேலை விண்ணப்பத்துக்கு உன்பெயரையும் எழுதி போட்டிருக்கிறன். ரீச்சிங் எக்சாமில நீ பாஸ்பண்ணுவாய். அதுக்குப் பிறகு கொழும்புக்கு போய் ரங்க நாயகி எம்பிய புடிச்சி எப்பிடியும் சிபாரிசு செய்யச் சொல்லலாம்."

"இங்க பெடியன்களுக்கு ஆதரவாக இருந்துபோட்டு அங்க போய் ஆளும்கட்சி எம்பிக்கிட்ட சிபாரிசு செய்யச்சொல்லி கேட்க வெட்கம் இல்லையே."

"எல்லாரும் அவனவன் எல்லா விசயத்திலையும் எப்படி முந்திக்கொள்ளலாம் என்று பார்க்கிறான்கள். நீ நீதி நியாயத்தை நிறுத்து பார்க்கிறதிலேயே இரு."

தியாகுவின் பேச்சுக்கு அகிலன் எதுவும் பேசவில்லை. தூரத்து மணல்மேட்டு பெடியன்களிடம் இருந்து யாரோ பெட்டையைபற்றி பேசிய சிரிப்பொலிகேட்கின்றது.

"அதுசரி நீ வந்ததுக்கு இன்னும் உன்ரையாள் ராணியப்போய் பார்க்கயில்லையோ?"

"தியாகு இப்படியொரு கேள்வியகேட்டானென்று நினைக்கவேயில்லை." அகிலன் எதுவுமே சொல்லாமல் மௌனமாக இருந்தான். எதைச் சொல்வது?

ஒருகாலத்தில் தன்னைக் காதலிப்பதாகச் சொன்னவள். தான் அவள வீட்டுப்பக்கம் போகும் போதெல்லாம், 'நீதானே புன்னகை மன்னன் உன்ராணிநானே' என்றபாடலை அவனுக்கு கேட்கக்கூடியளவுக்கு உரக்கபாடவிடுபவள், தான் பிடிபட்டதும் அழுது புலம்பி ஒப்பாரி வைத்து கிழமைக்கு இரண்டு கடிதங்கள் போட்டவள் இரண்டு வருடகடைசிக்கு மூன்று மாதங்களுக்கு கடிதம் எழுதுவதையே நிறுத்திக்கொண்டவள். தான் விடுதலையாகி வந்ததும், தனக்கும் ஒரு பொலிஸ்காரபையனுக்கும் காதல் என்று தங்கள் காதலுக்கு வீட்டில் சம்மதம் என்றும் விரைவில் திருமணம் அதனால் தன் வாழ்க்கையில் இனிமேல் குறுக்கிடவேண்டாம் என்றும் ஓர் கிழவியிடம் அவள் கொடுத்தனுப்பிய கடிதத்தைப்பற்றி தியாகுவிடம் அவன் என்னவென்று சொல்லுவான்.

"என்ன நான் கேட்டது கேட்டைகயில்ல போல. அதுசரி நேற்றுபகல் வீட்ட சாப்பிடவரச்சொன்னன் நீவரயில்லை என்ன விசயம்?"

"சிறையில் இருந்து வந்தஉடனே ஒருநாள் சாப்பாடு தந்தாய். அதை விருந்தென்று நினைச்சன். அதையே நான் தொடர்ந்து எதிர்பார்த்தால் மடத்தில் இடம்பிடிப்பது போல் ஆகிவிடாதா?"

"உள்ளுக்குள்ள நல்ல வேதாந்த தத்துவ புத்தகமும் படித்திருக்கின்றாய் போல அதுசரி இப்ப எங்க சாப்பாடு?"

"மூத்தக்கா சாப்பிட கூப்பிட்டபோது இளையக்காவீட்டில் சாப்பிட்டுவிட்டேன் என்றும் இளையக்கா சாப்பிடக்கூப்பிட்டபோது மூத்தக்கா வீட்டில் சாப்பிட்டுவிட்டேன் என்றும் பொய் சொல்லிவிட்டு இன்றைய பொழுதில் தன் வியிறை வெறுமையாக்கி விட்டு மணல்மேட்டில் படுக்கின்றேன்" என்று தியாகுவிடம் சொல்ல அவனின் தன்மானம் இடம் கொடுக்கவில்லை. மௌனமாகவே இருந்தான்.

"உனக்கென்ன நீ கடைசி பிள்ளை. அம்மா இல்லாவிட்டாலும் அக்காமார் இருக்கின்றார்கள். ஒரு இடம் இல்லையென்றால் இன்னோர் இடம்." தியாகு உண்மை தெரிந்து அவனைத் தேற்றுவதற்காகத்தான் சொல்லுகின்றானா அல்லது நக்கலாகச் சொல்லுகின்றானா என்பதைப் புரிந்து கொள்ளமுடியாமல் இருந்தது அகிலனுக்கு. மற்றைய இளைஞர் கூட்டத்தில் இருந்து ஓரிருவராக எழும்பி உடம்பில் ஒட்டியிருந்த மண்ணைத் தட்டிவிட்டு வீட்டுக்குப்போகத் தொடங்கினார்கள்.

யாரோ இருவர் இருட்டில் நடந்து வந்து அவர்களுக்கு சற்றுதூரத்தில் படுத்திருக்கும் இருவரிடத்தில் மெதுவாக பேசுவது இரவின் அமைதியில் துல்லியமாக அகிலனின் காதுகளில் விழுகின்றது.

"ஆஸ்பத்திரிக்கு புதிதாக மருந்துகள் வந்திருக்காம். நாளைக்கு காலை வந்து காச தந்துபோட்டு தேவையானத கொண்டுபோகட்டாம் என்று டொக்டர் சொல்லிவிட்டிருக்கார்."

வந்தவர்களின் அந்த பேச்சுக்கு படுத்திருந்தவர்கள் எதுவும் சொல்லாமல் எழும்பி வந்தவர்களோடு சென்று விட்டார்கள்.

"கேட்டாயா ஏழைகளுக்கு உதவவேண்டிய இலவச மருந்துகள் எப்படிவிலையாகுதெண்டு! இதற்கெல்லாம் என்னடா காரணம்?" அகிலனின் குரலில் ஆத்திரம் தெரிந்தது.

"என்னகாரணம். நிலையான நிர்வாகம் இல்ல தட்டிக்கேட்க ஆளில்ல. நாட்டு கலவரத்துக்குள்ள நடக்குறது எதுவும் வெளியில தெரியாதெண்ட நினைப்பில நம்மளில சிலர் காசு உழைக்கிறாங்கள்." தியாகு சொன்னான்.

"அதுதான் சொல்லுறன் இந்த ஊர விட்டே போகவேணும். எங்காவது கண்காணாத தேசத்துக்கு போகவேணும்" எதையுமே பார்த்துக்கொண்டு சகித்துக்கொண்டு இருக்கமுடியாது.

"எங்கபோகப் போகிறாய்? வெளிநாட்டுக்கா. அதுக்கு லட்சக்கணக்கில உன்னிட்ட காசிருக்கா? அதுக்கெல்லாம் அந்தந்த மண்ணில் பிறந்திருக்கவேணும். உண்ட அண்ணன் சவூதியில இருந்து வந்திருக்கானே என்னசொன்னான்?"

"அண்ணன் என்னத்த சொல்லுறது. தான் வெளிநாட்டுக்கு போன ஆரம்பத்தல என்னையும் எங்காவது அரபு நாட்டுக்குபோகும்படி பதினையாயிரம் ரூபா காசு அனுப்பினான். என்னை எப்படியும் வெளிநாட்டுக்கு அனுப்புங்கள் என்று அந்த பணத்தை நான் கொழும்பில் உள்ள கனகராஜா அத்தானிடம் கொடுத்ததும் அவர் என்னை வெளிநாட்டுக்கு அனுப்பாமல் ஏமாற்றியதும் இதுவரையில் அந்த காசைக் கூட தராமல் ஏமாற்றியதும், அவனுக்கு என்னில் பெரிய கோபம். ஏன் அவரிடம் காசைக் கொடுத்து ஏமாந்தாய் என்று வந்ததும் வராததுமாய் என்னில் ஏறிப்பாய்ந்தான். ஜெயிலில் இருந்து வந்தவன் என்ற அனுதாபம் கூடஇல்லாமல். அவனோடு சேர்ந்து எல்லோரும் என்னை பேசினார்கள்."

இப்படியெல்லாம் தியாகுவிடம் சொல்ல நினைத்தவன் எதுவும் சொல்லாமல் மௌனமாகவே இருந்தான்.

"அகதிகளுக்கு கொடுக்கிறதுக் கெண்டு கூப்பன் கடைக்கு வந்த அரிசியும் மாவும் இரவோடு இரவாக சந்தைக்குப் போய்

காசாகிவிட்டதாம் அது தெரியுமோ உனக்கு.'' அகிலன் பேச்சைமாற்றிக் கேட்டான்.

அகிலனின் பேச்சைக்கேட்ட தியாகு எழும்பி இருந்து தன் உடம்பில் ஒட்டியிருந்த மண்ணை தட்டிவிட்டுக்கொண்டிருந்தான். ''இப்ப என்ன செய்யப்போகிறாய் அதுக்கு? சனங்களை கூட்டி கூட்டம் போட்டு நியாயம் கேட்கப்போகிறாயா, இல்ல இரவோடு இரவாக அநியாயத்தை எதிர்த்து கொட்டை எழுத்தில் சுவரில் போஸ்டர் ஒட்டப்போகிறாயா. அதெல்லாம் ஒருகாலம். இப்ப இந்த ரெண்டு வருசத்திலயும் ஊர் றொம்ப மாறிப்போய்ச்சு அகிலன். இவைகளை தட்டிக்கேட்டால் நீதான் துரோகி உனக்குத்தான் தண்டனை.'' தியாகு அறிவுரை போலவே சொல்லிமுடித்தான்.

''அதுக்குத்தான் இந்த ஊரைவிட்டே போகலாம் எண்டிருக்கிறன்.''

''எங்கபோகப்போகிறாய். இங்க இருந்து பதினைந்து மைல் தள்ளி இருக்கிற கல்முனைக்கு போய்வரவே உனக்கு பாதுகாப்பில்ல, இதுக்குள்ள ஊரைவிட்டு போகப்போகிறாயா. பேசாமல் இங்கேயே இருந்து ஏதாவது செய்யப்பார்.''

''இங்கேயே இருந்து என்ன செய்யுறது? வாழ்க்கைய தொடங்கிறதா இல்ல முடிக்கிறதா? ரெண்டுக்கும் நடுவில ரெண்டுவருசம் எல்லாத்தையும் தொலைத்துவிட்டு வந்து நிற்கிறேனே. எங்க தொடங்கி எங்க முடிக்க யாரிட்ட போய் ஓர் உதவிகேட்க. யார் இருக்கிறா உதவிகேட்க அல்லது இதைச் செய் இதைச்செய்யாதே என்று புத்திசொல்ல யார் இருக்கிறா?''

''நீ என்னதான் முடிவோட இருக்கிறாய். நூறுகோழிகுஞ்சுகள் வாங்கிவளர்க்கிறாய் அதுவே உன்னோட எதிர்கால வாழ்க்கைக்கு வழிகாட்டிவிடுமா. ஏதாவது பெரிதாக செய்யும் நோக்கம் இல்லையா?''

"பெரிதாக செய்ய பெரிதாக கையில் என்ன இருக்கு? பொழுதுபோக்குக்காக கோழி வளர்க்கிறன். அதையும் கூட நக்கலாக கேட்காதே."

தியாகு எதுவும் பேசவில்லை. எழும்பி தன் உடம்பில் இருந்த மண்ணைத் தட்டிவிட்டுச் சொன்னான்.

"சரி, வா போவம். வீட்டபோய் எதையும்பற்றி யோசியாமல் படு."

கீழ்வானம் மெல்ல வெளுக்கத்தொடங்கியது. காலை பூஜைக்கான ஆயுத்தங்களுக்காக ஆலய கிணற்றில் ஐயர் குளிக்கும் சத்தம் கேட்கின்றது.

கோயில் வாசலைவிட்டு வெளியில் வந்த தியாகு அவனின் வீட்டுக்குபோக ஒரு நெருக்கொழுங்கையினுள் இறங்கி நடந்துமறைந்துவிட அகிலன் தன் கால் போன போக்கில் நடந்துவந்து மூத்தக்காவின் வாசல் கதவை தொட்டுப்பார்த்தான் பெரியதொரு பூட்டு சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்தது. கம்பி வேலிக்குள்ளால் உடம்பை நுளைத்து உள்ளே போக நினைத்தவன் அதை தவிர்த்துவிட்டு ரோட்டுபக்கம் வந்து முச்சந்தி நறுவிழி மரத்தின் கீழ் உள்ள சுவரில் இருந்தான். அவனின் பின்னால் ஓடிவந்த அக்காவீட்டு நாய் ஜிம்மி அவனின் முகத்துக்கு நேரே பாய்ந்து அவனின் தோள்களில் தன் இரண்டு கால்களையும் பதித்துக்கொண்டு அணுகி அழுவது போல் குரல் எழுப்பிக்கொண்டு, அவனைத் தன் நாவினால் நக்கிக் கொண்டிருந்த ஜிம்மியை அகிலன் தடவிட்டபோது அவனின் கண்களில் இருந்து கண்ணீர் வடிந்தது.

பெருமாள்மாமா தன்கடையின் ஒற்றை பலகையொன்றை திறந்துவிட்டு கடைவாசலுக்கு நீர் தெளித்தார். தார்ரோட்டில் கட கட என்ற சத்தம் எழும்பிக்கொண்டு மாட்டுவண்டிகள் வயல்களுக்குச் சென்று கொண்டிருந்தது. காலைப் பூசைக்கான முதல் மணிஓசை ஆலயத்தில் இருந்து ஒலித்தது. அந்தக் கிராமத்தின் விடியலுக்கான அலாரம்கள் ஒவ்வொன்றாக ஒலிக்க, நிலம் வெளுத்துக்

கொண்டிருந்தது. அகிலன் நறுவிழி மரத்தின் கீழ் உள்ள சுவரில் சாய்ந்து கொண்டிருந்தான், அவனின் எதிர்கால வாழ்வின் விடியலை நோக்கி.

அன்றைய பகல்பொழுதை அக்கா வீட்டு வாசல் மாமரத்தின் கீழும் தன் கோழிக்குஞ்சுகளுடனும் கழித்தான். பொழுது மறைந்ததும் மீண்டும் கோயில் மணலுக்கே வந்து தலையில் கைவைத்து மணலில் சரிந்து மல்லாக்க படுத்து வானத்து நட்சத்திரங்களை எண்ணிக்கொண்டிருந்தான் அகிலன். தியாகு இன்னும் வரவில்லை. வேறு எவரும் கூட இன்னும் வரவில்லை.

"பழையபடி நீ கவிதை கதைகள் எழுதலாமே! உன் சந்தோசத்துக்காக முன்புபோல நல்ல சிரிப்புநாடகங்கள் எழுதி நடிக்கலாமே! உனக்குதானே எழுத்திலும் நடிப்பிலும் நல்ல திறமையும் ஆர்வமும் இருக்கு." நேற்றிரவு தியாகு சொன்னது நினைவுக்கு வந்தது.

'எதை எழுதுவது? நாட்டுநடப்பை எழுதி நாடகம் நடித்தால் நடுஊர் கம்பத்திலல்லவா தொங்கவேண்டும். ஒருகாலத்தில் இந்த இடத்தில்தானே நான் நடித்த நாடகத்தை பல்லாயிரக்கணக்கான மக்கள் பார்த்து ரசித்து சிரித்தார்கள். இப்போது நான் நாடகம் போட்டால் பார்த்து ரசிக்கும் மனநிலையிலா இந்த ஊரும் மக்களும் இருக்கிறார்கள். நாளை விடிந்தால் எந்த வீடு ஒப்பாரிக்கு ஒப்பினை பார்க்குமோ என்று தெரியாத நிரந்தரமற்ற பயங்கர வாழ்வு வாழும் நிலையில் நாடகமா இப்போது தேவையான விசயம்?' அகிலன் மனதுக்குள் நினைத்து சிரித்துக்கொண்டு கண்களை மூடிக்கொண்டான்.

இலுப்பைமரத்து கிளைகளில் சிறகடித்தவெளவால்கள் சடசடத்து சத்தம் எழுப்பின. மரத்தில் இருந்து விழந்த இலுப்பை பூக்களின் தேன் அவன் உதட்டில் பட்டு நாவில் இனித்தன. தனக்கு

பக்கத்தில் யாரோ வந்து நிற்பதாய் உணர்ந்தவன் கண்விழித்துப் பார்த்தான்.

தன் நெஞ்சை நோக்கி நான்கு துப்பாக்கிகள் நீண்டிருந்தது. அகிலன் அசையால் உற்றுப்பார்த்தான். கோயில் கோபுர மின்சார வெளிச்சத்தில் அவர்களின் முகம் நன்றாகத் தெரிந்தது. நான்கு உள்ளூர் இளைஞர்களுடன் இரண்டு இந்திய சீக்கிய ராணுவத்தினரும் அவனை முறைத்துப்பார்த்துக் கொண்டிருந்தனர்.

"அவசரமாக நீ இப்ப எங்களோட வரவேணும்."

உள்ளூர் இளைஞன் கட்டளையிட்டான். அகிலன் எழும்பி அவர்கள் நடுவில் அவர்கள் போகும் பாதையில் நடந்து கொண்டிருந்தான். ஊருக்கு ஒதுக்குப்புறமான ஒரு கல்வீட்டுக்குள் கொண்டு சென்றார்கள். வீட்டின் உள்அமைப்பை பார்க்க பயமாக இருந்தது அகிலனுக்கு.

"நீ நல்லா கதை கவிதையெல்லாம் எழுதுவியாமே?...."

"உன்ர கையெழுத்தும் நல்ல அழகாய் இருக்குமாமே?...."

"நாங்க சொல்லுறத நீ இப்ப இந்த மட்டையில நல்ல அழகாய் பெரிசாய் எழுதவேணும். டேய் கொண்டுவாடா அத...."

சொன்னவனின் கட்டளைக்குப் பயந்தவன்போல் ஓடிப்போய் ஒருவன் ஒரு மட்டையையும் தடித்த சிவப்பு மை பேனாவையும் எடுத்துவந்தான்.

"இவன் ஒரு இனத்துரோகி! எங்கள் தோழர்களின் அநியாயச் சாவுகளுக்கு நாங்கள் செலுத்தும் அஞ்சலிதான் இவனுக்கான மரணதண்டனை."

அவர்கள் சொல்லச் சொல்ல அழகாக எழுதி முடித்தான் அகிலன்.

"சரி நீ போகலாம். நடந்ததுகள வெளியில சொன்னால் என்ன நடக்கும் என்பது உனக்கு தெரியம்தானே!"

அகிலன் தலையசைத்துவிட்டு வெளியில் வந்து நடந்து கோயில் மணலை அடைந்தபோது தியாகு அவனுக்காகக் காத்திருந்தான்.

"எங்கபோனனீ இவ்வளவு நேரமும்?" தியாகுகேட்டான். அவனின் கேள்விக்கு அகிலன் எந்தவித பதிலும் கூறாமல் தலையில் கைவைத்து வானத்தை பார்த்து படுத்துக்கொண்டிருந்தான். தியாகு மீண்டும் மீண்டும் பல கேள்விகள் கேட்டான். அகிலன் பதில் கூறாமல் படுத்திருந்தான். இருவருக்கிடையிலும் நீண்ட மௌனம்.

யாராக இருக்கும்? ஊர் நடுவில் உள்ள மின்சாரக் கம்பத்தில் நாளைவிடிந்ததும் தொங்கப்போகின்ற ஊரே கூடிநின்று புதினம் பார்க்கபோகின்ற அந்த இளைஞன் யாராக இருக்கும். தொங்குகின்ற உடலுக்கு அருகில் நான் எழுதிய வாசகங்கள் அவனின் சாவுக்கு காரணம் சொல்லப்போகின்றதா? என் தாயைப் போன்ற ஓர் ஏழைத்தாய் பெற்றெடுத்த அப்பாவி இளைஞனின் சாவுக்கு சாட்சியாகப்போவது என் கையெழுத்துக்களா? அந்த சகோதரனின் சாவில் ஒருவகையில் நானும்பங்காளியா? இல்லையே, நான் கூலிக்குக்கூட செய்யவில்லையே! கொடுமைக்காரர்கள் கையில் உள்ள ஆயுதம் அல்லவா என்னை செய்யசொன்னது இதில் நானும் பங்காளியென்று என்னை நானே பங்குபடுத்திக் கொள்வதில் என்ன நியாயம் இருக்கின்றது. தனக்குத்தானே தீர்ப்பு சொல்லிவிட்டு கண்ணயர்ந்த அகிலனின் சிந்தனையை திடீர் என கேட்ட டூம்... என்ற வேட்டுச்சத்தம் தட்டிஎழுப்பியது. பேய்க்கனவு கண்ட சிறுபிள்ளைபோல எழும்பி உட்கார்ந்தான் அகிலன்.

"யாரோ!" என்ற ஆச்சரியக் கேள்வியுடன் எழும்பி உடகார்ந்தான், தியாகு.

"தபால்கந்தோர் பக்கமிருந்துதான் சத்தம் வந்தது." தியாகு சொன்னான். அடிக்கடி அந்த இடத்து கம்பத்தில்தான் உடல்கள் தொங்கும். இதுவும் அந்த இடமாகத்தான் இருக்குமென்ற நம்பிக்கை அவனுக்கு.

அகிலன் எழுந்திருந்து முழங்காலில் முகம் புதைத்தான். யாராக இருக்கும். எந்தத்தாய் பெற்ற பிள்ளையாக இருக்கும். எப்படித்தாங்குவாள் அந்தத்தாய் இந்தக் கொடுமையை? ஏன் இந்தக் கொடுமை. இருண்டுவிட்ட இந்த சமுதாயத்துக்கு ஒரு விடிவே இல்லையா? இந்த இருட்டில் இருந்து தப்பிஓட எனக்கொரு வழியே கிடைக்காதா? அகிலன் மனதுக்குள் அழுதான்.

"என்னடா பேசாமல் இருக்கிறாய்?" தியாகுகேட்டான்.

"நான் போகவேண்டும். எங்காவது, இந்த ஊரைவிட்டு இந்த காட்சிகளை மறந்து எங்காவது ஓடிவிடவேண்டும். இல்லாவிடில் இன்னும் எத்தனையோ சாவுகளுக்கு என் கையால் இறுதிவாசகங்கள் எழுதவேண்டிவரும். அதற்குமுன் நான் ஓடிவிடவேண்டும், அதற்கொரு வழிசொல்லமாட்டாயா?" தியாகுவிடம் கேட்க நினைத்தவைகளை தனக்குள்ளேயே அடக்கிக்கொண்டான் அகிலன். அவனின் கண்களில் இருந்து வடிந்து கொண்டிருந்த கண்ணீரைக் கூட அவனால் அடையாளம் காணமுடியாமல் இருந்தது.

விடிந்தால் யார் என்று போய் பார்த்துவிடலாம். அன்றைய பொழுதின் விடியலை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தான் தியாகு. ஆனால் அகிலனோ, இருண்ட தன் வாழ்க்கைப் போராட்டத்தின் விடியலை நோக்கி சிந்தித்துக்கொண்டிருந்தான்.

## இந்நூலாசிரியரைப்பற்றி



ஈழத்தின் கிழக்கு மாகாண அக்கரைப்பற்று கோளாவில் கிராமத்தில் பிறந்த விமல் குழந்தைவேல் தனது சிறுவயது முதலே பலகலைகளை தன்னுள் உள்ளடக்கி கொண்டிருந்தவர். நாடகங்கள். கவிதைகள் போன்றவற்றில் மட்டுமே ஆரம்பகாலத்தில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டவர். சொந்த நாட்டைவிட்டுப், புலம்பெயர்ந்து லண்டனுக்கு வந்தபின்புதான் இவரின் எழுத்துக்கள் வெளிவரத்தொடங்கியது. லண்டன் சன்ரைஸ் வானொலியில் ஒலிபரப்பப்பட்ட இவரின் இசையும் கதையும் பலராலும் பாராட்டப்பெற்று, இவரின் பெயரை மேலும் கூறச்செய்துள்ளது.

ஜாதி வேற்றுமை, இனவேறுபாடு, பிரதேச வேறுபாடு போன்றவைகளுக்கு எதிரான கருத்துக்கொண்ட இவரின் பல சிறுகதைகள் இலங்கை, பாரிஸ், கனடா, லண்டன் போன்ற இடங்களிலிருந்து வெளிவரும் பத்திரிகைகளில் வெளிவந்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. வீரகேசரி, சொந்தாமரை, உதயன், தினகரன், ஈழநாடு, ஈழகேசரி போன்ற அஞ்சல் பத்திரிகைகளில் வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

மலர் பிரிண்டர்ஸ் 044-8224803